
தமிழரசு
ஜுன் 2006



## இந்த இதழில் . . .

திருவள்ளுவர் ஆண்டு 2037
வைகாசி – ஆனி
ஜூன் 2006
விலை ரூ.10/–

# தமிழரசு

மலர் : 37 இதழ் : 12

**திருக்குறள்**

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

வாக்கில் இனிமையும், பிறர்க்கு வழங்கிக் காத்திடும் தன்மையும் கொண்டவர்க்கு இவ்வையகமே வசப்படும்.

**– கலைஞர்**
திருக்குறள் உரையிலிருந்து...

மக்களின் ஆதரவோடு மகத்தான திட்டங்களை நிறைவேற்றுவோம்
– மாண்புமிகு முதலமைச்சர் **2**

நாம் இழந்த ஒரு பெருமையை மீட்டிருக்கின்றோம்
– முதலமைச்சர் மு. கருணாநிதி **9**

தமிழக அரசு திறன்மிக்க, அக்கறை கொண்ட நிருவாகத்தை மக்களுக்குத் தரும்
– மேதகு தமிழக ஆளுநர் **17**

வாக்குறுதி நிறைவேற்றும் வாய்மை!
– முதலமைச்சர் மு. கருணாநிதி **25**

கண்ணதாசன் கவிதை 71

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் 74

சிக்–குன்–குனியா காய்ச்சலை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் 76

ஆசிரியரும் வெளியிடுபவரும் :
சி. முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்பு
மற்றும்
அலுவலால் அரசு கூடுதல்
செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு
அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை – 600 002.
தொலைபேசி :
25368926/25364906
தொலைநகல் :
25364906
மின்அஞ்சல் :
tamilarasu2@hotmail.com
இணைய தளம் :
www.tn.gov.in

**அட்டைப்பட விளக்கம்**

**முதலாம் அட்டை : மேதகு இந்திய குடியரசுத்தலைவர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் (5.6.2006)**

**2ஆம் பக்கஅட்டை : மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் (5.6.2006)**

**3 மற்றும் 4ஆம் பக்க அட்டைகள் : காவிரி டெல்டா பகுதியில் தமிழக அரசின் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் பணிகள்**


# மக்களின் ஆதரவோடு மகத்தான திட்டங்களை நிறைவேற்றுவோம்

கிலோ அரிசி ரூபாய் 2க்கு வழங்கும் திட்டம் மற்றும்
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தை தொடங்கிவைத்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை (3.6.2006)

**ஆ**யிரம் விளக்குத் தொகுதியில் மிகப் பொருத்தமான இடத்தில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. குடியிருப்பில், மகிழ்ச்சிகரமான இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. இங்கு உண்மையிலேயே தமிழ்த் தென்றல் என்மீது வீசிக் கொண்டிருக்கிறது. ஒரு குளிர்ச்சியான நெஞ்சுக்கு இதமான ஒரு செயலை தொடங்குகின்ற ஆர்வம், மகிழ்ச்சி என்னை இன்றைக்கு புதியதோர் உலகத்திற்கு இட்டுச் செல்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அண்மையில் நடைபெற்று, நிறைவுற்ற தமிழகப் பொதுத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய மகத்தான வெற்றிக்குப் பிறகு, அதையொட்டி அமைந்த தமிழக அரசின் சார்பில் ஏற்கெனவே நாம் அறிவித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற அந்தப் பொறுப்புக்கு வந்துள்ளோம். அதை நிறைவேற்றத் தொடங்கியுள்ளோம்.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே, ஆட்சிப் பொறுப்பை ஏற்கக் கூடிய அளவிற்கு மக்கள் நம்மை ஆதரிக்கிறார்களா இல்லையா ? என்பது கேள்விக்குறியாக இருந்த அந்தக் காலக் கட்டத்திலேயே முரசொலியில் கட்டுரை எழுதினேன். வாக்கு என்பது இருவருக்கும்



பொதுவானது. வாக்கு அளிப்பவர்களுக்கும் பொதுவானது, அதைப் பெற்றவர்களுக்கும் பொதுவானது. இரண்டுபேருமே அதற்குப் பொறுப்பானவர்கள் என்று குறிப்பிட்டேன்.

### முதல் கையெழுத்து

வாக்களித்தவர்கள் நம்மை ஒரு இடத்திற்கு பொறுப்போடு அனுப்பி வைக்கிறார்கள். அந்த இடத்திற்குச் செல்கின்ற நாம், அளித்த வாக்கை நிறைவேற்றுகின்ற பொறுப்புக்கு உரியவர்களாக ஆகிறோம். ஆகவே, வாக்குரிமை என்பது அளிப்பது மாத்திரம் அல்ல, அதை நிறைவேற்றுவதும் கூட என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அப்படிக் குறிப்பிட்டதை வெறும் பதவுரையாக, பொழிப்புரையாக, அலங்கார உரையாக ஆக்காமல் அதை செயல்படுத்துகின்ற திட்டத்திலே இன்றைக்கு நாமெல்லாம், இங்கே குழுமியிருக்கின்றோம்.


குறிப்பாக, நம்முடைய தேர்தல் அறிக்கையில் மிக முக்கியமாக நாம் குறிப்பிட்ட மூன்று அறிவிப்புகளை, பதவிப் பொறுப்பேற்ற அதே நாளில், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மத்தியில் கையெழுத்திட்டு நிறைவேற்றி வைத்தோம். அதிலே, முதல் கையெழுத்து, அரிசி கிலோ 2 ரூபாய்க்கு வழங்கப்படும், அதற்கான ஆணை பிறப்பிக்கப்படுகிறது என்று மத்தியில் இருந்து வந்திருந்த அமைச்சர் பெருமக்கள், நம்முடைய தோழமைக் கட்சியினுடைய தலைவர்கள் அத்தனை பேருடைய முன்னிலையில் அந்தக் கையெழுத்தை இட்டு, அதனுடைய தொடக்கம் இன்றைக்கு.

அதேபோல, சத்துணவில் இனிமேல் சத்துணவு அருந்துகின்ற குழந்தைகளுக்கு வாரம் 2 முட்டைகள் வழங்கப்படும் என்று ஆணை. அதற்கான கையெழுத்தும் அந்த மேடையிலே இடப்பட்டது. இன்னொரு ஆணை தமிழ்நாட்டிலே உள்ள தரிசு நிலங்களை ஏறத்தாழ 20 இலட்சம் எக்டேர், ஒரு எக்டேருக்கு இரண்டரை ஏக்கரா வீதம் ஏறத்தாழ 55 இலட்சம் ஏக்கர் நிலங்கள் தலா 2 ஏக்கர் வீதம், நிலமில்லாத விவசாயிகளுக்கு விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது.




கூட்டுறவிலே விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன்கள் அறவே மொத்தமாக தள்ளுபடி செய்யப்படும்

**சத்துணவில் வாரம்**
**2 முட்டைகள்**



என்று சொல்லி, அதை கணக்கிட்டுப் பார்த்து சற்றொப்ப ஏழாயிரம் கோடி ரூபாய், விவசாயிகளுடைய கடன் விவசாயி பெற்றிருக்கின்ற கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இவை அத்தனையும் இன்றைக்கு நிறைவேற்றுகின்ற கட்டத்தில், இன்றைக்கு அதை ஒரு விழாவாக, நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்து உங்களையெல்லாம், அழைத்ததன் காரணம், தேர்தலுக்குமுன் இதை யெல்லாம் எங்களுக்குச் சொன்னாயே நிறை வேற்றினாயா என்று கேட்பீர்கள் அல்லவா? அதனால் உங்களையெல்லாம் சாட்சியாக வைத்துக் கொண்டு, அதைத் தொடங்கியிருக்கிறோம்.

### ஆடம்பர வரவேற்புகளுக்கு இடம் தரக்கூடாது

நான் தம்பி ஸ்டாலினிடத்திலே சொன்னேன். பக்கத்திலே நம்முடைய தயாநிதி மாறனிடத்திலும் சொன்னேன். இங்கே பொன்னாடைகளெல்லாம் போர்த்தி, பரிசுகளைக் கொடுத்தபோது, இதெல்லாம் முதல் நாள் என்பதால் நான் ஒத்துக் கொள்கிறேன். ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற அமைச்சர்களுடைய நிகழ்ச்சிகளில் இந்த ஆடம்பரங்களெல்லாம் வேண்டாம் என்று நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னேன். அபிப்பிராயம் ஆணையாக மாறுவதற்குள், அதிகாரிகள் தங்களைத் திருத்திக் கொள்வார்கள் என்று நான் நம்புகின்றேன்.

ஏனென்றால், தருகின்ற வாழ்த்துப் பத்திரங்களை மாட்டுவதற்கும் இட மில்லை. அதைப்போல, வழங்குகின்ற கேடயங்களை வைப்பதற்கும் இடமில்லை. என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய வீட்டிலே இட மில்லாத காரணத்தால், இவைகளெல்லாம் அறிவாலயத்திலே வைத்து பழக்கப்படுத்தி விட்டேன். அறிவாலயத்திலே இவைகள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றன. அங்கேயும் இப்பொழுது இடமில்லை. எனவே, இனிமேல், அரசு விழாக்களில் இதைப் போன்ற பரிசுகள் வழங்குதல் கூடாது. இதுவரை இவர் வாங்கிக் கொண்டாரே புதிதாக வந்த அமைச்சர்களை வாங்கக் கூடாது என்று சொல்கிறாரே என்று, புதிய அமைச்சர்கள் யாரும் கருதமாட்டார்கள். என்னுடைய தம்பிமார்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

அது மாத்திரமல்ல; உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே கூட சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே நம்முடைய கழக அரசு, 1996 முதல் 2001 வரை ஆட்சி புரிந்தபோது, உள்ளாட்சிமன்ற வரவேற்பு களுக்கு எந்த அமைச்சரும் செல்லவேயில்லை. அது ஒரு சம்பிரதாயம், உள்ளாட்சி மன்றங்களிலே அமைச்சரை வரவேற்பது, இந்திரனே, சந்திரனே என்றெல்லாம் புகழ்வது, புகழ்ந்துவிட்டு கடைசியாக ஏன் இப்படிப் புகழ்ந்தேன் தெரியுமா? என்று சொல்லாமல், சொல்வது போல எங்கள் ஊருக்கு இன்னன்ன தேவைகள் என்று குறிப்புகள், கோரிக்கைகளை வெளியிடுவது. இப்படிப்பட்ட சம்பிரதாயங்கள் எல்லாம் தேவையில்லாதவை. உள்ளாட்சித்துறை அமைச்சர் ஒரு ஊருக்குச் சென்று உள்ளாட்சி மன்றத்தை பார்வையிடுவது, பார்வையிட்ட பிறகு, அதிகாரிகளை அழைத்துப் பேசுவது, அந்த ஊரிலே உள்ள கவுன்சிலர்கள் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்கள் அவர் களிடத்திலே விவாதிப்பது, என்ன தேவை

“

**வாக்களித்தவர்கள் நம்மை ஒரு இடத்திற்கு பொறுப்போடு அனுப்பி வைக்கிறார்கள். அந்த இடத்திற்குச் செல்கின்ற நாம், அளித்த வாக்கை நிறைவேற்றுகின்ற பொறுப்புக்கு உரியவர்களாக ஆகிறோம்.**

”



என்பதை இவர்களே கேட்டறிவது, அதிகாரிகளிடத்திலே விவாதிப்பது அதன் மூலமாக அவைகளை நிறைவேற்றித் தந்தாலே போதுமானது. அதற்காக ஒரு வரவேற்பு, அது எதிலே போய் முடியும் என்றால், பெரிய அளவில் வரவேற்பெல்லாம் கொடுத்தோம். இவ்வளவு செலவு செய்தோம், தோரணம் கட்டினோம், இவ்வளவு பேனரெல்லாம் வைத்தோம், உறுதியெல்லாம் கொடுத்தார். என்ன ஆயிற்று என்று மறுபடியும் நீங்கள் திட்டு வாங்காமல் இருக்க வேண்டும் என்றால், இந்த ஆடம்பரமான வரவேற்புகளுக்கு இடம் தரக்கூடாது என்று அமைச்சர் பெருமக்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

## அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்

அந்த 5 ஆண்டு காலம் வரவேற்புகள் இல்லாததனால் எதுவும் கெட்டுப் போய்விடவில்லை. எந்த உள்ளாட்சி மன்றத்திலும், நகராட்சி மன்றத்திலும் காரியங்கள் நடைபெறாமல் இல்லை. கடந்த ஆட்சியில் இவைகள் எல்லாம் நடைபெற்ற காரணத்தால்தான், பல நகராட்சி மன்றங்கள் இயங்கவே இல்லை. பல மாநகராட்சி மன்றங்களில் மேயரும், துணை மேயரும் இல்லை. சில மேயர், மேயரா, துணை மேயரா என்று தெரியாத நிலையிலே அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று தெரியாத நிலையிலே இவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள்.

ஏனென்றால், ஒரு நல்ல ஆட்சி இருந்தால்தான், உள்ளாட்சி ஆனாலும் சரி, ஊராட்சி ஆனாலும் சரி இவைகளை யெல்லாம் நல்ல முறையிலே கவனிக்க முடியும். எவ்வளவு பெரிய தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும்கூட, ஊராட்சிகளில், உள்ளாட்சிகளில் இருக்கின்றவர்கள் பொறுப்புள்ளவர்களாக இல்லாமல் இருந்து, அவை கவனிக்கப்படாமல் இருக்குமேயானால், அந்த சங்கிலித் தொடர் இருக்கிறதே, அந்த சங்கிலித் தொடர் எந்த இடத்திலாவது அறுந்து போனால், நிச்சயமாக நாடு, நாட்டு மக்கள் நல்ல முறையிலே வாழ்வதற்கு வழியில்லாமல் போய் விடும் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்துதானே, முனிசிபாலிடிதானே என்று அலட்சியமாக இருக்கக்கூடாது. அங்கெல்லாம் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இரு அடுக்கு முறையில் நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது ஒரு அரிய திட்டத்தைக் கொண்டு வந்து, அந்த ஈரடுக்கு முறையை அறிமுகப்படுத்தி, அது நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் பிறகு நம்முடைய இந்தியத் திருநாட்டினுடைய இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள், பஞ்சாயத்துச் சட்டம் என்ற இன்னொரு சட்டத்தைக் கொண்டுவந்து அதிலே சில மாறுதல்கள் செய்தார்கள். இன்னும்கூட, அது சிறப்புற அமைய சில மாறுதல்கள் தேவை என்று நம்முடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால், அடிப்படையை மாற்றாமல், பெருந்தலைவர் காமராஜர் அறிவித்த அந்த அடிப்படையை மாற்றாமல் இளம் தலைவர் ராஜீவ்



காந்தியினுடைய அந்தக் கருத்துக்கும் மாறுபாடு வராமல், உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் இயங்க வேண்டும். இவைகளெல்லாம் நல்ல முறையில் இயங்கினால்தான் நாட்டு ஆட்சி நல்ல முறையிலே நடைபெற இயலும். அந்த வகையிலேதான், நான் நீண்ட நேரம் பேச வேண்டும் என்று எண்ணினாலும்கூட, அண்ணா அறிவாலயத்திற்குச் சென்று பிறந்த நாள் வாழ்த்துக்கூற வருகின்றவர்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்பதற்காக விரைவிலே என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

## அரிசி வழங்கும் திட்டம் தொடரும்

ஒன்றிரண்டை மாத்திரம் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்த அரிசித் திட்டத்தை இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்க வேண்டும் என்று நாம் அறிவித்தபோது, கிண்டல் செய்த கட்சிகள் உண்டு. கட்சித் தலைவர்கள் உண்டு. கட்சித் தலைவர்கள் கிண்டல் செய்தார்கள் என்பதுகூட, எனக்கு ஆச்சரியமாகப் படவில்லை. எனக்கு வியப்பூட்டவில்லை. வருத்தம் ஏற்படவில்லை. ஏனென்றால், ஜனநாயகத்திலே எல்லா கருத்துகளும் சொல்லுவார்கள். தங்கள் கட்சி இதனால் பலவீனமாகி விடக்கூடாது என்பதற்காக அவர்கள் குறை சொல்லக்கூடும். அது தவறல்ல. ஆனால், நடு நிலையிலே இருந்து ஏழை மக்களுக்காக, பாட்டாளி மக்களுக்காக, பராரிகளுக்காக குரல் கொடுக்க வேண்டிய பத்திரிகைகள்கூட இதை எப்படியெல்லாம் தலையங்கங்கள் எழுதி கிண்டல் செய்தார்கள். இது நடக்குமா என்று கேட்டார்கள். நடக்காது என்று சாபம் கொடுத்தார்கள். ஆருடம் சொன்னார்கள். ஆனால், ஆருடங்களையெல்லாம் பொய்யாக்கக்கூடிய இயக்கத்தில் வந்தவர்கள் நாங்கள் என்பதால், இந்த அரசியல் ஆருடத்தையும் பொய்யாக்கிவிட்டு, இன்றைய தினம் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்கின்ற அந்தத் திட்டத்தை தொடங்கி இருக்கின்றோம். எவ்வளவு மானியம் கொடுக்க வேண்டும் தெரியுமா? என்றெல்லாம் சொல்லி, பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். இதற்கு எவ்வளவு மானியம் என்று நானே அன்றைக்கு, வெளியிட்டிருக்கின்றேன். அந்தக் கணக்கைப் பார்த்த பிறகு கூட, திருந்தாதவர்கள் இது நடக்காது, நடக்காது என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள்; 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியா, என்ன ஆகும் நாடு, பொருளாதாரம் சீரழிந்துவிடும், நிதி ஆதாரமே அதற்குக் கிடைக்காது என்றெல்லாம் சொன்னவர்கள், வேறு வழியில்லாமல் நாங்களும் அந்தத் திட்டத்தை வேறு மாதிரியாகக் கொண்டு வருவோம் என்று சொல்லுகின்ற அளவுக்கு தேர்தல் நேரத்திலே தங்களுடைய குரலை மாற்றிக் கொண்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதற்கு மேல் பேசினால் அரசியலாகிவிடும் என்பதற்காக நான் அரசியல் பேச விரும்பவில்லை. ஆனால், அவர்களுடைய எதிர்ப்புகளை அவர்களுடைய நம்பிக்கையின்மையை மக்களை திசை திருப்பிய அந்தக் காரியங்களை எல்லாம் இன்றைக்கு ஒரேயடியாக வீழ்த்திவிட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களிலே ஒன்றான இந்த அரிசி வழங்கும் திட்டத்தை இன்றைக்குத் தொடங்கியிருக்கின்றோம். இது தொடரும், தொடர்ந்து கொண்டே இருக்கும், என்று நான் உங்களுக்கு நம்பிக்கை ஊட்ட கடமைப் பட்டிருக்கின்றேன்.




## தமிழ்நாட்டிற்கு ஒரு தெரசா

இதைப்போல, இன்றைக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருடைய பெயரால் ஒரு திட்டம். மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரை பல பேருக்கு, இன்றைய இளைய தலைமுறைக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. தந்தை பெரியார் அவர்களுக்கு, 'பெரியார்' என்ற பட்டத்தைக் கொடுத்தார்களே சென்னையிலே, ஒரு தியேட்டரில் நடைபெற்ற மகளிர் நடத்திய பொதுக்கூட்டத்தில் அதற்கு முன்னின்று உழைத்தவர்களிலே டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் இவர்களெல்லாம் முக்கிய மானவர்கள் என்பது பலபேருக்குத்

தெரியாது. இந்த இயக்கத்தினுடைய வரலாறு, தெரியாதவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.



அந்த அம்மையார் ஒரு எளிமையின் உருவமாகத் திகழ்ந்தவர்கள். சொல்லப் போனால், உலகத்திற்கு ஒரு அன்னை தெரசா. இவர்கள் தமிழ்நாட்டிற்கு ஒரு தெரசாவாக அன்றைய தினம் திகழ்ந்தவர்கள். அவரைப் பற்றி தந்தை பெரியாருக்குத் தெரியும். அண்ணாவுக்குத் தெரியும், தோழர் ஜீவானந்தம் அவர்களுக்குத் தெரியும். இங்கே வீற்றிருக்கின்றவர்களிலே உள்ள மூத்த தலைவர்கள் பல பேருக்குத் தெரியும். அவர் செய்து வைத்திருக்கின்ற விதவைத் திருமணங்கள் கொஞ்சம், நஞ்சமல்ல. அவர் தடுத்து நிறுத்திய பால்யத் திருமணங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல; அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்ற சுயமரியாதைத் திருமணங்கள் கொஞ்ச நஞ்சமல்ல; வாழ முடியாத, வாழாவெட்டியாகிவிட்ட பெண்களுக்கெல்லாம் வாழ்வு கொடுத்த அம்மையார் அவர்கள். அப்படிப்பட்ட அம்மையாருடைய பெயரால்தான் இந்த திருமண உதவித் திட்டம். தி.மு.கழக ஆட்சியிலே இத்திட்டத்தை முதலிலே 5 ஆயிரம் ரூபாயில்தான் ஆரம்பித்தோம். பிறகு மீண்டும் வந்த தி.மு.க. ஆட்சியிலே பத்தாயிரம் ரூபாய் என்று உயர்த்தினோம். அது, கொஞ்சநாள் தி.மு.கழக ஆட்சி நடைபெற்றபோது, ஏறத்தாழ 2 இலட்சத்து சொச்சம் பெண்களுக்கு அந்த உதவி கிடைத்தது. அவர்களுடைய வாழ்க்கை தொடங்கியது. அதை கடந்த ஆட்சியிலே நிறுத்திவிட்டார்கள்.

ஒருவேளை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரை அறியாத காரணத்தினாலோ அல்லது திருமணங்கள் பெண்களுக்கு முக்கியம் என்பதை ஒத்துக்கொள்ளாத காரணத்தாலோ, அதை நிறுத்தி விட்டார்கள். இப்பொழுது மீண்டும் அதைத் தொடங்கி யிருக்கின்றோம். இந்தத் திட்டத்தின்படி ஏற்கெனவே 10 ஆயிரம் ரூபாய் தரப்பட்டது. இனிமேல் 15 ஆயிரம் ரூபாய் தரப்படும் என்ற அளவிற்கு அது அமலுக்கு வந்திருக்கிறது. இன்றைக்கு மூன்று, நான்கு பேருக்கு அதை அளித்து, இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கின்றோம். இது தொடரும், இதற்காக எவ்வளவு செலவானாலும், பெண்களுடைய வாழ்க்கையிலே விளக்கேற்றி வைக்கின்ற காரணத்திற்கு இந்த ஆட்சி எல்லா வகையிலும் நிதியை எப்படிச் சேர்க்க முடியுமோ அப்படி சேர்த்து, உதவும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்ற திட்டங்களும், 2 ஏக்கர் நிலம், நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்குத் தருகின்ற ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, டி.வி. என்ன ஆயிற்று? என்ற கேள்வியோடு இருக்கின்ற தாய்மார்களுக்கு ஆறுதல் அளிக்கின்ற வகையிலே நேற்றைய தினம் அதற்கான அதிகாரிகள் கொண்ட ஒரு கூட்டத்தையும், அமைச்சர்கள் கொண்ட ஒரு கூட்டத்தையும் கூட்டி, அதை வடிவமைத்திருக்கின்றோம். எப்படி அந்தத் திடடத்தை நிறைவேற்றுவது என்பதை வடிவமைத்து பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கின்றது. இவைகள் அறிவிக்கப்பட்ட திட்டங்களை எப்படி நிறைவேற்றப் போகின்றோம் என்பதற்காக விளக்கங்கள் இன்னும் அறிவிக்கப்பட வேண்டிய பல திட்டங்களை நீங்கள் சொல்ல இருக்கின்றீர்கள். நாடும் சொல்ல இருக்கிறது. ஏடுகள் சொல்ல இருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற மகத்தான தலைவர்களெல்லாம் சொல்ல இருக்கின்றார்கள். அவைகளையெல்லாம் நிறைவேற்றுகின்ற அந்தப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அதை உறுதியாக யார்? யார்? எங்களுக்கு எப்பொழுதும் உதவியாக இருப்பீர்களோ அவர்களுடைய உதவியோடு, புதிய துணைகளையும், நாங்கள் நிச்சயமாகப் பெற்று, மக்களுடைய ஆதரவோடு இந்த மகத்தான திட்டங்களை நிறைவேற்றுவோம் என்ற உறுதியை மீண்டும், மீண்டும் உங்களுக்கு அளித்து, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். ★

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பொது விநியோகத் திட்டம் – அரிசி – நியாய விலைக்கடைகளில் விற்கப்படும் அரிசியின் சில்லறை விலை – கிலோ ஒன்றிற்கு ரூ. 2/– என்ற குறைந்த விலையில் விற்பனை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (பி) துறை

அரசு ஆணை (நிலை) எண்: 69 நாள். 13.5.2006

படிக்கப்பட்டது :

1. அரசு ஆணை (நிலை) எண். 321,கூ.உ(ம)நு.பா.துறை, நாள். 14.9.2001.
2. அரசு கடித எண். 11872/பி2/2002–2, கூ.உ.(ம) நு.பா.துறை, நாள் : 12.4.2002.
3. அரசு ஆணை (3டி) எண். 40, கூ.உ.(ம) நு.பா.துறை. நாள். 18.8.2003.

ஆணை :

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தற்போது கிலோ ஒன்றிற்கு ரூ. 3.50 என்ற விலையில் குடும்ப நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 12 கிலோ முதல் 20 கிலோ வரையில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அந்தியோதயா அன்ன யோசனா திட்டத்தின் கீழ் (Antyodaya Anna Yojana) கிலோ ஒன்றிற்கு ரூ. 3/– விலையில் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 35 கிலோ வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

2. ஏழை, எளிய, நடுத்தர குடும்பங்கள் பயனடையும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் அரிசியின் விலையை குறைப்பது பற்றி இவ்வரசால் பரிசீலிக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தில் நியாய விலைக்கடைகளில் தற்போதுள்ள கிலோ ஒன்றுக்கு ரூ. 3.50 என்ற விலையை குறைத்து கிலோ ரூ. 2/– (ரூபாய் இரண்டு மட்டும்) என்ற விலைக்கு விற்பனை செய்ய இவ்வரசு உத்தரவிடுகிறது. அந்தியோதயா அன்ன யோசனா திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் குடும்பத்திற்கும் கிலோ ஒன்றிற்கு ரூ. 2/–(ரூபாய் இரண்டு மட்டும்) என்ற விலையிலேயே பொதுவிநியோகக் கடைகளில் அரிசி விற்பனை செய்யப்படும். இந்த விலைக் குறைப்பினால் குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவில் எவ்வித மாற்றமும் இல்லை. இந்த விலைக் குறைப்பு 3.6.2006 முதல் அமலுக்கு வருகிறது. இந்த விலை குறைப்பால் ஏற்படும் வித்தியாச தொகையை சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களும், சுயஉதவி குழுக்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஈடுசெய்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறது. அரிசியின் சில்லறை விற்பனை விலையில் செய்துள்ள விலைக் குறைப்பு காரணமாக நியாய விலைக்கடைகளுக்கு வழங்கப்படும் சில்லறை விளிம்புத் தொகையில் (Retail Margin) எவ்வித மாற்றமும் இல்லை.

3. இப்புதிய விலையினை எல்லா நியாய விலைக் கடைகளிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் தெளிவாக பொதுமக்களின் பார்வைக்கு தெரியும்படி எழுதிவைக்க தக்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாவட்ட ஆட்சியாளர்களும் இவ்வாணையை பத்திரிகைச் செய்தி குறிப்புகள் மூலமாக அந்தந்த மாவட்டங்களில் வெளியாகும் தினசரி நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சி / அகில இந்திய வானொலி மூலமாக பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டு செல்லத் தக்க ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. இவ்வாணையின் காரணமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தேவைப்படும் கூடுதல் உணவு மானியத்திற்கான கருத்துருவினை அரசுக்கு விரைவில் அனுப்ப தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.


5. இந்த அரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 1663/FS/P/06, நிதித்துறை, நாள் : 13.05.2006.

//ஆளுநரின் ஆணைப்படி//

த. ரா. சீனிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

தமிழர் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலை திறப்பு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை (3.6.2006)

# நாம் இழந்த ஒரு பெருமையை மீட்டிருக்கின்றோம்



**2**.1.1968ஆம் ஆண்டையும் எண்ணிப் பார்க்கின்றேன். அந்த ஆண்டில் இதே இடத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டின் சார்பில், அண்ணா அவர்களுடைய எண்ணப்படி நான் தலைமையேற்க, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் திறந்து வைக்க கண்ணகி திருவிழா இங்கே நடைபெற்றது. அந்தச் சிலை திறப்புத் திருவிழாவில் அன்றைக்குப் பாடியவர் தம்பி சிவசிதம்பரத்தின் தந்தை, சீர்காழி கோவிந்தராசன் அவர்கள். அவர் இன்றைக்கு இல்லை, சிவசிதம்பரம் வடிவத்திலே இருக்கிறார்.

நான் எண்ணிப் பார்க்கின்றேன். அன்று இசை முழங்கிய சீர்காழியார் இல்லை, சிவசிதம்பரம் இருக்கிறார். வேதனையான வேடிக்கை, அன்றைக்கு நானும் இருந்தேன், இன்றைக்கும் நான் இருக்கிறேன். அப்படி இருக்கிற காரணத்தால்தானோ என்னவோ, நான் இருந்ததால் இன்றைக்கு கண்ணகி சிலை மீட்கப்பட்டு, மீண்டும் திறக்கப்பட்டது என்று நம்முடைய பேராசிரியர் அவர்களும், தவத்திரு அடிகளாரும், கவிப்பேரரசு அவர்களும், அவ்வையும் மற்றவர்களும் எடுத்துக்காட்டியதைப் போல, அது ஓரளவு உண்மையாக இருந்தாலும்கூட, அன்றைக்கு 68ஆம் ஆண்டு நான் தலைமையேற்று நடத்தப்பட்ட அந்த விழாவில், நாட்டப்பட்ட கண்ணகி சிலை அகற்றப்பட்ட அநீதியையும் காண வேண்டிய அவலம் எனக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அப்படி தொடர்ந்து இருந்ததால் தானே அந்தத் துன்பத்தை நாம் அனுபவிக்க நேரிட்டது, இன்றைய நிகழ்ச்சி இன்பத்தை எனக்கு அளித்தாலுங்கூட, இடையிலே வந்த அந்தத் துன்பம் சாதாரணமானதா? என்னுடைய இனத்தின் பண்பாட்டுச் சின்னத்தையே அழித்து, ஒழித்து அதைக் கொண்டு போய் ஒரு இருட்டறையிலே தள்ளி, தள்ளியதையும் கூட ஒழுங்காகத் தள்ளாமல் குப்புறக் கவிழ்த்து, கொடுமைக்காரன் நீலன் சிலை இருந்த

இடத்தில், அருங்காட்சியகத்தில், நீலன் சிலையின் காலடியில் கண்ணகி சிலை கிடந்த காட்சியை பதவிப் பொறுப்பை ஏற்ற மறுநாள் நான் சென்று அருங்காட்சி யகத்திலே பார்த்த போது, எப்படி துடித்திருப்பேன், எப்படி பதைத்திருப்பேன் என்பது என்னோடு வந்த நண்பர்களுக்குத் தான் தெரியும்.

### வீரம் செறிந்த தீரப்பெண்மணி

இது தேவையா? இந்த இனம், இந்தப் பண்பாட்டுக்குரிய நாம், இப்படி ஒரு வேதனையைச் சந்திக்கத்தான் வேண்டுமா? ஆனால் சந்தித்திருக்கிறோமே? இன்று அதற்குப் பரிகாரம் கண்டிருந்தாலும் கூட, அந்த ஐந்தாண்டு காலம் நாம் பட்டபாடு கொஞ்ச நஞ்சம் அல்லவே? ஒரு சிலை தானே என்று அலட்சியப்படுத்தக் கூடிய விஷயமா அது? இல்லையே? காவிய நாயகி என்றும், நம்முடைய கலாச்சார பொக்கிஷம் என்றும், கருவூலம் என்றும் போற்றப்பட்ட ஒரு பெண், வீரப் பெண்மணி, நீதி கேட்ட பெண்மணி, நீதி கேட்டு நெடுஞ்செழியப் பாண்டியனுடைய தலையையே கவிழ வைத்த பெண்மணி, தன் செங்கோல் வளைந்தது என்பதற்காக தன்னுடைய உயிரையே கொடுத்து அந்தச் செங்கோலை நிமிர்த்துவதற்காகப் பாடுபட்டானே, அந்தப் பாண்டிய மன்னனை கொலு மண்டபத்திலே, “கொற்றவனே, குற்றம் புரிந்தவன் நீ'' என்று சுட்டிக் காட்டிய வீரம் செறிந்த தீரப் பெண்மணி. அந்தப் பெண்மணி தமிழ்ச் சமுதாயத்திற்கெல்லாம் வழி காட்டியாக இருந்து வீரம் ஊட்டுகின்ற பெண்மணி யாகத் திகழ்ந்து, சிலப்பதிகாரத்திலே யாருடைய பெயர் நினைவுக்கு வந்தாலும் வராவிட்டாலும் எந்தப் பெயர் உடனடியாக நினைவுக்கு வருமோ, அந்தப் பெயருக்கு உரிய கதாநாயகியாக இருந்து நம்முடைய உள்ளமெல்லாம் கவர்ந்த உணர்ச்சிப் பிழம்பான அந்தக் கண்ணகியெனும் பெயருடையாளின் சிலை அகற்றப்பட்டது, உடைக்கப்பட்டது, நொறுக்கப்பட்டது.

2.1.1968 அன்று வைக்கப்பட்ட சிலை, எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு மீண்டும் திறக்கப்படுகின்ற ஒரு விழா நடத்தப்படுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தால், அந்தச் சிலையை அகற்றிய பிறகு தமிழ்நாட்டிலே நாம் யாரும் வாளாயிருந்திடவில்லை. வாளாக இல்லையே தவிர, தமிழன் வாளாயிருந்து விடவில்லை. வாளாக அவன் இருக்க விரும்பவும் மாட்டான். ஏனென்றால் அறவழியே போராட வேண்டும் என்று அண்ணாவின் கட்டளையை ஏற்றவன். வாளாக அவன் மாறாமல் இருப்பதற்கு காரணமே கூட, அண்ணாவின் கட்டளை என்று சொல்லிக் கொண்டிருந்தவன். அவன் வாளாக மாறுவானே என்கிற அச்சம் தமிழகத்திலே வந்து புகுந்த வஞ்சகர்களுக்கு இல்லாத காரணத்தால் அவன் வாளாகத் தானே இருப்பான். இவன் வெறும் ஆளாகத் தானே இருப்பான் என்று தேளாக இருந்தவர்கள் எல்லாம் ஆளுக்கொரு கொட்டு, கொட்ட ஆரம்பித்தார்கள். அப்படி கொட்டிய கொட்டுத் தான் நம்முடைய கண்ணகி சிலை இங்கிருந்து அகற்றப்பட்ட நிகழ்ச்சி. கண்ணகி சிலையை அகற்றிய மறுநாளிலிருந்து இந்த மாநிலம் 6.12.2001 அதிகாலை மூன்று மணிக்கு கவிஞர் வாலி ஒரு கவிதையில் குறிப்பிட்டதைப் போல லாரி மோதி கண்ணகி சிலையின் பீடம் சேதம் அடைந்ததாக கதை கட்டப்பட்டு, அந்த லாரியை மோதியவன் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு லாரியின் டிரைவர் ஆனந்தன் என்று கூறப்பட்டு, அந்த ஆனந்தன் கைது செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டது 6.12.2001இல். நாள் குறிப்புகளோடு இதைச் சொல்வதற்குக் காரணம் அன்றைக்கு நடந்த நிகழ்ச்சிக்கு இன்றைக்கு திடீரென்று நாம் பதிலளித்து விடவில்லை இந்தச் சிலையை இங்கே நாட்டி என்று கூறுவதற்காக அல்ல.

தொடர் கிளர்ச்சிகள், தொடர் வேண்டுகோள்கள் பல்வேறு அமைப்புகளின் சார்பாக யார் யார் உடலில் தமிழ் ரத்தம் ஓடியதோ அவர்கள் எல்லாம் தொடர்ந்து குரல் கொடுத்தார்கள் இந்த ஐந்தாண்டு காலம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இவைகளைக் குறிப்பிடுகிறேன்.

14.12.2001 சேதம் அடைந்த பீடம் செப்பனிடப் படுவதாகச் சொல்லப்பட்டு பீடத்தை இடிக்கும் பணி நடைபெற்றது. பீடம் சேதம் அடைந்தது. அதற்குப் பரிகாரம் பீடத்தையே இடிப்பதென்று பீடத்தை இடிக்கின்ற பணி நடைபெற்றது.

அருகில் இருந்த போலீஸ் பூத் ஒன்றும் அகற்றப்பட்டது...

சிலை மறுபடியும் அமைத்தால் தானே அங்கே போலீஸ் காவல் தேவை. அதனால் போலீஸ் பூத் அகற்றப்பட்டது.

சிலை இருந்த பகுதியில் சாலை அமைக்கும் பணி ஒரே நாளில் முடிக்கப்பட்டு தமிழ்நாட்டிலே உள்ள கிராமத்து பாமரன் நடக்கப் பாதை இல்லை, எங்களுக்குப் பாதை போட்டுக் கொடுங்கள் என்று கேட்டால் அந்தப் பாதை அமைய பத்து மாதம் ஆனாலும் ஆகும், பத்து ஆண்டு ஆனாலும் ஆகும், பாதை அமையாமல் போனாலும் போகும். ஆனால் சிலை இருந்த பகுதியில் இங்கே சாலை அமைக்கும் பணி ஒரேநாளில் முடிக்கப்பட்டு, சாலை



போக்குவரத்தும் திறந்து விடப்பட்டது. சாலை அமைந்து விட்டால் பிறகு சிலை வர முடியாது அல்லவா, அதனால்.

17.12.2001இல் அகற்றப்பட்ட சிலை எங்கே என்ற கேள்வி எழுந்தது. பொதுப்பணித்துறை உயர் அதிகாரி ஒருவர் தெளிவாகப் பதில் சொன்னார், தெரியாது என்று!

ஆனால் அதற்கு முன்பாகவே கண்ணகி சிலையை பொதுப்பணித்துறையினர் லாரியில் ஏற்றிச் சென்றதாகவும் கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து கண்ணகி சிலை எங்கே என்பது கேள்விக்குறியாக இருந்து கடைசியில் தான் அது அருங்காட்சியகத்தில் கிடத்தி வைக்கப்பட்டது தெரிய வந்தது.

18.12.2001இல் கண்ணகி சிலையை அகற்றி இருப்பது தமிழர்களின் மானத்திற்கும் மரியாதைக்கும் விடப்பட்ட அறைகூவல்; சிலையை உடனடியாக அதே இடத்தில் வைக்காவிட்டால் மானம் உள்ள தமிழர்களைத் திரட்டி (ஜாக்கிரதையாகத் தான் சொன்னேன் மானம் உள்ள தமிழர்களைத் திரட்டி என்று) மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிவித்தேன்.

### தமிழர்களின் கோரிக்கை

உலகத் தமிழர்கள் பொங்கி எழுவதற்குள் காவியத் தலைவி கண்ணகியின் சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவிட வேண்டுமென பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ஐயா இராமதாசு அவர்கள் இந்த அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் 19.12.2001இல்.

கண்ணகி சிலையை முன்பு இருந்த இடத்திலேயே வைத்திட வேண்டும். இல்லையேல் தமிழர்கள் ஒன்றுபட்டு அரசுக்கு எதிராகப் பொங்கி எழுவார்கள் என்று அப்போதைய முதல்வர் பன்னீர் செல்வத்திற்கு அன்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலே கூட, இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார். இது 19.12.2001இல்.

கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவிட அரசுக்கு உத்தரவிடவேண்டும் என மத்திய சென்னை தி.மு.கழக வழக்கறிஞர்களின் பிரிவு துணை அமைப்பாளர் ஹசன் முகமது ஜின்னா, உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். இது 20.12.2001 பத்திரிகைகளில் செய்தியாக வந்தது.

கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்கவேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் திரு. ஆர். நல்லகண்ணு அவர்கள் ஓர் அறிக்கை மூலம் அரசுக்கு வேண்டுகோள் விட்டார்.

கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்கக்கோரி சென்னை பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தச் செய்தி 20.12.2001 தேதியிட்ட ஏடுகளில் வெளிவந்தது. அதே நேரத்தில் கோவை மாநகர கல்லூரி மாணவர்களும் கண்ணகி சிலையை மீண்டும் அமைக்க வேண்டுமென்று கோரி போராட்டம் நடத்தினர். இது 21.12.2001 நாளேடுகளில் வெளி வந்தது.

பின்னர் தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டம் நடத்தவும் முடிவு செய்தனர். காரணம் ஆசிரியர்களும் மாணவர்களும் வசூலித்துக் கொடுத்து அந்த நிதியிலே நிறுவப்பட்டதுதான் இந்தக் கண்ணகி சிலை, உலகத் தமிழ் மாநாட்டின் போது. அதனால் மாணவர்கள் தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்த முடிவு செய்தார்கள்.

தெய்வப் பணி மகளிர் மன்றத் தலைவி பொன் தெய்வநாயகி என்பார், "கண்ணகி சிலை அகற்றப் பட்டதை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். மீண்டும் அதே இடத்தில் கண்ணகி சிலையை வைக்க வேண்டும்" என்று அரசுக்கு எச்சரிக்கை செய்து ஒரு கோரிக்கை வைத்தார்.

அந்தச் சிலையை மீண்டும் நிறுவிட என்னுடைய தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில்; பொருந்தா காரணத்தைக் கூறி கண்ணகியின் சிலையை அகற்றியதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்கள், கவிஞர்கள், புலவர்கள், மகளிர் அமைப்புகள், மாணவ அமைப்பினர் அனைவரும் கடும் கண்டனம் தெரிவித்தார்கள். கண்ணகி சிலை நாட்டும் அறப்போராட்டக் குழு அமைத்துப் போராட முடிவு செய்யப்பட்டது. அதனை யொட்டி கடற்கரையிலே ஒரு கண்டனப் பொதுக் கூட்டமும் நடைபெற்று, அனைத்துக் கட்சித் தலைவர் களும் அதிலே கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

அரசியல் தலைவர்கள் தமிழறிஞர்களுடன், ஆசிரியர்களும் சேர்ந்து போராடுவர் என்று ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் மீனாட்சி சுந்தரம் அறிக்கை விடுத்தார்.

கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்க தூத்துக்குடி தமிழ் உறவு மன்றம் கோரிக்கை வைத்தது.

வரலாற்று அடையாளமாக விளங்கும் கண்ணகி சிலையை அகற்றுவதா என தமிழகப் புலவர் குழு கண்டனம் தெரிவித்து 20.12.2001 அறிக்கை விடுத்தது.

இந்தச் செயல் தமிழகத்தையே அவமானப்படுத்திய செயல் என அன்றைய மத்திய அமைச்சர், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த பொன். இராதாகிருஷ்ணன் அறிக்கை மூலமாகத் தெரிவித்தார். இது 24.12.2001 ஏடுகளிலே வெளி வந்தது.

கண்ணகி சிலையை அகற்றிய செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது எனத் தமிழ்ச் சான்றோர் பேரவை அறிக்கை மூலம் 27.12.2001 அன்று ஏடுகளில் தெரிவித்தது.

டாக்டர் மா. நன்னன், கவிக்கோ அப்துல் ரகுமான், சிலம்பொலி செல்லப்பனார், கவிப்பேரரசு வைரமுத்து உள்ளிட்ட தமிழறிஞர்கள் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன் கடும் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்.

டாக்டர் மா. நன்னன் அவர்கள் அதே இடத்தில் சிலை வைக்கக் கோரி நீதிமன்றத்திலே வழக்கு ஒன்றும் தொடுத்தார்.

மறைத்து வைத்திருக்கும் கண்ணகி சிலையை அதே இடத்தில் வைக்கவேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. என். சங்கரய்யா அவர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்தார், 30.12.2001 அன்று.

இப்படி தமிழ்நாட்டிலே உள்ள எல்லா அமைப்புகளும், எல்லா தலைவர்களும், எல்லா தமிழறிஞர்களும், தமிழ்ப் பெருமக்களும் கோரிக்கை வைத்து, அதைக் காதிலே போட்டுக் கொள்ளாத அரசின் தலைவி, நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அருங்காட்சியகம் சென்று அங்கே அனாதை போல கிடத்தப்பட்டிருந்த, நாதியற்ற ஒரு நங்கை போல கிடத்தப்பட்டிருந்த, ஒரு பிச்சைக்காரி போல கிடத்தப்பட்டிருந்த கண்ணகி சிலையைப் பார்த்து, அதைப் புகைப்படமெடுத்து பத்திரிகையிலே அந்தப் படங்கள் வெளி வந்தவுடன் திடுக்கிட்டு, கண்ணகி சிலையை எடுக்க தான் காரணமே அல்ல, எனக்கு தெரியவே தெரியாது என்று அறிக்கை வெளியிட்டதை – அந்த நேரத்தில் அவாளுக்காக ஆதரவோடு எழுதிக் கொண்டிருந்த பத்திரிகைகள் எல்லாம் எவ்வளவு பெரிய அளவிலே வெளியிட்டன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**"காவிய நாயகி என்றும், நம்முடைய கலாச்சார பொக்கிஷம் என்றும், கருவூலம் என்றும் போற்றப்பட்ட ஒரு பெண், வீரப்பெண்மணி, நீதி கேட்ட பெண்மணி, நீதிகேட்டு நெடுஞ்செழியப் பாண்டியனுடைய தலையையே கவிழ வைத்த பெண்மணி, தன் செங்கோல் வளைந்தது என்பதற்காக தன்னுடைய உயிரையே கொடுத்து அந்தச் செங்கோலை நிமிர்த்துவதற்காகப் பாடுபட்டானே, அந்த பாண்டிய மன்னனை கொலு மண்டபத்திலே, "கொற்றவனே, குற்றம் புரிந்தவன் நீ" என்று சுட்டிக்காட்டிய வீரம் செறிந்த தீரப் பெண்மணி."**

### செங்கோல் பறிக்கப்பட்டாலும் கவலையில்லை

இவ்வளவிற்கும் பிறகு, தமிழன் தன்னுடைய மானத்தைத் தொலைத்து விட்டு வாழ விரும்பவில்லை, அதைவிட அவன் மரணத்தைத் தழுவத் தயாராக இருக்கிறான் என்று நான் விடுத்த அறைகூவலை ஏற்றுக் கொண்ட தமிழ்நாட்டு மக்கள் நமக்களித்த ஆதரவைக் கொண்டு, இன்றைக்கு அரியாசனம் பெற்றிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் அந்தச் சிலையை வைப்பதைக் கூட நையாண்டி செய்து, ஏதோவொரு நாலாந்தர ஏடு எழுதியிருந்தால் நான் வருத்தப்பட்டிருக்கமாட்டேன், வேதனைப்பட்டிருக்க மாட்டேன், உயர்ந்த ஏடுகளில் ஒன்று என்று நான் கருதிக் கொண்டிருக்கின்ற, உயர்ந்த மனிதர் ஒருவரால் ஒரு காலத்திலே நடத்தப்பட்ட, இன்றைக்கு அந்த உயர்ந்த மனிதருடைய பிள்ளையால் அண்மைக்காலம் வரை நடத்தப்பட்டுக் கொண்டிருந்த இன்று வேறு சில பேர்வழிகளால் நடத்தப்படுகின்ற, அவர்கள் வழி வந்தவர்களால் நடத்தப்படுகின்ற "ஆனந்தவிகடன்" பத்திரிகையிலே கண்ணகி சிலையைப் பற்றி என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், நான் இதை யாரையும் தூண்டி விடுவதற்காகப் பேசவில்லை, தூங்கிக் கொண்டிருக்கின்ற உணர்ச்சிகளை லேசாகத் தட்டி எழுப்புவதற்காகத்தான் பேசுகிறேன், தட்டி எழுப்பினாலும் கூட விழிக்க முடியாமல் தமிழன் கிடக்கிறானே என்ற வேதனையில் தான் இதைக் கூறுகிறேன். என்ன கண்ணகி சிலை? என்று சிலையை கேலிக்குரியதாக ஆக்கி, அந்தக் கட்டுரையை முடிக்கும் போது ஆனந்தவிகடன் கட்டுரையில் தூங்கிக் கொண்டிருக்கின்ற குழந்தையின் கையிலே இருக்கின்ற கரடி பொம்மைக்கும் இந்தக் கண்ணகி சிலைக்கும் என்ன வித்தியாசம் என்று ஆனந்தவிகடன் தன் கட்டுரையை முடித்திருக்கிறது என்றால், தமிழா, நீ இன்னும் தமிழ்நாட்டில் உயிரோடு தான் இருக்கிறாயா என்று கேட்கத்தான் தோன்றுகிறது.

இந்தக் கேள்வியை நான் கேட்கின்ற காரணத்தால் என்னுடைய ஆட்சி செங்கோல் பறிக்கப்பட்டாலும் எனக்குக் கவலையில்லை. தமிழன் மானத்தோடு வாழ்ந்தான், மானத்தோடு சாகட்டும், சாக வேண்டும். மானம் இல்லாமல், மானத்தை இழந்து விட்டு ஒரு தமிழன் செத்துவிட்டால் என்ன மிச்சமாகத் தங்கும்? அவன் பிணம் சில நாள் தங்கும், அதற்குப் பிறகு அவனுடைய எலும்பு சில வாரங்கள் தங்கும், அதற்குப் பிறகு அவன் இருந்த இடம் கொளுத்தப்பட்டால் சாம்பல், புதைக்கப்பட்டால் மண், சில காலம் தங்கும். என்றைக்கும் தங்க வேண்டுமானால், அவனுடைய மானம் தான் தங்க முடியும். அந்த மானத்தைத் தமிழன் இழக்க வேண்டும். அதை இழப்பான் என்கிற தைரியம் ஆனந்தவிகடன் போன்ற 'அவாள்' பத்திரிகைகளுக்கு இருக்கின்ற காரணத்தால் கண்ணகி சிலை கரடி பொம்மையாம் – எழுதுகிற மனதைப் புண்படுத்தும் கேலியாக! இளங்கோவடிகள் கண்ணகியை எவ்வாறு சிறப்பித்தார், சிலப்பதிகாரம் கண்ணகிக்கு எத்தகைய சிறப்பை நல்கியிருக்கிறது, "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே" என்று கோவலன் புகழ்ந்ததையெல்லாம் எப்படி சிலப்பதிகாரம் எழுதிக் காட்டியிருக்கிறது. அந்தக் கண்ணகியை கரடியோடு, கரடி பொம்மையோடு ஒப்பிட்டு ஒரு பத்திரிகை எழுதுகிறது என்றால், நான் அந்தப் பத்திரிகையின் உரிமையாளர் மாறியிருக்கலாம், ஆனால் அது யாரால் நடத்தப்பட்டது, எப்படிப்பட்ட பெருந்தகையால் நடத்தப்பட்டது, எத்தகைய பெரியவர் வாசன் அவர்களால் நடத்தப்பட்டது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, அவர் தேசத்திற்காக செய்த தியாகம் என்ன, கலையின் மூலமாக அவர் தேசத்திற்கு ஆற்றிய தொண்டு என்ன, எழுத்தின் மூலமாக அவர் ஆற்றிய தொண்டு என்ன, தந்தை பெரியாரிடத்திலே அவர் வைத்திருந்த மதிப்பு என்ன, அவர் வைத்திருந்த பாசம் என்ன, பற்று என்ன என்று அவைகளை எல்லாம் நான் எண்ணிப் பார்க்கின்றேன். ஆனால் இன்றைக்கு யாரோ சிலர் தேவையில்லாமல் இத்தகைய இன மோதல்களை விஷமத்தனமாகக் கிளப்பி விட எண்ணுகிறார்கள் என்றால், இது எங்கே போய் முடியும் என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### வேண்டுகோள் குரல்

சிலை என்று அலட்சியப்படுத்தி விடுவதா? அலட்சியப்படுத்த முடியுமா? சிலைதானே என்று கேவலப்படுத்தி விடுவதா? அதனுடைய பொருள் என்ன? அதிலே அடங்கியிருக்கின்ற அர்த்தம் என்ன? அதிலே அடங்கிக் கிடக்கின்ற பண்பாடு எது? அதிலே பூத்துக் குலுங்குகின்ற கலாச்சாரம், அதனுடைய பழைமை, அதனுடைய பெருமை இவைகள் எல்லாம் என்ன? இவைகளை எண்ணிப் பார்க்க வேண்டாமா? தேவையில்லாமல் தமிழனுடைய உணர்ச்சியைத் தட்டி விடுகின்ற இந்த விளையாட்டுத் தனம் விகடனுக்கு வேண்டாம், விகடனைப் போன்றவர்களுக்கும் வேண்டாம் என்பதை என்னுடைய வேண்டுகோளாகத்தான் வைக்கிறேன்.

அதிகாரத்திலே ஏதோ அமர்ந்து விட்ட காரணத்தால்; கடந்த ஆட்சிக் காலத்தைப் போல ஆணவக் குரல் அல்ல. அடக்கமான குரல் தான், வேண்டுகோள் குரல் தான், ஏற்கெனவே தமிழன் சீரழிந்து கிடக்கின்றான். தமிழன் ஏற்கெனவே அழிந்து கிடக்கிறான். அவனை எழுப்பி விடுவதற்காக, அவனை வாழ வைப்பதற்காக நாங்கள் எடுக்கின்ற முயற்சிக்கு நீங்களும் கை கொடுங்கள் என்று எல்லோரையும் கேட்கின்ற நேரத்தில், நாங்கள் கை கொடுக்கமாட்டோம், கழுத்தறுப்போம் என்று யாராவது

முன்வருவார்களேயானால் நாங்கள் கழுமரம் ஏறவும் தயாராக இருக்கிறோம், அதைத் தடுப்பதற்கு என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

ஏனென்றால் அவ்வளவு பதைப்பு எனக்கு. நான் அதைப் படித்து விட்டு உடனடியாக தம்பி வைரமுத்துவை தொலைபேசியில் கூப்பிட்டேன். படித்தீர்களா, வயிறு பற்றி எரிகின்ற அந்தக் கட்டுரையை என்று சொன்னேன். அவரும் என்னோடு சேர்ந்து வருத்தத்தைத் தான் பட முடியும், வேறென்ன செய்ய முடியும் ? இந்த நிலையிலே தான் நாம் இழந்த ஒரு சுதந்திரத்தை, இழந்த ஒரு பெருமையை இன்றைக்கு மீட்டுக் கொண்டு வந்து இந்தக் கடற் கரையிலே, காமராஜர் சாலையிலே நிலைநாட்டியிருக்கின்றோம். நான் காலையில் எழுதிய ஒரு இசைப் பாடலை தம்பி சிவசிதம்பரம் இங்கே பாடினார். எவ்வளவு நேரத்தில், எந்தச் சூழ்நிலையிலே எழுதினேன் தெரியுமா ? குளித்துக் கொண்டிருந்தேன், குளித்து முடித்து விட்டு வெளியே வருவதற்குள்ளாக பெருங்கூட்டம் வந்துவிட்டது எனக்கு மாலையணிவிக்க, வாழ்த்துக் கூற, மரியாதை செலுத்த என்ற செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாக அலை அடிப்பது போல வந்து கொண்டே இருக்கின்றன. அந்த நேரத்தில் வந்து, ஆடை உடுத்துவதற்குள்ளாக அவசர அவசரமாக நின்று கொண்டே வந்த நினைவுகளை எழுத்துகளாக ஆக்கி, பத்து வரிகள் எழுதி, இதை சிவசிதம்பரத்திடம் கொடுத்து பாடச் சொல்லுங்கள் என்று சொன்னேன் என்றால், அதை நானா எழுதினேன், இல்லை. என்னைத் தட்டி எழுப்பிய தமிழ் எழுதியது. எனக்கு உணர்ச்சி ஊட்டிய பெரியார் எழுதியது. எனக்கு ஆர்வம் ஊட்டிய அண்ணா எழுதியது. "கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம், கிழித்தெறிய தேடுது காண் பகைக் கூட்டத்தை, வளம் பெரிய தமிழ்நாட்டில், தமிழரல்லார் இனி வால் நீட்டினால்..." என்று எச்சரித்தாரே புரட்சிக்கவி பாரதிதாசன், அவருடைய பேனா முனை எழுதியது, நான் எழுதவில்லை. அதனால்தான் அந்தப் பாட்டில் அவ்வளவு உணர்ச்சியும், வீரமும் ததும்பியிருப்பதை நீங்கள் கேட்டீர்கள், கண்டீர்கள்.

# இது உறுதி ; தாயே!

– முதலமைச்சர் கலைஞர்

கண்ணகி உன்னை எங்கள்
கண்ணெதிர் நிலைநாட்டி விட்டோம் –

பொன்னொளி மேனியே; பூம்புகார் செல்வியே!
மின்மினிகள் ஆட்சியிலே வன்முறை ஏவியே;

என்னருந் தாயே உன்னை இருட்சிறை தள்ளிவிட்டார்;
பன்னருங் கலைஞானம் பண்பாட்டுத் தமிழரெல்லாம்

பதறித் தான் துடித்திட்டார்; கதறித் தான் புலம்பிட்டார்;
பரம்பரை யுத்தம் என்று கர்ச்சித்த பாராண்டக் கூட்டம்


சிதறித் தான் ஓடுதற்குச் சிவப்புக் கறுப்புப் பட்டாளம்
செருக்களம் சேர்த்தமைத்து சேர சோழ பாண்டியரின்

சின்னமாம் உன் சிலையை மீண்டும் வண்ணமாய்
கன்னலாம் தமிழை வணங்கி அமைத்துவிட்டோம்
– கடற்கரையில்!

கண்ணகித் தாயே உன்னைக் கைகூப்பித்
தொழுகின்றோம்;
களங்கம் நமது பண்பாட்டுக்கு வரும்
போதெல்லாம் –

களச்சாவு வரினும் அஞ்சாது நாங்கள்
இன்று போல் எழுகின்றோம்; இது உறுதி!

இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நாம் தூங்கியது போதும். விழித்துக் கொள்வோம். விழித்திருக்கிறோம். இந்த விழிப்பு பூரணமான விழிப்பாக ஆகட்டும். இந்த விழிப்பு நம்மை வீர நடை போடச் செய்யட்டும். இந்த விழிப்பு நமக்கு விவேகத்தை ஊட்டட்டும். அடையாளம் காட்டியிருக்கிறார்கள் ஏற்கெனவே; இப்போது நடக்கின்ற போர், இரு பரம்பரைக்கிடையே நடக்கின்ற போர் என்று! அந்தப் பரம்பரையை அடையாளம் காணுங்கள். எது அந்தப் பரம்பரை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இறுதிப் போர் என்று சொல்லியிருக்கிறார்கள். இறுதிப் போர் தான். ஆனால் நாம் தான் வெல்வோம் என்கின்ற உறுதிப்போர் என்பதை நிலைநாட்டுங்கள் என்று கேட்டு கலைச்செல்வி கண்ணகியின் புகழ் வாழ்க, காவிய நாயகி கண்ணகியின் கீர்த்தி வாழ்க, நீதி கேட்ட மங்கை, நெடுஞ்செழியனையே தலை குனிய வைத்த மங்கை, பூம்புகார்ச் செல்வி கண்ணகியின் புகழ் வாழ்க, வாழ்க என்று சொல்லி விடைபெறுகிறேன். ❖



பண வசதியோ, ஆதரவு தர குடும்பமோ அருகில் இல்லாதபோதும் அரசை எதிர்த்து போராடி நீதியை நிலைநாட்டியவள் கண்ணகி – அது வியக்கத்தக்கது. உலக அளவில் நீதியின் அடையாளம் அவள். தனி மனித கௌரவத்தின் அடையாளச் சின்னமான கண்ணகியை புகழ்ந்து எழுதுகிறேன்.

சிலப்பதிகாரம் விவரிக்கும் அவளுடைய கதை இது. கண்ணகியும் கோவலனும் மணம் புரிந்து பூம்புகாரில் வாழ்கின்றனர். கோவலன் சிறிது காலத்துக்குப் பிறகு மாதவி என்ற நடன மங்கையுடன் சென்று விடுகிறான். ஒரு வருடத்துக்கு பின் அவன் கண்ணகியைத் தேடி வீடு திரும்புகிறான். புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்காக அவர்கள் இருவரும் 250 கிலோ மீட்டர் தூரம் நடந்து மதுரையை அடைகின்றனர். அங்கு ஆண்ட பாண்டிய மன்னன், தன் மனைவியின் கால் சிலம்பை கோவலன் திருடியதாக நினைத்து, தவறுதலாக தண்டித்துக் கொன்று விடுகிறான். கண்ணகி, பாண்டியனின் அரசவைக்கு வந்து தன் கணவன் குற்றமற்றவன் என்று வாதிட்டு நிரூபிக்கிறாள். தான் செய்த குற்றத்திற்காக பாண்டிய மன்னன் தன்னைத் தானே மாய்த்துக் கொள்கிறான். கண்ணகி மதுரை மாநகரை மூன்று முறை வலம் வருகிறாள். மதுரை நகரை எரிக்க சாபம் இடுகிறாள். ஆனால் நல்ல மனிதர்கள், விலங்குகளை விட்டு விடுகிறாள். நெருப்புக் கடவுளான அக்னி அச்செயலை செய்து முடிக்கிறான். பிறகு மேற்குத் தொடர்ச்சி மலையை நோக்கி கண்ணகி செல்கிறாள். அங்குள்ளோர் அவளை வணங்குகின்றனர்.

# கண்ணகி ஒரு உலகச் சின்னம்

**எரிக் மில்லர்**

*“கண்ணகியின் பெருமைகளை வர்ணித்திருக்கும் இந்த கட்டுரையாளர் எரிக் மில்லர், நியூயார்க்கில் பிறந்த அமெரிக்கர். தமிழ்நாட்டு குழந்தைகளின் பாட்டு, விளையாட்டு மற்றும் மொழி கற்கும் திறன் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக தமிழகத்தில் தங்கியுள்ளார். சிலப்பதிகாரத்தால் ஈர்க்கப்பட்டு, கண்ணகியின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி பூம்புகாரிலிருந்து மதுரை சென்று, அங்கிருந்து மேற்குத் தொடர்ச்சி மலை வரை நடைபயணமாக சென்றுள்ளார். பண்பாட்டுச் சின்னமாக நாம் பார்க்கும் கண்ணகியை மாறுபட்ட பார்வையுடன் அணுகுகிறார் அவர்.”*

பொள்ளாச்சிக்கு மேற்கில் உள்ள மலைப்பகுதியில் ‘முதுவன்’ என்ற ஆதிவாசி இனத்தவர் வசிக்கிறார்கள். கண்ணகி மதுரையை விட்டு வெளியேறிய போது அவளுடன் சென்றவர்களின் வம்சாவழியினராக இவர்கள் தங்களைக் குறிப்பிடுகிறார்கள். இன்றும் அவர்களுக்கு கண்ணகிதான் தெய்வம். உலகில் தெய்வங்களை பெண்ணுருவில் வைத்து வழிபடும் ஒருசில பகுதிகளில் இந்தியாவும் ஒன்று.

கண்ணகியை ஒரு பண்பாட்டு அடையாளமாக தமிழக முதல்வர் கருணாநிதி பார்க்கிறார். பண்பாட்டு அடையாளங்கள் தொடர்பாக கருணாநிதி உணர்ச்சிப்பூர்வமாக இருக்கக் காரணம், அவர் ஒரு எழுத்தாளர் – திரைக்கதை ஆசிரியர், நாவலாசிரியர், கவிஞர் மற்றும் இலக்கிய விமர்சகர். உலக வரலாற்றில் ஒருசில எழுத்தாளர்களே சிறந்த அரசியல்வாதியாக உள்ளனர். கருணாநிதியைத் தவிர இப்படி என் ஞாபகத்துக்கு வரும் ஒரே நபர், செக்குடியரசின் முதல் அதிபரான வாக்லேவ் ஹேவல் மட்டுமே! உண்மையில் திராவிட இயக்கம், அரசியல் மற்றும் பண்பாட்டோடு பின்னிப் பிணைந்த வரலாற்றைக் கொண்டது. அதன் தலைவர்கள் பலரும் ஒரே சமயத்தில் எழுத்தாளராகவும்,


THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

# In praise of Citizen Kannagi

annagi proved that even a non-native with no money and no family in
ight can fight City Hall and win her case — that is inspiring. - Eric Miller

அரசியல்வாதியாகவும் இருந்து வருகிறார்கள். இந்த மரபு நீண்ட காலம் தொடரட்டும்.

கோவலன் தவறாக தண்டிக்கப்பட காரணமான பாண்டிய மன்னன், தன்னை மாய்த்துக் கொண்ட பிறகும் மதுரையை எரித்ததற்காக கண்ணகி விமர்சிக்கப்படுகிறாள். முதலில் ஒன்றை கவனிக்க வேண்டும். 'பற்றி எரியும் இந்த நெருப்பு இந்த நகரத்தை எரிக்கும்' என்று சூரியன் கண்ணகியிடம் கூறுகிறது. மதுரையை எரிக்க கண்ணகி கூறியது உண்மை என்றபோதிலும், அவளே அந்த காரியத்தைச் செய்யவில்லை. மாறாக, நெருப்புக் கடவுளான அக்னி அதை செய்தான்.

கோவலன் இறந்துகிடப்பதைக் கண்டு கண்ணகி அதிர்ந்தபோது, மதுரை மக்கள் அவளுக்கு ஆறுதலாக இருந்தனர். தன் கணவனுக்கு நிகழ்ந்த அநீதியை யாரும் தடுக்காதது ஏன் என கண்ணகி சீறுகிறாள். 'இங்கு பெண்கள் இருக்கிறார்களா? நல்லவர்கள் இருக்கிறார்களா? தெய்வம்தான் இருக்கிறதா? என கண்ணகி கோபத்தோடு கேள்விகள் எழுப்புகிறாள்.

இளங்கோவடிகள் 1400 ஆண்டுகளுக்கு முன் சிலப்பதிகாரத்தை எழுதினார். கண்ணகி கேட்ட கேள்விகளுக்கு மதுரை மக்கள் என்ன பதில் அளித்தனர் என்று அதில் இல்லை. மேலும், ஒரு நகரத்தின் சூழ்நிலை, நாட்டை ஆளும் மன்னனின் நீதி வழுவாமையை பிரதிபலிப்பதாக அமையும் என்பது ஒரு நடைமுறை பாரம்பரியம். ஒரு நகரத்தை எரிப்பது என்பது, அதை தூய்மைப்படுத்துவதன் அடையாளம். கெட்டவை எல்லாம் ஒழிந்து போக, நல்லவை மீண்டும் பிறப்பெடுக்கும். இவற்றையெல்லாம் தவிர்த்துப் பார்த்தால், மதுரையை எரிக்க சாபமிட்டது கண்ணகியின் மனிதாபிமானத்தை சித்தரிப்பதாக இல்லை என்று சொல்லலாம்.

தனக்கு அநீதி இழைத்த கணவனுக்காக நீதி கேட்டுப் போராடியது பேதமைத்தனம் என்ற விமர்சனமும் கண்ணகி மீது உள்ளது. இது வாழ்க்கையின் புரியாத புதிர்களில் ஒன்று. கணவன் எவ்வளவு தவறுகள் செய்தாலும், மனைவி அவன் மீது ஆழமாக அன்பு செலுத்திக் கொண்டேதான் இருக்கிறாள். பாண்டிய அரசியின் கால் சிலம்பை கோவலன் திருடவில்லை. ஆனால், அதற்கு முன்பு அவன் மிகப் பெரிய தவறு செய்தான். அவன் தன் மனைவியின் இதயத்தை நொறுக்கி விட்டு, வேறொரு பெண்ணைச் சேர்ந்தான். அவன் திருந்திய நேரத்தில், கர்ம வினை அவனுக்கு தண்டனை தந்துவிட்டது.



எரிக் மில்லர்

பெண்களுக்கு கண்ணகி ஒரு முன்னுதாரணமாக காட்டப்படுவதைப் பற்றி பலர் கேள்வி எழுப்புகிறார்கள். கற்பு விஷயத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனி அளவுகோல் ஏன் என்ற கேள்வி அது. ஆண்கள் அப்படி இப்படி வாழ்ந்தாலும், தங்கள் மனைவி அப்படி இருக்கக்கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஆண்கள் மற்ற பெண்களிடம் தகாத உறவு வைத்துக் கொண்டு, பால்வினை நோயால் பாதிக்கப்பட்டு, பின் அந்த நோயை மனைவிக்கும் பரப்பி விடுவது என்பது இன்றைய வாழ்க்கை நிலையில் உள்ள சோகமான உண்மையாகும்.

ஆனால் கண்ணகி இன்றைய உலக சூழலுக்கு பொருத்தமான உதாரணம். அவள் மிக முக்கியமானவளாக உலக மக்களின் மனசாட்சிக்கு தெரிய ஆரம்பித்துள்ளாள். கண்ணகி என்ற பெண்ணைவிட கண்ணகி என்ற தனி மனுஷியை நான் போற்றுகிறேன். என் சொந்த நகரமான நியூயார்க்கில் ஒரு எதார்த்தமான பழமொழி உண்டு 'யு கான்ட் ஃபைட் சிட்டி ஹால்' என்பதுதான் அது. 'அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி ஜெயிக்க முடியாது' என்பது இதன் அர்த்தம். ஆனால் சாதாரண மனிதனும் நீதி பெற முடியும் என்பதை கண்ணகி நிரூபித்தாள். அதுதான் இந்த வரலாற்றின் முக்கிய கரு. ஒரு தனி மனுஷி – பண வசதி இல்லாமல், தன் குடும்பத்தினர் யாரும் ஆதரவுக்கு அருகில் இல்லாத நிலையில், அந்நிய மண்ணில் – நாட்டின் மிக உயர்ந்த அதிகார மையமான மன்னனின் அவைக்கு சென்று, வாதாடி தன் வழக்கை வென்றாள். அது மிகப் பெரிய செயல்.

உலகின் எல்லா நாட்டு அரசியல் தலைவர்களும் கண்ணகியைப் பற்றியும் பாண்டிய மன்னனைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கண்ணகியைத் தவிர, சிலப்பதிகாரத்தின் இன்னொரு முக்கிய கதாபாத்திரம் பாண்டிய மன்னன். தவறு செய்துவிட்டோம் என்று உணர்ந்தவுடன் அவன் தன்னையே தண்டித்துக் கொண்டான். ஆட்சி புரிபவர்கள் தங்களை தண்டித்துக் கொள்வது என்பது தென்னிந்தியாவின் பண்பாடு. உதாரணமாக, ஒரு பசுவின் கன்றை தேர் ஏற்றிக் கொன்ற மகனையே தண்டித்த மன்னனைப் பற்றிய கதையும் இங்கு உள்ளது. நீதி நெறி வழுவா பாதையில் பயணிப்பதில், இன்று இந்தியா உலகத்துக்கே முன்னோடியாக இருப்பதற்குக் காரணம் இந்த பாரம்பரியம்தான்.

*நன்றி : 'தி இந்து'*

*தமிழாக்கம் : தினகரன் (17.06.2006)*

# தமிழக அரசு திறன்மிக்க, அக்கறை கொண்ட நிருவாகத்தை மக்களுக்குத் தரும்

மேதகு தமிழக ஆளுநர்


திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா**

அவர்கள்

**24.5.2006** அன்று

சட்டப்பேரவையில்

ஆற்றிய உரை



மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,

வணக்கம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த பதின்மூன்றாவது சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஜனநாயகத்தின் அடையாளச் சின்னமான இப்பேரவையின் உறுப்பினர்களாக தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்கள் அனைவரையும் வரவேற்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

2. நீர், நெருப்பு, மண், விண், காற்று ஆகியவை உலகிற்கும், உயிரினங்களுக்கும் தேவைப்படும் பஞ்ச பூதங்களின் பட்டியலில் இருப்பினும் – இவற்றில் காற்று எப்படி கண்ணுக்குத் தெரியாமல் அனைத்திலும் கலந்திருக்கிறதோ; அவ்வாறு சமுதாயத்தின் ஒவ்வொரு அசைவிலும், அரசியலும் கலந்திருக்கிறது. அந்தக் காற்று தூய்மையானதாகவோ அல்லது தூய்மையற்றதாகவோ இருப்பது போல, அரசியலும் ஜனநாயக மாண்புடையதாகவோ சர்வாதிகாரத் தன்மை கொண்டதாகவோ இருவகைப்படுமெனினும், அதற்காக அரசியல் என்ற சொல்லே கூடாது என அறவே வெறுத்து ஒதுக்கி விடாமல்; ஏற்றுக் கொள்ளத்தக்கதான ஜனநாயக அரசியலை இந்தியத் திருநாடு போற்றிப் பாதுகாத்து வருகிறது. அதிலும்

குறிப்பாகவும், சிறப்பாகவும் மக்களாட்சித் தத்துவமெனும் ஜனநாயகக் கோட்பாட்டினை பழம்பெரும் சோழ மன்னர்கள் காலத்திலேயே குடவோலை முறையின் வாயிலாக தமிழ் மக்கள் கடைப்பிடித்தார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றாக 'உத்திரமேரூர்' கல்வெட்டுகள் இப்போதும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஊழலற்றவர்களாக, நாணயமும், ஒழுக்கமும் உள்ளவர்களாக அக்கால ஊராட்சி நிருவாகத் தலைவர்களும், உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வரைமுறைகள் வகுக்கப் பெற்று; அத்தகுதி பெற்றவர்களே போட்டியிடவும் – பொதுப்பணி ஆற்றிடவும் உரிமை பெற முடிந்தது என்பதை – தமிழகத்தின் பழைய கல்வெட்டுகள் – எடுத்துக் காட்டுவதிலிருந்து, முடியாட்சி முறையிலிருந்து முற்றிலும் குடியாட்சி முறைக்கு மாறி விட்ட நாட்டுக்கு எவ்வளவு தூய்மையானதும், துல்லியமானதுமான ஜனநாயக அரசியல் கோட்பாடு தேவைப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அந்தக் கோட்பாட்டை நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் பெற்று அரசியல் பண்பாட்டின் வேர்களாகவும், விழுதுகளாகவும் திகழ்வோம் என்ற உறுதிப்பாட்டுடன் இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் செயல்பட வேண்டுமென்ற விழைவுடனும்; செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கையுடனும்; இந்த அரசின் எதிர்கால செயல் திட்டங்களுக்கான வழி காட்டும் கொள்கைக் குறிப்பு ஏடாக இந்த உரையை உங்கள் முன் வைக்கிறேன்.

3. நமது முக்கிய குறிக்கோளான மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி (Autonomy for the States; Federalism at the Centre) என்ற நிலையை அரசியல் சட்ட மாற்றத்தின் மூலம் எய்திடும் வரையில் மக்கள் நலனைப் பாதுகாக்கும் வண்ணம் செயல்படுவதற்கு, மத்திய – மாநில அரசுகளுக் கிடையே சுமுகமான உறவு நிலவிட வேண்டியது இன்றி யமையாததாகும். மத்திய அரசுடன் மோதல் போக்கைத் தவிர்த்திட வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபோது குறிப்பிட்டார்கள். அண்ணா வழியில் உறவுக்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுக்கும் இவ்வரசு மாநிலத்திற்கு பயன் தரக்கூடிய அணுகுமுறையைப் பின்பற்றி, மத்திய அரசிடமிருந்து தேவையான திட்டங்களையும், உதவிகளையும், உரிமைகளையும் வாய்மையுடன் வாதாடிப் பெறும்.

"தமிழ்நாடு அமைதி நிறைந்த ஜனநாயக பூந்தோட்டமாகத் திகழும் வகையில், இவ்வரசு சட்டம் ஒழுங்கை விழிப்போடு பேணிப் பாதுகாத்திடும்."

4. மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அமைதியான வாழ்க்கைக்கும் சட்டம் ஒழுங்கு முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு அமைதி நிறைந்த ஜனநாயக பூந்தோட்டமாகத் திகழும் வகையில், இவ்வரசு சட்டம் ஒழுங்கை விழிப்போடு பேணிப் பாதுகாத்திடும். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமத்துவமும் சமநீதியும் கிடைத்திடும் நிருவாகத்தை வழங்கிடும்.

5. நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட, தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி விகிதம் சரிந்து வீழ்ந்துள்ளது. இதனை மீட்டெடுத்து வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

6. தமிழகத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பின்போது மக்களுக்கு உடனடியாக உதவிடும் வகையில், வேறு எந்தவொரு மாநிலத்திற்கும் தரப்படாத அளவிற்கு ரூபாய் 1,000 கோடியை மத்திய அரசு முன் பணமாக வழங்கியது. ஆறுகள், ஏரிகள், சாலைகள் போன்ற பொதுக் கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாகச் சீரமைக்கும் பணிகளை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் இந்த அரசு மேற்கொள்ளும்.

7. வெள்ளம் பாதித்தும் – வறட்சி வாட்டியும் – மாறி மாறி விளைந்த வேதனைகளால் விவசாயப் பெருங்குடி மக்களின் எதிர் காலம் வினாக்குறியானதுடன்; இருண்ட காட்டுக்குள் திசையறியாமல் திக்குமுக்காடித் தவித்திட; அவர்கள் பட்ட கடன்களும் தலைக்கு மேல் தொங்கும் கொடுவாளாகப் பயமுறுத்திக் கொண்டிருக்க; அக் கொடுமையிலிருந்து அந்த விவசாயிகளை விடுவித்திட இந்த அரசு தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, ஏறத்தாழ ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் சுமையை பதவியேற்ற நாளிலேயே அறவே ரத்து செய்து உழவர் தம் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றி வைத்துள்ளது.

8. கடந்த ஆட்சியின் 2001–2002ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழகத்தில்

உள்ள 20 இலட்சம் ஹெக்டேர், அதாவது 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை; தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு விவசாயத்துக்குப் பயன்படும் அளவுக்கு மேம்படுத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வழங்கிட முறையான ஏற்பாடுகள் விரைவில் மேற் கொள்ளப்படும்.

9. விளைவிப்போருக்கும், வாங்கி நுகர்வோருக்கும் மகிழ்ச்சியூட்டிடக் கூடிய வகையில் பயனளித்துக் கொண்டிருந்த 'உழவர் சந்தை' திட்டம்; முன்பிருந்த வாய்ப்பு வசதிகளுடன் மீண்டும் தொடர்வதற்கு இந்த அரசில் வழி வகை காணப்படும்.

10. தி.மு.க. ஆட்சியில் 1990ஆம் ஆண்டு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட்ட, விவசாயத்திற்கான இலவச மின்சாரத் திட்டம் – இடையே சில தடைகளைக் கடந்து இப்போது நடைமுறையில் இருப்பது; தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

11. அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் இன்றைய முதலமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது 1968ஆம் ஆண்டு தொடங்கிய காவிரி நதி நீர்ப் பங்கீடு பேச்சுவார்த்தை; இடையில் தமிழ்நாட்டிலும் மற்றும் கர்நாடகம், கேரளம், புதுவை மாநிலங்களிலும் பல முதலமைச்சர்கள் பொறுப்புக்கு வந்து மத்திய அரசின் அமைச்சர்களின் முன்னால் பேச்சுவார்த்தை நடத்தியும் இதுவரையில் முழுமையாக நிறைவு பெறாத நிலையில் 38 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை எதிர்பார்த்தும் – அந்தத் தீர்ப்பு நல்ல தீர்ப்பாக அமைந்து அதனை நடைமுறைப்படுத்தும் காலம் கனிந்திடும் என்ற எதிர்பார்ப்புடனும்; அதற்குள்ளாக நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு முழுமையாக செயல்படுத்தப் படவும் மத்திய அரசு முனைப்பு காட்ட வேண்டு மென்றும் இவ்வரசு வலியுறுத்துகிறது. முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை அதிகரிக்க அனுமதித்துள்ள உச்சநீதிமன்றத்தின் ஆணையினை நடைமுறைப்படுத்த ஆவன செய்யப்படும். மாநிலத்தின் வடமாவட்ட விவசாயிகளைப் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில் ஆந்திர மாநிலத்தில் பாலாற்றின் குறுக்கே மேற்கொள்ளப்பட்டு வரும் அணைகட்டும் பணியைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.




12. கடந்த 1996–2001 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தின்போது, உலக வங்கி உதவியுடன் கூடிய நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் அனைவரும் பாராட்டும் வண்ணம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நீர்ப்பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்வள மேலாண்மைத் திட்டத்தை (Irrigated Agriculture Modernisation and Water Resource Management) விரைவில் செயல்படுத்தத் தேவையான நிதி உதவியும், அனுமதியும் விரைவில் வழங்கிட உலக வங்கியை அணுகி இவ்வரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

13. நீர்வளப் பற்றாக்குறை மாநிலமான தமிழகத்திற்கு, தென்னக நதிகளை இணைக்கும் திட்டம் ஒன்றே முதன்மையானத் தீர்வாக இருப்பதால், அதனை விரைந்து செயல்படுத்துமாறு இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

14. உலக வர்த்தக அமைப்பின் டோகா (Doha) மாநாட்டுச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது, மத்திய அரசின் முன்னாள் வர்த்தகத்துறை அமைச்சர் மறைந்த முரசொலி மாறன் அவர்கள் விடுத்த அறைகூவல்தான், இந்திய விவசாயிகளின் நலனைப் பாதுகாத்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வரும் பணியை இத்தருணத்தில் நினைவுகூர்ந்து, எதிர்காலத்தில் உலக வர்த்தக அமைப்பின் கீழான எந்த ஒரு ஒப்பந்தத்தினாலும் வேளாண் தொழில் பாதிக்கப்படாமல் பாதுகாக்குமாறு மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

15. அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டோருக்கான வாரியங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதுடன், மேலும் பனை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் நலனுக்காக பனைத் தொழிலாளர் நல வாரியம் மீண்டும் அமைத்து,

> “அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சுதந்திரமாக சிந்தித்தல் – யாரும் எம்மதத்தையும் பின்பற்றி வழிபடுதல் – ஆகிய அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் வழங்குவதில் இந்தியா உறுதியாக இருக்கிறது”

அவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

16. தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு; மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கப்பட வேண்டும் என்பதும் மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதும், இவ்வரசின் குறிக்கோளாக இருந்து வருவதை செயல்படுத்திடும் வகையில், அரிசிக்கான குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பத்தினருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2/– என்ற விலையில் தரமான அரிசி பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் ஜூன் மாதம் 3ஆம் தேதி முதல் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

17. புதிதாகக் குடும்ப அட்டை பெற்றுள்ளவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்க மத்திய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு பெற்றிட இவ்வரசு ஆவன செய்யும்.

18. தமிழர்களின் நீண்டகாலக் கனவை நனவாக்கும் வண்ணம், திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலுடன், மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, கடந்த ஆண்டில் மத்திய அமைச்சர் மாண்புமிகு அர்ஜூன் சிங் அவர்களின் ஆக்கப்பூர்வ ஆதரவுடன் தமிழ்மொழியைச் செம்மொழியாக அங்கீகரித்துப் பெருமைப்படுத்தியுள்ளது. தொல்காப்பியர், திருவள்ளுவர் பெயர்களால் செம்மொழி விருதுகள் வழங்கப்படுவதற்கான இவ்வரசின் கோரிக்கை வலியுறுத்தப்படும். மேலும் தமிழ்மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கையை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும். குமரிமுனையிலுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை அருகில் சென்று காண்பதற்கான படகுப் போக்குவரத்து நவீனப்படுத்தப்படும். மேலும் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்குமாறு மத்திய அரசை தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தும். தமிழர்களுடைய பண்பாட்டுச் சின்னமான கண்ணகியின் சிலை மீண்டும் அதே இடத்தில் கடற்கரை சாலையில் வரும் ஜூன் திங்கள் மூன்றாம் நாள் மாலையில் நிறுவப்படப் பணிகள் தொடங்கப் பெற்றுள்ளன.

19. பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் அனைவரும் வரும் கல்வி ஆண்டு முதல் கட்டாயமாக தமிழை ஒரு பாடமாகப் பயின்றிட எதிர்ப்படும் இடையூறுகளைக் களைந்து, விரைவில் கல்வியாளர்களைக் கலந்து பேசி ஆணை பிறப்பிக்க இவ்வரசு உறுதி அளிக்கிறது.

20. பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை 15ஐ கல்வி வளர்ச்சி நாளாக பள்ளிகளில் விழா எடுத்துக் கொண்டாடுவதென்ற இவ்வரசின் ஆணையையொட்டி, அந்நாள் முதல் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை (திங்கள், புதன்கிழமைகளில்) முட்டை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

21. தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தவாறு கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் அரசுப் பள்ளிகளில் தற்போது ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இனி அந்த முறை மாற்றப்பட்டு, கால முறை ஊதியம் வழங்கப்படும். அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள அனைத்துக் காலியிடங்களும் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பப்படும். வரும் மூன்றாண்டுகளில் படிப்படியாக அனைத்து பள்ளிகளுக்கும் கணினி வழங்கப்படும்.

22. தொழிற்கல்விக்கான அனுமதி முறையில் தற்போது நிலவிவரும் குழப்பங்களை அகற்றி மாணவர்களைச் சேர்க்கும் முறை விரைவில் நெறிமுறைப்படுத்தப்படும்.

23. தொழிற்கல்விப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு மாணவர்களுக்கு தேவையற்ற ஒரு சுமையாகவும், செலவுமிக்கதாகவும் உள்ளது. எனவே, நகர்ப்புற மாணவர்களுக்கும் – கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சமவாய்ப்பை அளிக்கும் பொருட்டு நுழைவுத் தேர்வை வரும் கல்வியாண்டான 2007–2008 முதல் உறுதியாக அகற்றிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றிப் பரிந்துரைக்கக் கல்வியாளர்கள் கொண்ட குழு ஒன்றை இவ்வரசு அமைத்திடும்.

24. தற்போது அரசுக் கல்லூரிகளில் வசதியுள்ள மாணவர்கள் மட்டுமே படிப்பதற்கு வாய்ப்பாக உள்ள 'சுயநிதிப் பாடப் பிரிவுகள்' பொதுவகையாக மாற்றப்பட்டு – மற்றப் பாடப் பிரிவுகளைப் போலவே கட்டணமும் நிர்ணயிக்கப்படும்.

25. அரசுக் கல்லூரிகளில் மருத்துவம், பொறியியல் ஆகிய படிப்புகளுக்கு கடந்த ஆட்சியில்

பல மடங்காக உயர்த்தப்பட்ட கட்டணத் தொகை குறைக்கப்படும்.

26. அரசியல் சட்டத்தின் 93வது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து, சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நீங்கலாக மற்ற அரசு உதவி பெறாத அனைத்து தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு ஊன்றுகோலாக விளங்கிடும் இட ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்ய மிக விரைவில் சட்டம் இயற்றப்படும்.

27. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சியை வரவேற்று ஊக்கமளித்திடும் வகையில் இந்த கூட்டத் தொடரிலேயே உரிய தீர்மானம் கொண்டு வரப்படும்.

28. ப்ளஸ் 2 மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்திற்காக 2001–2002ஆம் ஆண்டில் ரூபாய் 20 கோடியும், 2002–2003ஆம் ஆண்டில் ரூபாய் 6 கோடியும் மத்திய அரசிடம் இருந்து நிதி உதவி பெற்று, அதன் பின்னர் கடந்த ஆட்சியில் மாநில அரசின் நிதியிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்த இலவச மிதிவண்டி வழங்கும் அத்திட்டத்தை இந்த அரசும் தொடர்ந்து நிறைவேற்றும்.

29. கடந்த ஆட்சியில் மத மாற்றத் தடைச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு; அதைத் திரும்பப் பெற வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று அதன் காரணமாக 18–5–2004 அன்று ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் அந்தச் சட்டம் திரும்பப் பெறப் பட்டாலும்; அதற்கான ஒப்புதலை சட்டப் பேரவையில் வைத்துப் பெற்றிடாத காரணத்தால்; அந்த மத மாற்றத் தடைச் சட்டம் இன்னமும் ரத்து ஆகாத நிலையில் உள்ளது. அண்மையில் இந்திய அரசு ஒரு நேர்வில்; "அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சுதந்திரமாக சிந்தித்தல் – யாரும் எம்மதத்தையும் பின்பற்றி வழிபடுதல் – ஆகிய அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் வழங்குவதில் இந்தியா உறுதியாக இருக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளதற்கேற்ப; இந்த அரசு, கடந்த கால அரசினால் கொண்டு வரப்பட்ட மத மாற்றத் தடைச் சட்டத்தை முறைப்படி திரும்பப் பெறும் சட்ட முன் வடிவை இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரும்.

30. தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சிலுள்ள முள்ளை அகற்றிடும் வகையில் – உரிய பயிற்சியும் தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் இந்து சமயத் திருக்கோவில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கைக்கு இவ்வரசு செயல்வடிவம் கொடுத்திட முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ள அருஞ்செயல் அனைவராலும் பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்த ஆணையை செயல்படுத்திட பயிற்சியும் முயற்சியும் விரைவில் தொடங்கப் பெறும்.

31. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது சட்ட அங்கீகாரம் தந்து, தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையிலுள்ள சுயமரியாதைத் திருமணச் சீர்திருத்த சட்டத்தைத் தேசிய அளவில் செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசிடம் இவ்வரசு வலியுறுத்தும்.

32. முதலீட்டாளர்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் அவர்தம் நண்பனாக இவ்வரசு செயல்பட்டு, அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும். அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல சிறுதொழில்களை ஊக்குவிக்கும் வகையில், மாநிலத்தில் தொழில்வளத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அனைத்து சிறு தொழில்களுக்கும் முன்னர் அளிக்கப்பட்டு வந்த முதலீட்டு மானிய நிதியுதவித் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

33. தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியையும் பன்முகப் பரிமாணங்களையும் கருத்தில் கொண்டு – அதற்கேற்பப் புதிய கொள்கை ஒன்றை வகுத்து – அத்துறைக்கு ஊக்கமளித்து மென்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியையும் வேலைவாய்ப்பையும் பெருக்கிட இவ்வரசு பாடுபடும்.



34. அரசு மருத்துவமனைகளிலுள்ள காலியிடங்கள் அனைத்தும் காலமுறை ஊதிய அடிப்படையில் உடனடியாக நிரப்பப்படும். கிராமங்களுக்கு நேரில் சென்று மருத்துவ வல்லுநர் குழுக்களால் நடத்தப்பட்டுவந்த 'வருமுன் காப்போம் திட்டம்' மீண்டும் நடைமுறைக்கு வரும்.

35. மனிதக் கழிவை மனிதனே துப்புரவு செய்து அகற்றும் இழிந்த வழக்கத்திற்கு முடிவு கட்ட இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும்.

36. மாநிலத்தில் உள்ள சாலைகளைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளிக்கும். சாலைகளைப் பராமரிப்பதுடன், அதிகப் போக்குவரத்து உள்ள சாலை வழித் தடங்களை அகலப்படுத்தவும், நிலை உயர்த்தவும் தேவைப்படும் முதலீடுகளை இவ்வரசு செய்யும்.

> "கிராமங்களில் உள்ள முக்கியத் தெருக்கள் படிப்படியாகக் கான்கிரீட் சாலைகளாக மாற்றப்படும்."

37. இவ்வரசு, ஊரகப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தேவையான கவனம் செலுத்தும். கிராமங்களில் உள்ள முக்கியத் தெருக்கள் படிப்படியாகக் கான்கிரீட் சாலைகளாக மாற்றப்படும். ஐநூறுக்கு மேற்பட்ட-மக்கள் தொகை கொண்ட ஊரகப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். கிராமங்களில் மக்கள் பொதுவாகக் கூடும் மையப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படும்.

38. வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் பல்வேறு தேவைகளை முழுவதும் நிறைவு செய்யும் வகையில் இப்பெருநகருக்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். அத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னைக்கு அருகில் புதிய புறநகரங்கள் (Satellite Towns) அமைக்கப்படும். இதுபோன்றே மற்ற மாநகராட்சிப் பகுதிகளுக்கு அருகிலும் புற நகரங்கள் அமைக்கப்படும். இவ்வரசால் தொடங்கப்பட்டு பின்னர் பாதியில் நின்றுவிட்ட பெரம்பூர் மேம்பாலத்திட்டம் விரைவில் நிறைவு செய்யப்படும். சென்னை மாநகரத்தில் வளர்ந்து வரும் போக்குவரத்தைக் கையாள டெல்லி, கொல்கத்தா போன்ற பெரு நகரங்களில் அமைந்துள்ளவாறு மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும். தொடர்ந்து பெருகிவரும் விமானப் பயணியர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, சென்னை விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு இவ்வரசு மத்திய அரசைக் கோரும்.

39. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்திருந்த நிதி உதவியைப் பெற்று கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் சென்னையில் விரைவில் செயல்படுத்தப்படும். மேலும் மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் கழிவுநீர் அகற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

40. மாநிலமெங்கும் மின்வெட்டின்றித் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படுவதை இவ்வரசு உறுதி செய்யும். மின்சாரத்திற்கான தேவை நாளுக்குநாள் உயர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வடசென்னை மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களில் கூடுதல் மின் உற்பத்தி அலகுகள் நிறுவப்படும்.

41. பொதுமக்கள் தினந்தோறும் பெருமளவில் பயன்படுத்தும் பொதுத்துறை போக்குவரத்து நிறுவனங்கள் திறம்படச் செயல்படுவதற்கு இவ்வரசு எப்போதுமே அளித்து வந்துள்ள முன்னுரிமை தொடரும். இவ்வரசால் முன்பு அறிமுகப்படுத்தப்பட்டு, மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற 'மினி பஸ்' திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

42. இவ்வரசு, நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் தொழிலாளர்களின் நலனில் எப்போதும் மிகுந்த அக்கறை கொண்டு உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளையும், அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய சலுகைகளையும் பாதுகாக்கும் காவலனாகத் திகழும்.

43. வணிகர் நலன் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட வணிகர் நல வாரியத்தின் பணிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் களைந்து, வணிகர் நலத்திட்டங்கள் மீண்டும் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

44. அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களின் நலனில் இவ்வரசு எப்போதுமே மிகுந்த அக்கறை காட்டி வந்துள்ளது. அரசின் திட்டங்களை

நிறைவேற்றுவதிலும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியிலும் அரசு அலுவலர்களின் இன்றியமை யாமையை நன்கு உணர்ந்துள்ள இவ்வரசு, அரசு அலுவலர்களின் நலனைத் தொடர்ந்து பாதுகாக்கும். எதிர்காலச் சமுதாயத்தைச் சீராகச் செதுக்கிடும் இன்றைய சிற்பிகளாம் ஆசிரியர்களின் நலனை உரிய முறையில் பாதுகாக்க முனைந்திடும். அரசு அலுவலர் களுக்கு எதிரான 'டெஸ்மா' சட்டம் முற்றிலும் நீக்கப்படும். அரசின் பல்வேறு துறைகளில் உள்ள காலியிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேலை நியமனத் தடை ஆணையினால் பாதிப்புக்குள்ளான இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இவ்வரசு, அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அதிகபட்ச வயது வரம்பை மேலும் ஐந்தாண்டுகள் வரை நீட்டிக்கும்.

45. ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதிதிராவிடர்களுக்கும் கிடைத்திட வழி வகை செய்யப்படும்.

46. சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர் களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு ஏற்படுத்து வதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

47. தமிழ்நாட்டில் நாள்தோறும் அதிக அளவில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், அதன்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் ஒட்டுமொத்தச் சுற்றுலாத் திட்டம் ஒன்று வகுக்கப்படும்.


48. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவு நாளான ஜூலை 21 அன்று – சென்னையில், கடற்கரை காமராஜர் சாலையில், காவல்துறை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக அவரது திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

49. மகளிருக்குப் பொழுது போக்காகவும், அவர்கள் பொது அறிவு பெற்றிடவும் வீடு தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், அறிஞர் அண்ணா பிறந்த, தந்தை பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களையொட்டி இவ்வாண்டே தொடங்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்படும்.

50. ஜவுளி வர்த்தகத் துறையில் உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் முழுப்பயனையும் தமிழகம் பெற்றிடும் வகையில் தமிழ்நாட்டின் நூல், துணி மற்றும் ஆயத்த ஆடைகளின் ஏற்றுமதியைப் பெருக்கவும், நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இவ்வரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

51. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு, இச்சங்கங்கள் ஜனநாயக முறைப்படி செயல்பட வழிவகை செய்யப்படும். தற்போதுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மூன்று அடுக்கு முறையினால் நிருவாகத்தில் ஏற்படும் குறைபாடுகளை அகற்றத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வர மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும்.


52. உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதும், தொடர்ந்து கவலை அளித்துக் கொண்டிருப்பதுமான இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை, அமைதி பேச்சுவார்த்தையின் மூலம்



விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்களின் இந்த அரசு விரும்புகிறது.

53. கச்சத்தீவு அருகில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமைகளை நிலைநாட்டவும் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களையவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் குளிர்பதன நிலையங்கள் உருவாக்கப்படும்.

54. தமிழக மக்களின் நீண்ட காலக் கனவான சேது சமுத்திரத் திட்டம், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் ரூபாய் 2,427 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம்




குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு பெறுவதற்கு தங்குதடையின்றி அனைத்து ஒத்துழைப்பையும் இவ்வரசு மத்திய அரசுக்கு வழங்கும்.

55. தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, ஏழைப் பெண்களின் திருமணத்திற்கான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது, மீண்டும் செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூபாய் 10,000/–லிருந்து ரூபாய் 15,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

56. 1989 ஆம் ஆண்டு மகளிர் சுயஉதவிக் குழுக்களை அமைத்து முன்னோடியாகவும், அவை திறம்பட செயல்படுவதற்கு ஒரு தூண்டுகோலாகவும் தி.மு.க. அரசு இருந்து வந்துள்ளது. ஆல்போல் பரந்து இருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இம்மாநிலத்தில் மேலும் வளர்ந்திடவும், வலுப்பெறவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொள்ளும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட 'பூமாலை' திட்டம் மீண்டும் சிறந்த முறையில் இயங்கிட வழிவகை செய்யப்படும். தற்போதுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போலவே வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் திட்டம் விரைவில் துவங்கப்படும்.

57. சட்டமன்ற மேலவையைக் கொண்டு வரத் தேவையான அரசியல் சட்டத் திருத்தம் செய்ய இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

58. இந்த ஆண்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இருப்பதாலும், பருவ மழை தொடர்கின்ற நல்ல அறிகுறி தென்படுவதாலும், காவிரிப் பாசனப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழத்தக்க வகையில், ஜூன் 12ஆம் தேதி பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது என்பதைத் தெரிவிப்பதில் இவ்வரசு மகிழ்ச்சியடைகிறது. எனினும், பாசனத்திற்கு வசதியாக ஆறுகள், வாய்கால்களில் தூர்வாரும் வேலையைத் தொடங்கி துரிதப் படுத்தும் பணியை விரைந்து மேற் கொண்டுள்ளோம்.

59. தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத புதுமையாக – புதிய அமைச்சரவை பதவி ஏற்றுக்கொண்ட உடனேயே – அதே அரங்கத்தில், கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக் கிடையே, தி.மு.கழகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் அடையாளமாக – மூன்று கோப்புகளில் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் கையெழுத்திட்டு, மக்களாட்சி வரலாற்றில் மாபெரும் அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருப்பது என்றென்றும் நமது நினைவை விட்டகலாத நிகழ்ச்சியாகும்.

60. தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் நற்பணி புரிந்திட மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் ஜனநாயகத்திற்கு வலுவூட்டி, மக்களின் துயர் துடைத்து அவர்தம் நல்வாழ்வுக்குப் பாடுபடுவீர்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. போற்றிப் பாதுகாத்திட வேண்டிய புகழ்மிக்க மரபுகளைக் கொண்டுள்ள இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒளியூட்டக் கூடிய உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தி மன்றத்தின் மாண்புகளை நிச்சயமாக பின்பற்றுவீர் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயப்பாடு இல்லை. "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்று சூளுரைத்துப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, மேலும் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிதி நிலை அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து படிப்படியாகவும் நிறைவேற்றுவதுடன் மாநிலம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைவதற்கும், அவ்வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைவதற்கும் திறன் மிக்க, அக்கறை கொண்ட நிருவாகத்தை, தமிழக மக்களுக்குத் தரும் என்ற உறுதிமொழியோடு இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்! ஜெய்ஹிந்த்!!



# வாக்குறுதி நிறைவேற்றும் வாய்மை!

தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி**

அவர்கள்

30.5.2006 அன்று ஆற்றிய உரை

உரையாற்றியவர்கள் எல்லோரும் நன்றி கூறுகின்ற ஒரு படலத்தை, நிறைவேற்றிவிட்டு பேச்சைத் தொடங்கியது போல, நானும் என்னுடைய உரையைத் தொடங்க விரும்புகின்றேன். முதலமைச்சராகிவிட்ட காரணத்தால், நான் என்னுடைய சேப்பாக்கம் தொகுதி மக்களை மறந்துவிட முடியாது. என்னை இந்த அவையிலே ஒரு உறுப்பினராக வருவதற்கு வழி செய்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு ஆளுகின்ற கட்சியின் தலைவனாகவும் ஆக்குவதற்கு காரணமாக இருந்த சேப்பாக்கம் தொகுதி மக்களுக்கும், செந்தமிழ் நாட்டு வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல – இந்தியாவினுடைய தலைசிறந்த தலைவர்களில் ஒருவராக மலர்ந்து கொண்டிருக்கின்ற திருமதி சோனியா காந்தி அவர்களுடைய *(மேசையைத் தட்டும் ஒலி)* வழிகாட்டுதலோடு; பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடைய *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆற்றல்மிகு ஆட்சித் திறனோடு நடைபெறுகின்ற ஆட்சியாயினும், கட்சியாயினும், அந்த

காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய துணையும் – அதேபோல, தமிழகத்திலே சமூக நீதிக் காவலராக விளங்குகின்ற ஐயா டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய *(மேசையைத் தட்டும் ஒலி)* பாட்டாளி மக்கள் கட்சியினுடைய துணையும், இடதுசாரி கொள்கை களை, என்னுடைய இதயத்திலே பதிய வைத்துக் கொள்வதற்கு வழி வகுத்துக் கொண்டிருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளினுடைய துணையும் *(மேசையைத் தட்டும் ஒலி)* மதச்சார்பற்ற நிலை என் மனதில் என்றென்றும் இருப்பதற்கு வழிகோலிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் ஆகிய தோழமைக் கட்சிகளுடைய துணையும் என்னை இந்த மாமன்றத்திலே ஆட்சித் தலைவராக அமரச் செய்திடத் தக்க தகுதியை வழங்கியிருக்கின்றன. அந்தக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும், தொண்டர் களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய உயிரனைய அன்பு உடன்பிறப்புகளுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த மாமன்றத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆளுநர் உரையில் இதுவரை கட்சிகளின் தலைவர்கள் உட்பட 26 பேர் பேசியிருக்கின்றார்கள். நான் 27ஆவது பேர்வழியாக பேசிக் கொண்டிருக் கின்றேன். புராணீகர்கள்; 27 நட்சத்திரம் என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். 27 நட்சத்திரங்கள் சிறப்புக்குரியவை என்று, அவர்களைப் பொறுத்து, அந்த வகையிலே நான் 27ஆவது பேர்வழியாக அந்த உரைகளுக்கு எல்லாம் விளக்கம் அளிக்கின்ற நிலையைப் பெற்று இருக்கின்றேன். அந்த 26 பேர்களில், காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசியவர்கள் 6 பேர், ஆளுங்கட்சியின் சார்பாக பேசியவர்கள் 5 பேர், அகில இந்திய அ.தி.மு.க சார்பாக பேசியவர்கள் 2 பேர். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக பேசியவர்கள் 4 பேர். ம.தி.மு.க. சார்பாக பேசியவர் ஒருவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 2 பேர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பேசியவர்கள் 2 பேர், விடுதலை சிறுத்தைகள் சார்பாக பேசியவர்கள் 2 பேர் – இருப்பவர்கள் இரண்டு பேர், பேசியவர்களும் இரண்டு பேர் – தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக திரு. விஜயகாந்த் ஒருவர், மற்றும் சுயேச்சை உறுப்பினர் ஒருவர் – ஆக 26 பேர் பேசி, அவர்களுடைய கருத்துகளுக்கெல்லாம் பதில் அல்ல, மெருகூட்டுவதைப் போல சில கருத்துகளை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

“

தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் ஒன்றாக வாழவேண்டுமென்ற அடிப்படையில் “பெரியார் நினைவு சமத்துவபுரம்” உருவாக்கினோம். 113 இடங்கள் என்று எனக்கு நினைவு. அங்கெல்லாம் சமத்துவபுரங்கள் அமைத்தோம். அவைகளில் பல சமத்துவபுரங்கள் பாழடைந்து கிடக்கின்றன. புதுப்பிக்கப்படவில்லை. அந்தத் திட்டம் தொடரவில்லை, எப்பொழுதுமே ஒரு அரசு நல்ல காரியங்களைச் செய்தால், அடுத்து வருகின்ற அரசு அதைத் தொடர வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்திலே வரவேற்கத்தக்க அம்சம். அதற்கு சாட்சியாகத்தான், கடந்த அரசு உருவாக்கிய சைக்கிள் வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடரும் என்று நாம் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றோம்.

”

கடைசியாக இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், சட்டமன்றத்திற்கும் கட்சிக்கும் தலைவர், திரு. கோ.க. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக சுதர்சனம் அவர்களும் எடுத்துரைத்துள்ள கருத்துகள் மிக மிக வரவேற்கத் தக்கக் கருத்துகளாக அமைந்திருக்கின்றன.

இந்த ஆளுநர் உரைக்கான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முதலில் நன்றி தெரிவித்து முன் மொழிந்தவர் திரு. அப்பாவு அவர்கள். அப்பாவு அவர்களுடைய பேச்சு; ஆர்வத்தின் அடையாளமாக உருவாகி, நம்முடைய சுதர்சனம் அவர்களின் பேச்சு அனுபவத்தின் அடையாளமாக இன்றைக்கு நிறைவுற்றிருக்கின்றது.




இடையிலே நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய பேச்சு பிரளயத்தையே ஏற்படுத்தி விட்டது. அவர்களுடைய நோக்கம் பிரளயத்தை உருவாக்க வேண்டும் என்பதல்ல. அவருடைய பேச்சைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே ஒரு பிரளயம் உருவாயிற்று. அதன் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளுக்கு நான் உங்கள் அனைவரோடும் சேர்ந்து ஜனநாயகத்திலே நம்பிக்கையுடைய அத்தனை அரசியல்வாதிகளோடும் சேர்ந்து என்னுடைய வருத்தத்தை, ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தாலும் 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற வள்ளுவரின் வாசகத்திற்கிணங்க கடுமையான நடவடிக்கை என்று எடுத்தாலும்கூட, அவர்கள் தொடர்ந்து அவைக்கே வராமல் இருந்துவிட வேண்டும் என்று ஒரு முடிவு எடுக்காமல், அடுத்த கூட்டத் தொடர், நிதிநிலை அறிக்கை தொடர், நீண்ட நாள் நடைபெறக் கூடிய தொடரில், அவர்கள் கலந்து கொண்டு அரிய விளக்கங்களை, நாடு வாழ, நலிவு தீர மக்கள் பிரச்சினைகளையெல்லாம் முன்னிறுத்தி அவர்கள் பேச வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தால்தான், நேற்று நான் வேண்டுகோள் விடுக்க, தாங்கள் அதையேற்று இந்த அவையும் அதனால் ஒரு பூரிப்பை அடைந்திருக்கின்றது.

இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துகள் சிலவற்றை முதலில் ஆராய நான் விரும்புகின்றேன்.

குறிப்பாக ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் பேச்சின் இறுதியில் தங்களுடைய தொகுதியைப் பற்றிப் பேசத் தவறவில்லை. ஏனென்றால் அவர்கள் திரும்பத் தொகுதிக்குச் செல்ல வேண்டும். அந்தக் காரணத்திற்காக மட்டுமல்ல, உள்ளபடியே அவர்களுக்கு அந்தத் தொகுதியின் மீதுள்ள அக்கறையை வெளிப்படுத்தவும், யாரிடத்திலே சொன்னால் இது நடக்கும், எங்கே சொன்னால் நடக்கும் என்ற நம்பிக்கையின் காரணமாகவும், அந்தத் தொகுதிப் பிரச்சினைகளையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அதைப்பற்றி நான் இங்கே குறிப்பிட்டு அதிலே இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் 122 வாக்குறுதிகளை தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்தோம். நேற்றைய தினம் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் சொன்னதைப் போல், அந்த வாக்குறுதிகள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உள்ளத்திலே மாத்திரம், மூளையிலே மாத்திரம் உதித்து, மக்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிகள் என்று நான் ஆணவம் கொள்ளவில்லை. தற்பெருமை பேச விரும்பவும் இல்லை.

### தமிழ் மக்களின் "பற்றுதல்"

அந்த வாக்குறுதிகள் எல்லா கட்சிகளுடைய உள்ளத்திலும், எண்ணத்திலும் இருக்கின்ற அந்த வாக்குறுதிகள்தான், ஆசைகள்தான், அவாக்கள்தான். அதைத்தான் 122 வாக்குறுதிகளாக தமிழ்நாட்டு மக்களுக்கு தேர்தல் அறிக்கையிலே தந்தோம், அந்தத் தேர்தல் அறிக்கைக்கு; பெரும் சிறப்பாக மத்திய நிதியமைச்சர் நண்பர் சிதம்பரம் அவர்கள், இந்தத் தேர்தலிலே கதாநாயகனே இந்தத் தேர்தல் அறிக்கைதான் என்று குறிப்பிட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தக் கதாநாயகனாக விளங்கிய தேர்தல் அறிக்கை எத்தகைய வெற்றியைப் பெற்றுத்

"

தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் இத்திட்டம் மீண்டும் தொடரப்படும் என்றும், திருமண நிதி உதவி – ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் நேற்றைய தினம் அதைக் குறிப்பிட்டு கேட்டுள்ள காரணத்தால், உறுதியாகவும், உத்தேசமாக அல்ல, நிச்சயமாகச் சொல்கின்றேன். இந்தத் திட்டம் 3.6.2006இல் தொடங்கப்பட்டு இந்த நிதியாண்டில் 33,333 ஏழைப் பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

"

இருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* தேர்தல் அறிக்கையில் 122 வாக்குறுதிகள் என்று சொன்னேன் அல்லவா? அதில் 54 வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றிய அறிவிப்புகள் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* அஃதன்னியில் தொழிற்கல்வி பயில ஏற்பாடு, கல்வியாளர்கள் கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடு, நுழைவுத் தேர்வை அகற்ற குழு, ஒட்டுமொத்த சுற்றுலாத் திட்டம், மேட்டூர் நீர் திறப்பு போன்ற 14க்கும் மேற்பட்ட அறிவிப்புகள் உட்பட மொத்தம் 68 அறிவிப்புகளை இந்த ஆளுநர் உரை கொண்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* எஞ்சிய அறிவிப்புகள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை இங்கே நான் அளிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

தந்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டு மக்களுடைய ஒத்துழைப்போடு, நம்முடைய கூட்டணியிலே உள்ள கட்சிகளைச் சேர்ந்த 163 பேர் மகத்தான வெற்றி பெறுவதற்கு ஒரு நல்ல நிலையை உருவாக்கி இருக்கின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ன சொல்லப்பட்டது ஏடுகளில் – வார ஏடுகளில், நாளேடு களில்? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணி தொலைந்தது, இனி தலை எடுக்காது, திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர், இருவர்கூட வெற்றி பெற்று மன்றத்திற்குச் செல்ல மாட்டார்கள். இதோடு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாறு முடிந்துவிடும். இதுதான் இறுதிப் போராட்டம். இது பரம்பரை யுத்தம். அந்தப் பரம்பரை யுத்தத்திலே இது இறுதி யுத்தம். இந்த யுத்தத்தில் கருணாநிதி என்கின்ற இராவணன் ஒழிவான் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் இந்த இராவணனுக்கு பத்து தலை இல்லை. இந்த இராவணனுக்கு தமிழ்நாட்டின் மீது அதிகப் பற்றுதலை, *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தப் 'பற்றுதல்' இருந்த காரணத்தால் தமிழ் மக்களும் என்பால் கொண்ட 'பற்றுதலை' வெளிப்படுத்தி நம் அனைவருக்கும் 163 இடங்களைத் தந்து மாபெரும் வெற்றியை வழங்கி

*(இதுவரை நின்று கொண்டு பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்பு அமர்ந்து கொண்டு பேசினார்)*

மாண்புமிகு கோவை தங்கம் அவர்கள் வால்பாறை தொகுதியிலே வெற்றி பெற்றவர். காங்கிரஸ் கட்சியின் சார்பாக உரையாற்றியபோது, வால்பாறை மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி; பாரதியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அமைக்க வேண்டும் என்று கோரினார். இவரது கோரிக்கையைப் பரிசீலிக்கலாம் என்று அதிகாரிகள் சொன்னார்கள். நான் அதிகாரிகளிடத்திலே வலியுறுத்திச் சொல்லி இருக்கிறேன். வால்பாறை ஒரு தனித் தீவு போல இருக்கின்ற ஒரு பகுதி. அங்கே வாழ்கின்ற மக்கள் இன்னமும் இந்த உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய, புரிந்து கொள்ள வேண்டிய, உலகத்தோடு ஒட்டி ஒழுக வேண்டிய ஒரு நிலையிலே இருக்கின்ற மக்கள், அந்த மக்கள் ஒரு குறைந்தபட்சம் அரசுக் கலைக் கல்லூரியை பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அமைக்க

வேண்டும் என்று கேட்கிறார்கள். எனவே, ஒரு சிறப்பு நேர்வாக இதை நாம் செய்து கொடுக்க வேண்டு மென்று அதிகாரிகளிடத்திலே கூறி, அவர்களும் இதற்கு ஒப்புதல் தந்துள்ளார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

### ஆரம்ப சுகாதார மையங்கள் அனைத்திலும் மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆலங்குடி உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் ஊரகப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் போதுமான அளவுக்கு இல்லை என்று சொன்னார். ஒரு இடத்திலே மாத்திரமல்ல, பல இடங்களில் இந்தக் குறைபாடு இருக்கின்றது. இந்தக் குறைபாடு நீக்கப்பட்டு, ராஜசேகரன் சொன்ன ஆலங்குடியிலே மாத்திரமல்ல, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையிலும் தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்பட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நம்முடைய வேலூர் ஞானசேகரன் அவர்கள் உரையாற்றும்போது 80 ஆண்டுகாலமாக வேலூரில் இயங்கி வந்த அரசு மருத்துவமனை தற்போது செயல்படாமல் உள்ளது. இதுகுறித்து இந்த அரசு பரிசீலித்து அந்த மருத்துவமனை தொடர்ந்து செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மருத்துவமனைக்கு வயது 80 ஆண்டு, அது உறுதியாக நிறைவேறும் என்று வாக்களிக்கிற எனக்கு 83 ஆண்டு *(சிரிப்பு)* என்பதை நான் ஞானசேகரன் அவர்களுக்குத் தெரிவித்து *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுவும் மகிழ்ச்சிகரமாக நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள், செங்கல்பட்டு தொகுதியிலே உள்ள குளவாய் ஏரியைத் தூர்வாரி, தூய்மைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தளி இராமச்சந்திரன் அவர்கள், யாரையும் கேட்காமல் வெற்றி பெற்றவர் *(சிரிப்பு)* அவரது தொகுதியிலே யானைகளால் தாக்கப்பட்டு அடிக்கடி விவசாயிகள் இறக்க நேரிடுகிறது என்றும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இதற்கெல்லாம் இழப்பீடு வழங்கப்பட்டது என்றும், ஆனால், இந்த ஆட்சியிலே, இந்த ஆட்சி என்றால் கடந்த ஆட்சியிலே இத்தகைய இழப்புகளுக்கு தொகைகள் வழங்கப்பட வில்லை என்றும் பேசும்போது தெரிவித்தார். நேற்றைய தினமே அந்த யானையினால் பாதிக்கப்பட்ட விவசாயி குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுபோல பழைய சம்பவங்கள், யாரும் பாதிக்கப் பட்டிருந்து, அந்தப் பட்டியல் தரப்படுமேயானால் அவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யும் என்ற உறுதியையும் நான் இங்கே தருகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வாணியம்பாடி தொகுதியைச் சேர்ந்த அப்துல் பாசித் அவர்கள், அவர் தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஒன்றியத்தில் மலைக்கிராமங்கள் காமன்திட்டு, பனங்காட்டூர், நாட்டுநேரி போன்ற கிராமங்களுக்கு சாலை வசதி இல்லாத காரணத்தால் 20 அல்லது 25 கிலோமீட்டர் தூரம் அந்தத் தொகுதி மக்கள் நடந்துதான் நகரங்களுக்குச் செல்ல வேண்டும் என்று தெரிவித்தார். அந்தச் சிரமம் போக்க, அந்தக் கோரிக்கை குறித்து உடனடியாகப் பரிசீலிக்க உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அது கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



நம்முடைய மன்னார்குடி நண்பர் சிவபுண்ணியம் அவர்கள், தனது தொகுதியிலே முன்பிருந்தது போன்ற புகைவண்டி வசதி மீண்டும் தேவை என்று, அதை புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இதுகுறித்து இந்த அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மத்திய அரசினுடைய இணை அமைச்சர் இங்கே இருக்கின்ற காரணத்தால் அவர்களோடு தொடர்பு கொண்டு, ஏற்கெனவே அவரிடத்திலே நானே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். என்னுடைய எட்டுக்குடி, திருக்குவளை பகுதிகளுக்கெல்லாம் இரயில் விட வேண்டுமென்று; அதையும் சேர்த்து நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களிடத்திலே கேட்டேன். ஆனால், எனக்கு சிவபுண்ணியம் ஒரு உத்தரவாதம் தரவேண்டும். அந்த இரயில் போகும்போது, அதற்கு போதுமான பயணிகள் *(சிரிப்பு)* – ஏனென்றால் மிக குறைவான தூரம், அதுமாத்திரமல்ல, எவ்வளவு வேகத்திலே அந்த இரயில் போகும் என்பது எனக்குத் தெரியும். அதிலே நான் போய்ப் பழக்கப்பட்டவன். ஆமையோடு போட்டி போட்டு செல்லக்கூடிய இரயில் அது. அந்த இரயிலை அங்கே அமைப்பதற்கு நான் உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

> “வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, சுயஉதவிக்குழுக்கள் விரைவில் தொடங்கப்படும் என்று உரையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தொடர்ந்து ஆதரவும் நிதி உதவியும் நல்க இருப்பதால், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் மகளிருக்குக் கிடைக்கும் என்று உறுதியளிக்கிறேன்.”

## மீண்டும் சமூக சீர்திருத்தத்துறை

இன்னொன்றும் சொன்னார் சிவபுண்ணியம் அவர்கள். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை வழியிலே வந்த நாம், அண்ணா வழியில் வந்த நாம் தமிழகத்திலே பகுத்தறிவு கருத்துகளை பரப்ப வேண்டிய அவசியம் இருப்பதை குறிப்பிட்டு, அதற்காக ஒரு தனி இலாகாவே, ஒரு துறையே அமைக்க வேண்டுமென்று கேட்டார். அவர் மறந்திருப்பார் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், கடந்த காலத்தில் இந்த ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு முன்பு 2000ஆம் ஆண்டு இறுதியில் “சமூக சீர்திருத்தத் துறை” என்ற ஒரு துறையை உருவாக்கி அது செயல்பட ஆரம்பித்தது.

உடனடியாகத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலுக்குப் பிறகு, வெற்றி பெற்றவர்கள், சமூகத்தை இன்னும் சீர்திருத்தத் தேவையில்லை என்று அந்தத் துறையையே கலைத்து விட்டார்கள் என்பதை நான் நண்பர் சிவபுண்ணியம் அவர்களுக்குத் தெரிவிப்பதோடு, அடுத்து நிச்சயமாக அந்தத் துறை புதுப்பிக்கப்படும் *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தத் துறை பணியாற்றும். அந்தத் துறை பணியாற்றுகின்ற காரணத்தால், அமைச்சர்கள் மீது ஏற்படுகின்ற சந்தேகங்களெல்லாம்கூட, நீங்குகின்ற அளவுக்கு நம்முடைய பகுத்தறிவுப் பகலவன் நமக்கு உதவுவார் என்பதை சிவபுண்ணியம் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் தொடரும்


அதே போல தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் ஒன்றாக வாழவேண்டுமென்ற அடிப்படையில் “பெரியார் நினைவு சமத்துவபுரம்” உருவாக்கினோம். 113 இடங்கள் என்று எனக்கு நினைவு. அங்கெல்லாம் சமத்துவபுரங்கள் அமைத்தோம். அவைகளில் பல

சமத்துவபுரங்கள் பாழடைந்து கிடக்கின்றன. புதுப்பிக்கப்படவில்லை. அந்தத் திட்டம் தொடர வில்லை, எப்பொழுதுமே ஒரு அரசு நல்ல காரியங்களைச் செய்தால், அடுத்து வருகின்ற அரசு அதைத் தொடர வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்திலே வரவேற்கத்தக்க அம்சம். அதற்கு சாட்சியாகத்தான், கடந்த அரசு உருவாக்கிய சைக்கிள் வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடரும் என்று நாம் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படி தொடரப்படாமலே போய்விட்டது சமத்துவபுரம் திட்டம், அது மீண்டும் நிச்சயமாக தொடரும் என்பதையும், *(மேசையைத் தட்டும் ஒலி)* அழகான முறையிலே முதன்முதல் தொடங்கப்பட்ட, அம்பத்தூர் உழவர் சந்தை, அம்பத்தூருக்கு அருகிலே உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரம், இவைகளையெல்லாம் நானே சென்று திறந்து வைப்பதாக இருக்கின்றேன் என்பதையும் *(மேசையைத் தட்டும் ஒலி)* இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு**

நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர், திருப்பூரிலே உள்ள சாயப்பட்டறை பிரச்சினை குறித்து இங்கே உரையாற்றினார். என்னை நேரில் சந்தித்து அதுபற்றி விவரமாகக் கூறியிருக்கின்றார். பேரவைக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், அந்த நிறுவனங்களுடைய உரிமையாளர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு என்னை சந்திக்க வருவதாகவும் சொல்லியிருக்கின்றார். நானும் சந்திப்பதாக உறுதி அளித்திருக்கின்றேன். அப்பொழுது அந்தப் பிரச்சினை குறித்து கலந்து பேசி நிச்சயமாக நல்ல முடிவு காண முயற்சிப்பேன் என்று அவருக்கு நான் சொல்லிக் கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், பனியன் தொழிலாளர்களுக்கு பேருந்து வசதி கூடுதலாக செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக் கின்றார். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட போக்குவரத்துத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

விடுதலை சிறுத்தைகள் சார்பாக மங்களூர் செல்வம் அவர்கள் இங்கே உரையாற்றினார்கள். அவர்களுடைய தொகுதியிலே உள்ள திட்டக்குடி, முருகன்குடி, பெண்ணாடம் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால், தரைப் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என்றும், அவைகளைச் சீர்படுத்த வேண்டுமென்றும் கூறினார்கள். பாலங்கள் மீண்டும் அமைக்கும் பணியை அதன் தொடர்புடைய துறை அமைச்சர்களும், அதிகாரிகளும் விரைந்து மேற்கொள்வார்கள். பாலம் அமைப்பது ஒன்றும் சிரமமல்ல, பாலத்தை இடிப்பதுதான் சிரமம். *(சிரிப்பு)* பாலம் அமைக்க வேண்டுமென்று என்றைக்கும் கருதுகின்றவன் நான். எனவே இந்தப் பாலமும் நிச்சயமாக அமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*



மேல்மலையனூர் தொகுதி பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்பட்ட நெல்லுக்கான விற்பனைத் தொகை பல மாதங்களாக பட்டுவாடா செய்யப்படாமல் நிலுவையிலே உள்ளது என்று குறிப்பிட்டார். வேளாண்மைத்துறை அமைச்சர் உரிய நடவடிக்கை மேற்கொள்வார் என்ற உறுதியை அவர்களுக்கு நான் வழங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**சாலை விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை**

நம்முடைய ஞானசேகரன் அவர்களும், திருமதி சங்கரி நாராயணன் அவர்களும் கிழக்குக் கடற்கரை


சாலையிலே அதிக அளவில் ஏற்படுகின்ற விபத்துகளை குறைக்கவும், அந்த விபத்துகளில் காயமடைந்தோருக்கு உடனடி மருத்துவ சிகிச்சை உதவி தரவேண்டுமென்றும் கூறினார்கள். ஞானசேகரன் அவர்கள், Highway Patrol இதில் தனி கவனம் செலுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார். உண்மைதான். நானே ஒவ்வொரு நாளும் ஒன்றரை மணிக்கு உணவருந்த உட்காரும்போது, தொலைக்காட்சியைப் பார்த்தால், சாலை விபத்திலே 5 பேர் சாவு, 6 பேர் சாவு என்று, அந்த சவங்களைத் தூக்கிச் செல்கின்ற அந்தக் காட்சியை ஒவ்வொரு நாளும் காண வேண்டியிருக்கின்றது. இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்று அல்ல, எந்த ஆட்சியிலும் இது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்த கால ஆட்சியில் நடைபெற்றது. இந்த ஆட்சி வந்த பிறகும் அது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஒருவேளை இவைகளெல்லாம் தொடர வேண்டுமென்று கருதுகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இது தொடராமல் இருப்பதற்கு காவல்துறை மிகுந்த கண்காணிப்போடு இருக்கவேண்டும். அதை தடுத்துநிறுத்த முடியாது. இப்படிப்பட்ட வாகனங்கள் வேகத்தை எந்த அளவுக்கு குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை அமல்படுத்த வேண்டும். இரவு நேரங்களில் நாமே அனுபவித்து இருக்கிறோம். நம்முடைய பயணத்தில் எதிரே வருகின்ற லாரிகள் அல்லது பெரிய கார்கள் எந்த அளவிற்கு விளக்கு வெளிச்சத்தோடு வருகின்றன என்பதும், முன்பெல்லாம் அந்த விளக்கின் முன்பகுதியிலே ஒரு கருப்பு திரை இருக்கும். இப்பொழுது அந்த கருப்பு திரையெல்லாம் கிடையாது. கருப்பு திரையும் இல்லாமல், வெட்ட வெளிச்சத்தோடு, பயங்கர வெளிச்சத்தோடு, அந்த லாரி வரும். அவர்களுக்குள்ள துணிச்சல், நாம் மோதினால் நமக்கு ஒன்றும் காயமில்லை. அடிபடுகின்ற கார்களுக்குத்தான், வாகனங்களுக்குத்தான் சேதம், அதிலே வருபவர்களுக்குத்தான் உயிரிழப்பு என்ற தைரியத்தில் அது நடந்து கொண்டிருக்கின்றது. இந்த விபத்துகளை தடுப்பதை ஒரு முக்கியமான பணியாக இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நெசவாளர் பிரச்சினை குறித்து நம்முடைய பள்ளிப்பட்டு ஈ.எஸ்.எஸ். ராமன் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பல அருமையான கருத்துகளை இங்கே எடுத்துரைத்தார். அவருடைய கருத்துகளை கேட்கின்ற நேரத்தில் தமிழைக் கேட்டு ரசிப்பவன் நான். இன்றல்ல, முன்பெல்லாம்கூட, அப்படிப்பட்ட அருமையான கருத்துகளை அவர் இங்கே எடுத்துவைப்பார். சிட்டா நூலுக்கான 2 சதவீத விற்பனை வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு, நிதியமைச்சர் அவர்கள் எல்லா வணிகர்களையும் அழைத்து வைத்து, இதுபோன்ற நிறுவனங்களையும் அழைத்து வைத்து, கலந்து பேசித்தான் நிதிநிலை அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுவது தி.மு.கழக அரசைப் பொறுத்தவரையிலே வழக்கமாக இருந்து வருகிறது. அந்த வழக்கம் மாறாமல் இந்த முறையும் அது கடைப்பிடிக்கப்பட்டு இத்தகைய கோரிக்கைகள் குறித்து எல்லாம் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

> “அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலுகின்ற எல்லா மாணவ மாணவிகளுக்கும் இலவச பாடப் புத்தகம் வழங்கும் திட்டம், விரிவுபடுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.”

கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்முடைய நண்பர் ஜான் ஜோசப் அவர்கள் நெய்யாறு இடது கரை கால்வாயில் நீர்பாசனத்திற்கு தேவையான நீரை கேரள அரசு வழங்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். இந்த அரசு இதுகுறித்து நெய்யாறு இடதுகரை கால்வாய் நீர்ப்பாசன விவசாயிகளுக்கு தேவையான நீரை வழங்குவதற்கு கேரள அரசை வலியுறுத்த கேரள அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனென்றால், பக்கத்து

மாநிலங்களோடு ஒரு பக்குவமான அணுகுமுறை நமக்குத் தேவை என்பதை இன்று நேற்றல்ல, பல ஆண்டு காலமாக நான் வலியுறுத்தி வருபவன் என்பது அனைவரும் அறிவீர்கள். அந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி இதற்கு ஆவன செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.




**ராஜீவ்காந்தி பெயரில் விமானப் பயிற்சிப் பள்ளி**

நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ராஜீவ் காந்தியின் நினைவாக இராஜீவ் காந்தி இன்ஸ்டியூட் ஆப் ஏரோனாடிகல் சையன்ஸ் அண்ட் டிரெயினிங் ஆப் பைலட்ஸ் அகாடமி ஒன்றை திருப்பெரும்புதூர் பகுதியிலே தொடங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு நிச்சயமாக அந்த நிறுவனம் அமைய ஆவன செய்யும். எப்பாடுபட்டும் அந்த நிறுவனத்தை இங்கே அமைப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசோடு வாதாடி தேவையானால் போராடி அதை வெற்றிகரமாக முடிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொழிற்கல்வியில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீடு**

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த அப்பாவு அவர்கள் தன்னுடைய பேச்சில் முக்கியமாக தொழிற்கல்வி படிப்புகளில் கிராமப்புற மாணவர் களுக்கு வாய்ப்பு அளிக்க கழக ஆட்சியிலே 15 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது பற்றி குறிப்பிட்டார். அது மேலும் 25 ஆக உயர்த்தப்பட்டவுடன் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதால் 15 சதவிகிதமும் சேர்ந்து அடியோடு போய்விட்டது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கிராமப்புறத்திலே உள்ள நம்முடைய மாணவர்கள். "நம்முடைய" என்பதற்கு உங்களுக்கு பொருள் தெரியும். நம்முடைய மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமானால் அதை 'சால்வ்' செய்து எந்த முறையிலே மீண்டும் அந்தக் கிராமப்புறத்து மாணவர்களுக்கு இந்த 15 சதவிகிதமாவது கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அரசு ஆலோசித்து உரிய நடவடிக்கைகளை சட்டப்பூர்வமாக எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பண்ருட்டி தொகுதி உறுப்பினர் வேல்முருகன் விவாதத்தில் பங்கேற்றுப் பேசும்போதும் சரி, தொடர்ந்து இங்கே பேசிய நம்முடைய கோ.க.மணி அவர்கள் பேசியபோதும் சரி – முன்பு ஜி.கே.மணி என்றிருந்தது, இப்பொழுது கோ.க.மணி. நான்கூட வேடிக்கையாக சொல்வதுண்டு, கோத்த மணி ஒட்டையாக இருக்கும். இவர் கோக்காத மணி ஒட்டை இல்லாத மணி என்று சொல்லியிருக்கின்றேன். இந்த கோ.க. மணி அவர்கள், அவரும், உறுப்பினர் வேல்முருகனும் இங்கே ஒரு கோரிக்கை வைத்தார்கள். தனியார் ஆசிரியர் பட்டயப் பயிற்சி நிலையங்களும், இளநிலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், அதிக எண்ணிக்கையிலே கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதற்குத் தேவையான கட்டமைப்பு வசதி கிடையாது. இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டதோடு, இப்பிரச்சினையை கவனமாகப் பரிசீலித்து என்னதான் நடந்திருக்கிறது என்பதை நாட்டுக்குச் சொல்ல ஒரு உயர்நிலை விசாரணைக்குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நிச்சயமாக ஒரு உயர்நிலை விசாரணைக்குழு அமைக்கப்பட்டு, இதில் எப்படியெல்லாம் தவறுகள் நடந்திருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து நாட்டுக்கு அறிவிக்கப்படும்.

விடுதலை சிறுத்தை இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர் ரவிக்குமார் அவர்கள் பேசும்போது, இன்றைக்கு நூலகங்களில் வாங்குகின்ற புதிய

> ❝
> இந்த ஆண்டு நூறு அரசு நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், நூறு அரசு உயர்நிலைப்பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி, கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அதாவது ஜூன் மாதத்திலேயே ஆணையிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.
> ❞

நூல்களின் பிரதிகள் அதிகபட்சம் 750 படிகள்தான் வாங்கப்படுகின்றன. ஆகவே, அதை 1,500 படிகளாக வாங்கினால்தான் அதை எழுதிய எழுத்தாளனுக்கு ஏதாவது கிடைக்கும் என்றெல்லாம் குறிப்பிட்டார். இப்போது நான் அறிவிப்பது, இதில் என்னுடைய சுயநலமும் கொஞ்சம் கலந்தது. ஏனென்றால் அடுத்தவாரம் என்னுடைய புத்தகங்கள் இரண்டு வெளிவர உள்ளன. அதற்காக நான் சொல்லவில்லை. இருந்தாலும், நம்முடைய ரவிக்குமார் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, இனிமேல் 750 படிகள் வாங்குவதற்குப் பதிலாக குறைந்தபட்சம் 1,000 புதிய படிகள் வாங்கப்படும் என்ற நல்ல செய்தியை அறிவித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

### ஜூன் 3 முதல் 33,333 ஏழைப் பெண்களுக்கு திருமண நிதிஉதவி

தி.மு.கழக ஆட்சியில் 3.6.1989 முதல் ஆரம்பிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் பற்றி சேரன்மாதேவி உறுப்பினர் வேல்துரை அவர்கள் கேட்டார்கள், தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் இத்திட்டம் மீண்டும் தொடரப்படும் என்றும், திருமண நிதி உதவி – ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் நேற்றைய தினம் அதைக் குறிப்பிட்டு கேட்டுள்ள காரணத்தால், உறுதியாகவும், உத்தேசமாக அல்ல, நிச்சயமாகச் சொல்கின்றேன். இந்தத் திட்டம் 3.6.2006இல் தொடங்கப்பட்டு இந்த நிதியாண்டில் 33,333 ஏழைப் பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள்

உறுப்பினர் தம்பி விஜயகாந்த் அவர்கள் (தம்பி என்று கூறலாம் எனக் கருதுகின்றேன்) இந்த ஆளுநர் உரையை வரவேற்று சில விமர்சனங்களை செய்து பேசியபோது, வேலைவாய்ப்புகளை உருவாக்க குறிப்பிடத்தக்க திட்டங்கள் தேவை என்றெல்லாம் பேசினார். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, சுயஉதவிக்குழுக்கள் விரைவில் தொடங்கப்படும் என்று உரையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தொடர்ந்து ஆதரவும் நிதி உதவியும் நல்க இருப்பதால், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் மகளிருக்குக் கிடைக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

முந்தைய ஆட்சியில் அரசு வேலை நியமன தடை ஆணை நடைமுறையிலே இருந்த காரணத்தால், அரசு வேலை வாய்ப்புகளை இழந்திருந்த இலட்சக் கணக்கான இளைஞர்கள், அரசுப் பணிக்கு விண்ணப்பிக்க முடியாத அளவிற்கு வயதைக் கடந்து விட்டார்கள். எனவே, அதைச் சிந்தித்து, இந்த அரசு தேர்தல் அறிக்கையிலே என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால், அரசுப் பணிக்கான அதிகபட்ச வயதுவரம்பை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்க முடிவு செய்திருக்கிறோம். இதனால் அவர்கள் இழந்த அந்த வாய்ப்பை நிச்சயமாகப் பெற முடியும் என்பதை நான் விஜயகாந்த் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### இலவச பாடப்புத்தகம் வழங்கும் திட்டம் விரிவாக்கம்

இங்கு நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இன்னொரு கோரிக்கையை என்னிடத்திலே விடுத்தார். அதன்படி தமிழக அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் பாடத் திட்டத்தில் தமிழ் வழியிலே கற்பிக்கும், அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும்

அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இலவச பாடப்புத்தகம் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பொழுது என்ன இருக்கிறது என்றால், இப்பொழுது உள்ள நிலையிலே அந்தப் பயன் இல்லை. எனவே, பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்ற காரணத்தால், அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலுகின்ற எல்லா மாணவ மாணவிகளுக்கும் இலவச பாடப் புத்தகம் வழங்கும் திட்டம், விரிவுபடுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும்**
**தமிழ் பயிற்றுமொழி வகுப்புகள்**

தி.மு.கழக ஆட்சியில் தமிழ்மொழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஆங்கில பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையாக தமிழ் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு வந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் அந்த முறை ரத்து செய்யப்பட்டு விட்டது. இப்பொழுது நாம் அறிவிப்பது, இனிமேல் ஆங்கில பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் தமிழ் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க மீண்டும் அனுமதி வழங்கப்படும் *(மேசையைத் தட்டும் ஒலி).* அரசு, நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி, ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு அரசு ஆணையை கல்வியாண்டின் தொடக்கத்திலேயே பிறப்பிக்கப்படாததால் அப்பள்ளிகளிலே பயிலும் மாணவர்கள் மேற்கொண்டு கல்வியைத் தொடர, வேறு பள்ளிகளில் சேர நேரிடுகிறது. இந்த நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, இந்த ஆண்டு நூறு அரசு நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், நூறு அரசு உயர்நிலைப்பள்ளிகளை, மேல் நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி, கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அதாவது ஜூன் மாதத்திலேயே ஆணையிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

முன்பெல்லாம் அரசுப் பள்ளிகளில் கட்டடம் கட்டி அதற்கான பணத்தையும் செலவழிக்க சில நன்கொடை யாளர்கள், வள்ளல்கள் இருப்பார்கள். அவர்கள் கட்டித் தரும் அந்தக் கட்டடங்களில் தி.மு.கழக ஆட்சியில் ஏதாவது ஒரு கூடத்துக்கோ அல்லது ஒரு அறைக்கோ, அல்லது அந்த முழு கட்டடத்துக்கோ அவர்கள் தந்த பணத்துக்கு ஏற்றவாறு அவர்களுடைய பெயரை வைக்கின்ற வழக்கத்தை தி.மு.கழக ஆட்சியில் மேற்கொண்டிருந்தோம். அது கடந்த ஆட்சியில் ரத்து செய்யப்பட்டு விட்டது. ஆனால், அரசுப் பள்ளிகளில் சில கட்டடங்களை தங்களுடைய சொந்த செலவிலே கட்டிக் கொடுக்க முன்வரும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரை அந்தக் கட்டடத்திற்கு வைக்கலாம் என்று தி.மு.கழக ஆட்சியில் இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் அந்த முறை நீக்கப்பட்டு விட்டது. மீண்டும் அந்த முறை நடைமுறைக்கு வரும். *(மேசையைத் தட்டும் ஒலி).*

**அவதூறு வழக்குகள் திரும்பப் பெறப்படும்**

2001 ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை அவதூறு பேச்சுகள் என்றும், அவதூறு செய்தி வெளியீடுகள் என்றும் ஆட்சேபகரமான பேச்சுகள் என்றும் டெஸ்மா சட்டத்தின் பேரிலும் பல வழக்குகள் போடப்பட்டுள்ளன. டெஸ்மா சட்ட வழக்கு என்மீது கூட உண்டு. அரசு ஊழியர் என்கிற முறையில், அவதூறாகப் பேசியதாக அரசியல் கட்சியின் பிரமுகர்கள் மற்றும் மேடைப் பேச்சாளர்கள் மீது மட்டும் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 267. அவதூறுகளாக செய்திகளை



வெளியிட்டதாகக் கூறி செய்தித்தாள் மற்றும் வாரப் பத்திரிகை ஆசிரியர்கள், பதிப்பாளர்கள், அச்சிட்டவர்கள் மற்றும் வெளியிட்டவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு ஒன்பது. ஆட்சேபகரமாகப் பேசியதாகக் கூறி, வழக்குப் பதிவு செய்ய முன் அனுமதி வழங்கப்பட்ட நிகழ்வுகள், டெஸ்மா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் இரண்டு. கட்சிகளின் அடிப்படையிலே பார்த்தால் தி.மு.கழகத்தின் மீது 147 வழக்குகள், காங்கிரஸ் மீது 14 வழக்குகள், இந்திய கம்யூனிஸ்ட் மீது 2 வழக்குகள், பா.ம.க மீது 7 வழக்குகள், ஜனதாதளத்தின் மீது ஒரு வழக்கு, விடுதலைச் சிறுத்தை மீது மூன்று வழக்கு, பா.ஜ.க மீது இரண்டு வழக்கு, வி.எச்.பி. மீது இரண்டு வழக்கு, பத்திரிகையாளர் மீது இரண்டு வழக்கு, ம.தி.மு.க மீது 87 வழக்கு, மொத்தம் 342 வழக்கு. ம.தி.மு.க. மீதான 87 வழக்கையும் சேர்த்து எல்லாவற்றையும் திரும்பப் பெறுகின்ற ஆணை இன்று பிறப்பிக்கப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இவைகளன்னியில் சிவில் சப்ளைஸ் இலாகா ஊழியர்கள் மீது உள்ள வழக்குகளும், திரும்பப் பெறப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

> “
>
> கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்தால், கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை தமிழக அரசே ஏற்றுக் கொண்டு, அந்த வங்கிகளுக்கு இழப்புத் தொகையைக் கொடுத்து ஈடு செய்யும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், வரும் ஆண்டுகளிலும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். அரசு நபார்டு வங்கியோடு கலந்து பேசி, கூட்டுறவு வங்கிகளுக்குத் தேவையான மறு நிதிஉதவியைப் பெறும்.
>
> ”

**கலந்தாய்வுமுறை மூலமாக பள்ளி ஆசிரியர்கள் இடமாற்றம்**

இன்னொரு நற்செய்தியாக அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இடமாற்றம், ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கலந்தாய்வு முறை மூலமாக, வரும் 2006 – 2007 கல்வியாண்டில் ஜூன் திங்கள் முதல் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் இவ்வாண்டே தொடக்கம்**

ஆளுநர் உரையில் குறிப்பிட்டபடி மகளிருக்கு பொழுது போக்குக் காகவும், அவர்கள் பொது அறிவு பெறவும், வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் அண்ணா பிறந்த, பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களையொட்டி இவ்வாண்டே தொடங்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 14 அங்குல வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் திறந்த சர்வதேச ஒப்பந்தப் புள்ளி மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பத்தினர் அனைவருக்கும் படிப்படியாக வழங்கப்படும். இவற்றுக்கான ஒப்பந்தப் புள்ளி பற்றி முடிவெடுக்கவும், முறையாக கொள்முதல் செய்யவும், குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி).*

**மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் பணி**

ஊராட்சிகளில் ஏற்கெனவே பல்வேறு மக்கள் நலப்பணிகளை மேற்கொள்வதற்காக தி.மு.கழக

*தொடர்ச்சி 45ஆம் பக்கம்*



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
நியாயவிலைக் கடைகளில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை
சென்னை, தேனாம்பேட்டை அமுதம் சில்லறை அங்காடியில்
3-6-2006 அன்று தொடங்கிவைத்தார். உடன் மாண்புமிகு மத்திய மற்றும்
மாநில அமைச்சர் பெருமக்கள் உள்ளனர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தை 3-6-2006 அன்று
தொடங்கிவைத்து பயனாளி ஒருவருக்கு ரூ.15,000க்கான காசோலையினை வழங்கினார்.
உடன் மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும்
தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன்,
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரக தொழில்துறை அமைச்சர்
திரு. ஆற்காடு நா. வீராசாமி ஆகியோர் உள்ளனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
சென்னை மெரினா கடற்கரை காமராசர் சாலையில், மீண்டும் நிறுவப்பட்டுள்ள
தமிழர் பண்பாட்டுச் சின்னமான கண்ணகி சிலையினை 3-6-2006 அன்று திறந்துவைத்தார்.
உடன் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்,
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு செய்தி மற்றும்
விளம்பரத்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
மற்றும் கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் உள்ளனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
21-5-2006 அன்று தனது இல்லத்தில், குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி,
பல்ஸ் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமினை தொடங்கிவைத்தார்.
உடன் மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரக தொழில்துறை அமைச்சர்
திரு.ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும்
விளம்பரத்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 5-6-2006 அன்று புதுதில்லியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணித்தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்களை சந்தித்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 6-6-2006 அன்று புதுதில்லியில் மத்தியத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் திரு. மான்டெக்சிங் அலுவாலியா அவர்களை சந்தித்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை,
5-6-2006 அன்று புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில்,
மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு.ப. சிதம்பரம் அவர்கள் சந்தித்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை,
5-6-2006 அன்று புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில்,
மாண்புமிகு மத்திய இரயில்வே துறை அமைச்சர் திரு. லல்லுபிரசாத் யாதவ் அவர்கள்
சந்தித்தார். உடன் மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும்
தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்களும்.
மாண்புமிகு மத்திய இரயில்வே துறை இணை அமைச்சர்
திரு. ஆர். வேலு அவர்களும் உள்ளனர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை,
5-6-2006 அன்று புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில்,
மாண்புமிகு மத்திய மின்துறை அமைச்சர் திரு. சுஷில்குமார் ஷிண்டே அவர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் உள்ளார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை,
5-6-2006 அன்று புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில்,
மாண்புமிகு மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. முரளி டியோரா அவர்கள் சந்தித்து பேசினார். உடன் மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் உள்ளார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை,
5-6-2006 அன்று புதுதில்லியில்,
இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர்
திரு. பிரகாஷ் காரத் அவர்கள் சந்தித்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை,
5-6-2006 அன்று புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர்
திரு. ஏ.பி. பரதன் மற்றும் செயலாளர் திரு. து.ராஜா ஆகியோர் சந்தித்தனர்.
உடன் மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும்
தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் உள்ளார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
5-6-2006 அன்று புதுதில்லியில், முன்னாள் இந்தியப் பிரதமர்
திரு.வி.பி.சிங் அவர்களை சந்தித்தார். உடன் மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும்
தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் உள்ளார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
5-6-2006 அன்று புதுதில்லியில், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் தலைவர்
திரு. ஹர்கிஷன் சிங் சுர்ஜித் அவர்களை சந்தித்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்,
மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களின் நினைவு தினத்தையொட்டி,
19-5-2006 அன்று தலைமைச்செயலகத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும்
சட்டமன்ற உறுப்பினர்களும், தலைமைச்செயலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும்
கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டார்கள்.



கண்ணியத்திற்குரிய காயிதெ மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களின்
111ஆவது பிறந்தநாளையொட்டி 5-6-2006 அன்று, சென்னை திருவல்லிக்கேணி,
வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள
அன்னாரது நினைவிடத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர்
திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்
மலர்ப் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*36ஆம் பக்கத் தொடர்ச்சி*

ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் முந்தைய ஆட்சியால், 1.6.2001 முதல் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். சாலைப் பணியாளர்கள் அன்னியில் இந்த மக்கள் நலப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். இவர்கள் தங்களை மீண்டும் நியமனம் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் வைத்துள்ளார்கள். ஒரு ஊராட்சிக்கு ஒரு மக்கள் நலப் பணியாளர் என்ற விகிதத்தில் 31.5.2001 அன்று பணியில் இருந்த மக்கள் நலப் பணியாளர்கள் அனைவரையும் மீண்டும் மக்கள் நலப் பணியாளர்களாகப் பணிபுரிய இந்த அரசு ஆணையிடுவதோடு, மாதாந்திர தொகுப்பூதியமான ரூ.750 ஐ, ரூ.950 ஆக உயர்த்தி அவர்கள் ஏற்கெனவே பெற்று வந்த மாதாந்திர பயணப்படியான 50 ரூபாயையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக மாதம் 1,000 ரூபாய் பெறுகின்ற வகையில் ஆணை பிறப்பிக்கப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 17 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும், அன்றைய எதிர்க்கட்சி உறுப்பினராகவும் உரையாற்றிய செல்வி ஜெயலலிதா அவர்கள், ஆளுநர் உரையில் நாம் குறிப்பிட்டிருக்கிற வளர்ச்சி விகிதத்தைப்பற்றி சொன்னார்கள். நாம் உண்மைக்கு மாறாக ஏதோ வெளியிட்டிருப்பதாக கூறினால், அது உண்மைக்குப் புறம்பான தகவல் அல்ல, அவர்கள் குறிப்பாக இரண்டு ஆண்டுகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு இந்த ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் இது என்று சுட்டிக்காட்டினார்கள். ஆனால், நாம் நம்முடைய ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பது, நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட தமிழகத்தின் பொருளாதார சராசரி வளர்ச்சி விகிதம் சரிந்து வீழ்ந்து உள்ளது. இதனை மீட்டெடுத்து வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல அரசு உறுதிபூண்டுள்ளது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம். இதிலே எதுவும் உண்மைக்கு மாறான தகவல் அல்ல, 2001–2006 என்ற இந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி 4.3 விழுக்காடு, The Department of Economics and Statistics, Central Statistical Organisation தயாரித்துக் கொடுத்த புள்ளி விவரம் இது. அதன்படி 5 ஆண்டுகாலம், 2001–2006 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.3 விழுக்காடு. அப்பொழுது இந்திய நாட்டினுடைய ஒட்டு மொத்த பொருளாதார சராசரி வளர்ச்சி விகிதம், 6.7 விழுக்காடு. தமிழகத்தின் கடந்த 5 ஆண்டு கால சராசரி வளர்ச்சி விகிதம், இந்திய நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட குறைவு என்பதை இந்த ஒப்பீட்டிலிருந்து எல்லோரும் புரிந்து கொள்ள முடியும். 2004–2005 ஆம் ஆண்டு மாத்திரம் தமிழகத்தின் வளர்ச்சி விகிதம், இந்திய நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட அதிகம் என்று அவர்




தெரிவித்தார். அதைத்தான், அவர் இங்கே நாம் தவறு செய்து விட்டதாக குறிப்பிட்டார். ஒரு வகையிலே நாம் சொல்வதும் சரி, அவர்கள் சொல்வதும் சரி, நான் சொல்வது ஐந்தாண்டு கால சராசரி வளர்ச்சி, அவர்கள் சொன்னது ஓராண்டு காலத்தினுடைய நிலை. புள்ளி விவரத்தைப் பொறுத்த வரையிலே இரண்டு பேரும் சரிதான்.

அதே நேரத்தில் தி. மு. கழகம் ஆட்சியிலே இருந்த 1996–2001 ஆம் ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் அந்த ஐந்தாண்டு காலத்தில் இந்தியாவினுடைய சராசரி வளர்ச்சி விகிதம் 5.9 விழுக்காடு என்பதையும், தமிழகத்தின் சராசரி வளர்ச்சி விகிதம் 6.3 விழுக்காடு என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

"

ஆளுநர் உரையில் குறிப்பிட்ட படி மகளிருக்கு பொழுதுபோக்குக்காகவும், அவர்கள் பொது அறிவு பெறவும், வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் அண்ணா பிறந்த, பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களையொட்டி இவ்வாண்டே தொடங்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 14 அங்குல வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் திறந்த சர்வதேச ஒப்பந்தப் புள்ளி மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பத்தினர் அனைவருக்கும் படிப்படியாக வழங்கப்படும்.

"

மற்றொரு தகவல் மிடாஸ் நிறுவனத்தைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்த பன்னீர்செல்வம் அவர்கள், ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னார். மிடாஸ் ஒன்றும் அதிகமாக கொள்முதல் செய்யவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார். அந்த நிறுவனம் 2003 ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது. அதற்கு முன்பு மோகன் ப்ரூவரிஸ், சிவா டிஸ்டிலரிஸ், பாலாஜி டிஸ்டிலரிஸ் என்பது போல ஐந்து நிறுவனங்கள் உண்டு. இந்த மிடாஸ் நிறுவனம் 2003இல் தான் தொடங்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு மோகன் ப்ரூவரிஸ் நிறுவனத்தினுடைய கொள்முதல் 40.53 இலட்சம் பெட்டிகள். 2004 –2005இல் 35.47 இலட்சம் பெட்டிகள், மிடாஸ் நிறுவனம் துவங்கப்பட்ட பிறகு குறைந்துவிட்டது. 2005–2006இல் 30. 03 இலட்சம் பெட்டியாக மேலும் குறைந்துவிட்டது.

சிவா டிஸ்டிலரிஸ் நிறுவனத்திடம் செய்யப்பட்ட கொள்முதல், 2003–2004இல் 40 இலட்சம் பெட்டிகள். 2004–2005இல் 40 இலட்சம் பெட்டிகள், 2005–2006இல் 43.86 இலட்சம் பெட்டிகள், பாலாஜி டிஸ்டிலரிஸ் நிறுவனத்திடம்–2003 – 2004இல் 40.57 இலட்சம் பெட்டிகள், 2004– 2005இல் 45. 72 இலட்சம் பெட்டிகள், 2005–2006இல் 50.19 இலட்சம் பெட்டிகள். ஆனால் மிடாஸ் நிறுவனத்தினிடம் செய்யப்பட்ட கொள்முதல் எவ்வளவு தெரியுமா? 2003–2004இல் ஆரம்பிக்கப்பட்ட பொழுது 8.07 இலட்சம் பெட்டிகள்தான். 2004–2005இல் 28.68 இலட்சம் பெட்டிகள், 2005–2006இல் 51.04 இலட்சம் பெட்டிகள். ஒரு நிறுவனத்திடம் மாத்திரம் இந்த அளவிற்கு கொள்முதல் உயர வேண்டிய காரணம் என்ன என்பதைதான் யோசிக்க வேண்டியிருக்கிறது. இந்த மிடாஸ் நிறுவனம் தொடங்கிய 3 ஆண்டுகளில் எந்த அளவிற்கு வர்த்தகம் பெருகியிருக்கிறது. தெரியுமா? 2003–2004இல் டர்ன் ஓவர் 146 கோடி ரூபாய். 2004–2005இல் டர்ன் ஓவர் 400 கோடி ரூபாய். 2005–2006இல் டர்ன் ஓவர் 600 கோடி ரூபாய். 146 கோடி ரூபாயில் தொடங்கி, 600 கோடி ரூபாயில் வந்து நின்றிருக்கிறது. நல்ல காலம் தேர்தல் வந்தது.

கூட்டுறவுக் கடன் குறித்து ஒரு பெரிய ஆராய்ச்சி இங்கே நடைபெற்றது. இந்த அம்மையார் கேட்டார்கள், விவசாயிகள் தேசிய வங்கிகளிடம் கடன் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மட்டும் விவசாயிகள் இல்லையா? அவர்கள் வறட்சியால் பாதிக்கப் படவில்லையா? அந்தக் கடன்களை ஏன் தள்ளுபடி செய்யவில்லை? என்றெல்லாம் கேட்டார். கடன் தொகையை கட்டியவர்களுக்கெல்லாம் திருப்பிக் கொடுத்து விடுவீர்களா? என்றும் கேட்டார்கள். 2001–ஆம் ஆண்டு இந்த அம்மையார் முதலமைச்சராக இருந்த பொழுது, 300 கோடி ரூபாய் அளவுக்கு, வட்டி தள்ளுபடி செய்தார்கள். அப்பொழுது இதையெல்லாம் கடைப்பிடித்தார்களா? அப்பொழுது தேசிய வங்கிகளுக்கு திருப்பிக் கொடுத்தார்களா? அந்தக் கடனை ரத்து செய்தார்களா? அப்பொழுது ஏற்கெனவே கடன் கட்டியவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தார்களா? ஆனால், தி.மு.கழக ஆட்சியில் நாம் ஒன்று இரண்டல்ல, 7 ஆயிரம் கோடி ரூபாய், இந்திய நாட்டு சரித்திரத்திலேயே இல்லாத அளவுக்கு

தள்ளுபடி செய்திருக்கிறோம். இவர்கள் தேசிய வங்கியில் கடன் வாங்கியவர்களெல்லாம் விவசாயிகள் இல்லையா? என்று கேட்கிறார்கள். எல்லோரும் விவசாயிகள்தான், திராட்சைத் தோட்டம் போட்டிருப்பவர்கள்கூட விவசாயிகள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி).* ஆனால், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். 300 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி செய்தார்களே, அப்பொழுது நான் எதிர்க்கட்சிக்காரனாக இருந்தாலும்கூட, அதை வரவேற்று முரசொலியிலே நான் எழுதிய கடிதத்துக்கு, "நல்லதைப் பாராட்டாத கல் நெஞ்சம் நமக்கு இல்லை'' என்ற தலைப்பில் அதைப் பாராட்டி எழுதியவன்தான் இந்த கருணாநிதி என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன் *(மேசையைத் தட்டும் ஒலி).* மேலும், இவர்கள் கேட்கிறார்கள் நபார்டு வங்கியிடம் அனுமதி வாங்கிவிட்டீர்களா? மத்திய அரசு அனுமதி கொடுத்ததா? என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆனால், இவர்கள் நாம் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்வோம் என்று சொன்னவுடன், பத்திரிகையிலே கொடுத்த அறிக்கையில்– வேறு பத்திரிகையாக இருந்தால்கூட நம்ப மாட்டேன் – தினத்தந்தியிலே வந்த அறிக்கையிலே, மாநில அரசின் வருவாய் மூலமே, விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனை ரத்து செய்வேன் என்று பேசி 28.04.2006 தேதியிட்ட தினத்தந்தி இதழில் வெளிவந்துள்ளது. தேர்தலுக்கு முன்பு இந்த அம்மையார் கொடுத்த அறிக்கையில், மாநில அரசின் வருவாய் மூலமே விவசாயிகளினுடைய கூட்டுறவுக் கடனை ரத்து செய்வேன் என்று, அன்றைக்கு கூறியிருக்கிறார். ஆனால் இவர்கள் நம்மைப் பார்த்து எப்படி தள்ளுபடி செய்வாய் என்று கேட்பது விந்தையிலும் விந்தை என்பதைத் தவிர வேறில்லை.

இந்த அரசைப் பொறுத்தவரை நான் செய்தியாளர்களுக்காகச் சொல்கிறேன். கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்தால், கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை தமிழக அரசே ஏற்றுக் கொண்டு, அந்த வங்கிகளுக்கு இழப்புத் தொகையைக் கொடுத்து ஈடு செய்யும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், வரும் ஆண்டுகளிலும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். அரசு நபார்டு வங்கியோடு கலந்து பேசி, கூட்டுறவு வங்கிகளுக்குத் தேவையான மறு நிதிஉதவியைப் பெறும். இதுதான் அதற்கு உள்ள இலக்கணம் என்பதை பொருளாதாரம் தெரிந்தவர்களுக்கு குறிப்பிட விரும்புகின்றேன். நிதி ஆதாரம் புரிந்தவர்களுக்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

## விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் ரத்துக்கான சான்றிதழ்

விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்து அறிவிக்கப்பட்டுள்ள அரசு ஆணையின் அடிப்படையில் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் 31.03.2006ஆம் ஆண்டு நிலுவையில் இருந்த



கூட்டுறவுக் கடன்களைப் பெற்றிருந்த ஒவ்வொரு விவசாயிக்கும், ரத்து செய்யப்படும் மொத்தத் தொகையையும் குறிப்பிட்டு முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக "கூட்டுறவுக் கடன் நிலுவை இல்லை'' என்ற சான்றிதழ் வழங்கப்படும் *(மேசையைத் தட்டும் ஒலி).* அந்தச் சான்றிதழ், இதுபோல அமைந்திடும் *(அந்தச் சான்றிதழின் நகலை எடுத்து உறுப்பினர்களிடம் முதல்வர் கலைஞர் அவர்கள் காட்டினார்).*

## நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம்

இறுதியாக அரசாங்கத்திடம் இருப்பது மூன்றரை இலட்சம் ஏக்கர் தரிசு நிலம்தான், எப்படி எல்லா




விவசாயிகளுக்கும் நிலத்தைக் கொடுக்க முடியும். ஒரு கோடி 82 இலட்சம் விவசாயிகள் இருக்கிறார்களே என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய தேர்தல் அறிக்கையிலும் சரி, ஆளுநர் உரையிலும் சரி, குறிப்பிட்டுள்ள வாசகத்தை சரியாகப் படிக்காமல், அல்லது படித்து வேண்டுமென்றே திருத்தி அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றே கருதுகின்றேன். அதில் என்ன இருக்கிறது என்றால், நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு என்றிருக்கிறது. விவசாயிகளுடைய எண்ணிக்கையைச் சொல்ல வில்லை. விவசாயக் குடும்பங்களுக்கு என்றுதான் தேர்தல் அறிக்கையிலே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு குடும்பத்தில் மூன்று பேர், நான்கு பேர்கூட இருப்பார்கள். அதனால் விவசாயக் குடும்பங்கள் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம். அதன்படி கொடுப்பதற்கு முடியும் என்பது நம்முடைய கருத்து. அரசு நிலம் அவ்வளவு எங்கிருக்கிறது என்ற ஒரு கேள்வி பிறக்கிறது. நாம் அவ்வளவையும் அரசு நிலம் என்று சொல்லவில்லை, ஏழைகளின் நிலம் என்று சொல்கிறார்கள், ஏழைகளின் நிலமாக இருந்தாலும் கூட, அதை கிராம பாஷையில் செய்நேர்த்தி என்று சொல்வார்களே, அதை சீர் செய்து, செய்நேர்த்தி செய்து, பதப்படுத்தி, பண்படுத்தி வைக்காத நிலமாக இருந்தால், அந்த ஏழை விவசாயியிடம் பணம் இருக்காது, எனவே அதைப் பண்படுத்தி அந்த ஏழை விவசாயிக்கே வேண்டுமென்றால் அவருக்கே திருப்பிக் கொடுக்கிற காரியம். வேண்டாமென்றால் அதற்கொரு விலையைக் கொடுத்து, இன்னொரு ஏழை விவசாயிக்கு அதைக் கொடுக்கிற காரியம்தான் நாம் சொன்ன தத்துவமே தவிர, வேறல்ல என்பதை நான் விளக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு ம.தி.மு.க.வினுடைய பொதுச் செயலாளர் நேற்றைக்கு சொல்லியிருக்கிறார். தமிழகத்திலே 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் கொடுப்பதாக இருந்தால், 1 கோடியே 72 இலட்சம் ஏக்கர் நிலம் தேவைப்படும். தமிழகத்தில் எங்கே இவ்வளவு நிலம் இருக்கிறது? அரசிடம் 3 இலட்சம் ஏக்கர் நிலம்தான் உள்ளது என்று புள்ளி விவரங்களை விரல் நுனியிலே வைத்துக் கொண்டு, கேள்விகளைக் கேட்டு, ஆளுங்கட்சியைத் திணறடித்தாரே, இதற்கு இவர்களால் பதில் கூற முடிந்ததா? என்று வைகோ அவர்கள், அவருக்கே உரிய புயல் வேகத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

மூன்று முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இதைக்கூட எப்படி புரிந்து கொள்ளாமல் இருக்கிறார் என்பது புரியவில்லை. தமிழகத்தில் 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்– நான் முதலிலே சொல்லியபடி, விவசாயக் குடும்பங்கள் என்று பார்த்தால் 20 இலட்சம் குடும்பங்கள்தான் வரும். நாங்கள் ஒன்றும் எல்லோருக்கும் கொடுக்கிறோம் என்று சொல்லவில்லை. நாம் சொன்னது என்னவென்றால் இருக்கிற நிலத்தை எடுத்துப் பிரிக்கும்போது நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறோம். இருக்கிற நிலத்தை எடுத்து நாம் பிரித்துத் தரும்போது நிச்சயமாக 20 இலட்சம் பேருக்குக் கொடுக்க முடியும். அவ்வளவு நிலம் இருக்கிறது என்பது நம்முடைய கணிப்பு. அந்தக் கணிப்பின்படிதான் சொல்கிறோம்.

ஒரு கோடியே 72 இலட்சம் ஏக்கர் தேவைப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், இந்த சந்தேகம் எப்பொழுது வந்திருக்க வேண்டும்? என் கையில் இருப்பது ம.தி.மு.க.வினுடைய தேர்தல் அறிக்கை *(ம.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையைக் காட்டுகிறார்).* அவர்களின் தேர்தல் அறிக்கையில் ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிறேன்.

"நிலமற்ற விவசாயத் தொழிலாளர் நலம்'' என்கிற தலைப்பில் "தமிழகத்தில் 2001–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 86 இலட்சம் நிலமற்ற விவசாயக் கூலிகள் உள்ளனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 31 விழுக்காடு ஆவர். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு தரிசு நிலங்களை தலா 2 ஏக்கர் நிலம் வழங்க வேண்டுமென்று மறுமலர்ச்சி தி.மு.க. வலியுறுத்தும்'' என்று எழுதியிருக்கிறார்கள். இதை எழுதும் போது, எங்கே போனது இந்தப் புத்தி?




இப்போது கேள்வி கேட்கின்ற அறிவுத் தெளிவு அப்போது எழுதும்போது இருக்க வேண்டாமா? 86 இலட்சம் பேருக்கு தலைக்கு இரண்டு ஏக்கர் நிலம் கொடுப்போம். அப்பொழுது இந்த 1 கோடியே 72 இலட்சம் ஏக்கர் எங்கிருந்து வரும்? என்கிறார்கள். நம்முடைய பெரிய திட்டங்களை சிறுமைப்படுத்த வேண்டுமென்பதற்காக – கொச்சைப்படுத்த வேண்டுமென்பதற்காக இதெல்லாம் சொல்லப் படுகின்றது. முடியுமா என்பது வேறு விஷயம். முடியாததை முடித்துக் காட்டுவதுதான் மக்களுக்கான ஒரு அரசினுடைய கடமையாக இருக்க முடியும். அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த மாமன்றத்திலே கூடியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகு, என்னுடைய விளக்கங்களை ஏற்று, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**ஜூன் 12 முதல் விவசாயிகளுக்கு புதிய பயிர்க்கடன்**

மேலும் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட இருப்பதால் குறுவை சாகுபடிக்குப் புதிய பயிர்க்கடனை கூட்டுறவு வங்கிகள் தரப்போகிறதா இல்லையா என்ற கேள்விக்குப் பதிலாக ஒரு அறிவிப்பு.

குறுவை சாகுபடிக்கு தேவையான புதிய பயிர்க்கடன்களை டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கிடத் தக்க வகையில் ஜூன் 12ஆம் தேதிக்கு முன்னதாகவே தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கு தேவையான நிதி உதவிகளை அரசு வழங்கும் *(மேசையைத் தட்டும் ஒலி).*

"

31.03.2006ஆம் ஆண்டு நிலுவையில் இருந்த கூட்டுறவுக் கடன்களைப் பெற்றிருந்த ஒவ்வொரு விவசாயிக்கும், ரத்து செய்யப்படும் மொத்தத் தொகையையும் குறிப்பிட்டு முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக "கூட்டுறவுக் கடன் நிலுவை இல்லை'' என்ற சான்றிதழ் வழங்கப்படும்

"

* * *

# “எதிர்க்கட்சியினரின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதில் எள் அளவும் நான் பின் வாங்க மாட்டேன்”



– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

**பே**ரவைத் தலைவர்கள் அவர்களே,

நீதிமன்றத்திலே நல்ல தீர்ப்பு தர வேண்டுமென்பதற்காக வாதாடிய இரண்டு வழக்கறிஞர்கள் இப்போது நல்ல தீர்ப்பு வழங்க வேண்டிய இடத்திற்கு வந்திருக்கிறார்கள். அவ்வாறு தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே ஒருவர் தாங்கள். மற்றொருவர் மாண்புமிகு துரைசாமி அவர்கள். இருவருமே திறமையான வழக்கறிஞர்கள். அதிலும் தாங்கள் மூத்த வழக்கறிஞர். மூத்த வழக்கறிஞர் மாத்திரமல்ல, அனுபவம் வாய்ந்த, ஆற்றல்மிக்க, நெல்லைச் சீமையிலே பெரும் புகழ்பெற்ற செல்லப்பாண்டியன் அவர்களுடைய மாணவராக இருந்து பயிற்சி பெற்றவர். செல்லப்பாண்டியன் அவர்கள் இந்த அவையை நடத்திய அந்தக் காலக் கட்டத்திலேயே நான் இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்திருக்கிறேன்.

கண்டிப்பு – கனிவு இரண்டும் மாறி மாறி அவருடைய நிருவாகத்தில், அவையை நடத்தும் பாங்கில் அப்போது காணப்பட்டது. அதற்குப் பிறகு பல அவைத் தலைவர்கள் இந்த அவையை அலங்கரித்தார்கள் என்றாலும்கூட, இப்போது அமைச்சராக இருக்கின்ற திரு.பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் அவர்கள் அந்தப் பெருமையைப் பெற்றிருந்தார்கள் என்றால் அது மிகையாகாது.

இந்தப் பழைய வரலாறுகளையெல்லாம் தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் மனதிலே பதிய வைத்துக் கொண்டு, இந்த அவைக்கு பெரும் சிறப்பை வழங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன்.


எதிர்க்கட்சிகளைப் பற்றியும், எப்படி ஆளுங்கட்சியினர் நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் நம்முடைய கண்ணப்பன், அறிஞர் அண்ணா அவர்களுடைய கூற்றிலே இருந்து சுட்டிக்காட்டினார். கிருஷ்ணராவ் அவர்கள் இந்த அவையின் தலைவராக வீற்றிருந்து, காங்கிரஸ் கட்சி கோலோச்சிய அந்தக் காலக் கட்டத்தில் அண்ணா அவர்களுடைய தலைமையில் நாங்கள் எல்லாம் 57ஆம் ஆண்டு எதிர் வரிசையிலே அமர்ந்திருந்தோம். எதிர்க்கட்சி வரிசையிலே அல்ல, எதிர்க்கட்சிக் குழு என்ற நிலையில் நம்முடைய பேராசிரியர் உள்ளிட்ட நாங்கள் 15 பேர் அமர்ந்திருந்தோம்.

அப்போது அண்ணா அவர்கள் பேரவைத் தலைவர் தேர்தலின்போது ஒன்றைச் சொன்னார்கள். கேரளத்தில் நடைபெற்ற ஒரு திருவிழாவின்போது, ஒரு யானையை கோயில் பிரகாரத்தில் அழைத்து வந்தார்கள். அந்த யானைக்கு இடப்பட்டிருந்த பணி, ஒரு கொடிக் கம்பத்தைத் தூக்கி, அதற்காக தோண்டப்பட்டிருந்த ஒரு குழியிலே நிறுத்த வேண்டும் என்பதாகும். ஆனால், அந்த யானை கொடிக் கம்பத்திற்கு அருகே வந்ததும், அந்தக் கம்பத்தைத் தூக்கி நிறுத்த மறுத்துவிட்டது. பிடிவாதம் செய்து பார்த்தும் யானை அதற்கு இணங்கவில்லை. கடைசியாக அந்த யானை அதைச் செய்ய மறுக்க என்ன காரணம் என்று பார்த்தபோது, அந்தக் கம்பத்தை நடுவதற்காக தோண்டப்பட்டிருந்த குழிக்குள், ஒரு சிறிய பூனைக்குட்டி இருந்தது. அந்தக் கம்பத்தை குழியிலே நட்டிருந்தால் பூனைக்குட்டி நசுங்கி இறந்துவிடும் என்பதற்காக யானை பூனைக்காக பரிந்துகொண்டு அந்தக் கம்பத்தை நடவில்லை என்று அண்ணா அவர்கள் இந்த உதாரணத்தைக் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்களின் இந்த உதாரணத்தைக் குறிப்பிடும் போது, நான் இங்குள்ள எதிர்க்கட்சியை பூனை என்ற அளவிலே சொல்லவில்லை. பெரிய யானை, சிறிய யானை என்ற அளவில் நான் அதனை எடுத்துக்கூறி – அந்த அளவில் எதிர்க்கட்சிகளை நடத்தவேண்டும் என்றும், யானைக்கு உள்ள பரிவு ஆளுங்கட்சிக்கு இருக்க வேண்டும் என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள்.

இந்த அவைக்கு என்று ஒரு வரலாறு உண்டு. 85 ஆண்டுகளுக்கு முன்பு 1921ஆம் ஆண்டு – அப்போது வெள்ளையர் ஆட்சியில் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது. இந்தியர்களுக்காக வகுக்கப்பட்ட அந்த அரசியல் சட்டத்தில் இரண்டே மாநிலங்களுக்கு இரட்டை ஆட்சி முறை கொண்டு வரப்பட்டது. அதை அறிவித்து தொடங்கி வைத்தவர் ட்யூக் ஆப் கென்னட் என்பவர். அந்த இரட்டையர் ஆட்சி இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்திலும், அடுத்தபடியாக சென்னை மாகாணத்திலும் தான் – அப்போது தமிழ்நாடு என்று பெயர் இல்லை – சென்னை மாகாணம் அப்போது ஆந்திரா, கர்நாடகம் உள்ளிட்ட பகுதிகளையும் இணைத்து இருந்தபோதுதான் அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டது. இரட்டைஆட்சிமுறை நீதிக்கட்சி ஆட்சியில் இந்த மாநிலத்தில் அப்போது இருந்தது. அந்த ஆட்சியில் ஒரு அமைச்சராக இருந்தவர்தான் பி.டி.ராஜன் அவர்கள் என்பதையும் சரித்திரம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் நீதிக்கட்சியின் பாரம்பரியம் தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்துகின்ற ஒரு வலிமையைப் பெற்றதற்குக் காரணம் நம்முடைய முழு முதல் கொள்கையாக இருக்கின்ற இடஒதுக்கீடு முறைதான், வகுப்புவாரி பிரதிநிதித்துவம்தான். அது இன்றளவும் இந்தியாவில் போராட்டமாக வெடித்துக் கொண்டிருப்பதை நாம் காணுகிறோம். அந்த சமூக நீதிப் போராட்டத்திற்கு

எனவே, ஆளுங்கட்சி கூட்டணியில் 163 பேர் வந்து விட்டார்கள் என்பதாலேயோ, எதிர்க் கட்சிகள் சார்பில் 70 இடங்களைத் தாண்ட வில்லை என்பதாலேயோ, அவர்களின் கருத்து களுக்கு மதிப்பளிப்பதில் எள் அளவும் நான் பின் வாங்கமாட்டேன் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் திராவிடத் தலைவர்கள் எந்த அளவிற்கு கை கொடுத்தார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டிய காலக் கட்டத்தில் இன்றைக்கு நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

இந்த அவையில் நீங்கள் அமர்ந்திருக்கின்ற இந்த அழகான ஆசனம் இருக்கிறதே இது, 1922 ஆம் ஆண்டு லார்டு வெலிங்டன் பிரபு அவர்களும், அவருடைய துணைவியாரும் இந்த அவைக்கு தங்களுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்து, பரிசாக அளித்த சிம்மாசனம்தான் இன்றைக்கு நீங்கள் அமர்ந்திருக்கின்ற ஆசனம். வெள்ளையர் என்ன தான் அன்னியராக இருந்தாலும்கூட, நியாயம் நீதி இவைகளை 9.5 சதவிகிதம் அளவிற்குக் கட்டிக் காத்தார்கள். நாம் முழுமையாக அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறபோது நீங்களும், அதற்கு அடங்கி நடக்க உறுதியெடுத்துக் கொண்டிருக்கின்ற நாங்களும் நிறைவேற்ற வேண்டும், நிறைவேற்றுவோம் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகத் திறமைவாய்ந்த ஒரு இடத்தில் பயிற்சி பெற்ற தாங்கள் அந்தத் திறமையை இந்த அவைக்குத் தரவேண்டுமென்று கேட்டு, அவையிலே சிறு சிறு மாச்சரியங்கள், சிறு சிறு தவறான கருத்துகள், புரிந்து கொள்ளாத தன்மைகள் புதியவர்கள் வந்திருக் கின்றவர்களுக்கு ஆளுங்கட்சி உட்பட எதிர்க்கட்சி உட்பட எல்லோருக்கும் ஏற்படக்கூடும். உதாரணமாக "பொய்" என்ற வார்த்தையை அவையிலே சொன்னால் அது அவைக்குறிப்பிலே இடம் பெறக்கூடாது. சொன்னவர் அந்த வார்த்தையைத் திரும்பப் பெறவேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அதற்காக "பொய்" என்ற வார்த்தையையே நாம் உச்சரிக்காமல் இருக்க முடியாது. அப்படி இருந்தால் திருக்குறளையே சொல்ல முடியாது.

"பொய்ம்மையும் வாய்மை இடத்த, புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்ற திருக்குறளிலே கூட பொய் என்ற வார்த்தை இடம் பெறுகிறது. அந்த "பொய்" என்பதைக்கூடச் சொல்ல முடியாமல் போய்விடும்.

அவையில் ஒருவரைக் குறிப்பிட்டு பொய் சொல்கிறார் என்று சொன்னால்தான் அது அவையிலே இடம் பெறக்கூடாத, அவைக் குறிப்பிலே இடம் பெறக்கூடாத ஒரு வார்த்தையாக இருக்க முடியும்.

இன்னொன்று, நான் திடீரென்று அவையை விட்டு இயற்கை உபாதையின் காரணமாகவோ, வேறு வேலையாகவோ, வெளியே செல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்போது யாராவது என்னைப் பற்றி குறிப்பிட்டு ஏதாவது பேசினால், திடீரென்று ஓர் உறுப்பினர் எழுந்து, அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசலாமா என்று கேட்பது ஒரு முறையாக இருக்கிறது. அதுவும் தவறு. அவையில் இல்லாதவர்கள் என்றால், அவைக்கே தேர்ந்தெடுக்கப்படாதவர்களாக இருந்தால்தான் அவையில் இல்லாதவர்கள் என்று பொருள்படும். அந்த நேரத்திற்கு வெளியே சென்றிருந்தால், அவர்கள் அவையிலே இல்லாதவர்கள் என்கின்ற அளவிற்குக்கூட சில நேரங்களில் இன்றல்ல, பல காலமாக இங்கே தர்க்கங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தச் சின்ன சின்ன விஷயங்களையெல்லாம் கூட நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

சட்டசபைக்கு என்று விதிமுறை புத்தகங்கள் இருக்கின்றன. அந்த நீதிகள், நெறிமுறைகள், சட்டங்கள், விதிகள், மரபுகள் இவைகள் எல்லாம் அச்சடிக்கப்பட்ட புத்தகம் இருக்கிறது. அதை ஒவ்வொரு உறுப்பினரும் படித்துப் பார்த்து, அதன்படி நடப்பதற்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியில் உள்ள அத்தனைபேரும் பயிற்சி பெறவேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளாக வைத்து, அந்தப் பயிற்சியை அவர்கள் ஒரு வேளை பெறாவிட்டாலும், தலைவர் அவர்களே, தாங்களும், துணைத்தலைவர் அவர்களே, தாங்களும் அவர்களுக்கு எடுத்துக் கூறி, அவையை நல்ல முறையிலே அமைதியாக நடத்தி, தமிழ்நாடு ஒரு ஜனநாயகப் பூந்தோட்டம் என்பதை நாட்டுக்கு, உலகத்திற்கு அறிவிக்க அனைவரும் உதவிடுவோம் என்று கூறி, தங்களையும், துணைத்தலைவர் அவர்களையும் வாழ்த்தி வரவேற்று அமைகிறேன்.

(தமிழக சட்டப்பேரவைக்கு
புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்
திரு.ஆவுடையப்பன், மாண்புமிகு சட்டப்பேரவை
துணைத்தலைவர் திரு.வி.பி.துரைசாமி ஆகியோரைப்
பாராட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
ஆற்றிய உரை – 19.5.2006)

* * *

தமிழ்நாடு அரசு

<u>சுருக்கம்</u>

கூட்டுறவு – பயிர்க்கடன்கள் – அனைத்து விவசாயிகளின் கூட்டுறவு பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் (சிசி1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.70. நாள் : 13.05.2006

<u>ஆணை :</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அனைத்து விவசாயிகளுக்கும் இதுவரை வழங்கப்பட்ட கூட்டுறவுக் கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

2. இந்த அறிவிப்பின்படி 31.3.2006 அன்று அனைத்து விவசாயிகளும் கூட்டுறவு சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையை முழுவதுமாக தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது. அனைத்து விவசாயிகளின் கூட்டுறவுக் கடனும் ரத்து செய்யப்படுவதால், விவசாயிகளிடம் அந்தக் கடனுக்கான வசூல் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது எனவும் அரசு ஆணையிடுகிறது. இந்த அரசாணையை நடைமுறைப்படுத்த விரிவான அறிவுரைகள் பின்னர் தனியே வெளியிடப்படும்.

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1664/நிதி (செயலர்)/ப்பி/2006 நாள்: 13.5.2006ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

# தமிழக அரசு செயல்படுத்தும் எல்லா நடவடிக்கைகளுக்கும் மத்தியத் திட்டக்குழு அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள்

வளர்ச்சித் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு எப்பொழுதும் முன்னிலை வகித்து வந்துள்ளது. நான்காம், ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.72 சதவிகிதம் என்றிருந்த தமிழ்நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதம், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 6.32 சதவிகிதமாக உயர்ந்தது. இந்த வளர்ச்சிப் பாதையில் தமிழகம் வெற்றிகரமாக நடைபோட்டு வந்ததைக் கண்டு நான் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைந்திருந்தேன். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தின் சராசரி வளர்ச்சி விகிதம், தேசிய சராசரி வளர்ச்சி விகிதத்தை விட குறைந்துள்ளது. வேளாண் தொழில், கடந்த ஐந்தாண்டுகளில் பெரிதும் பின்தங்கி வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனை மாற்றியமைக்க நாங்கள் உறுதி கொண்டுள்ளோம்.

**விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி**

2. மூன்றாண்டுகள் தொடர்ச்சியாகச் சந்தித்த வறட்சிக்குப் பிறகு வந்த சுனாமிப் பேரலை மற்றும் வெள்ளத்தால், வேளாண்மைப் பணிகளைத் துவக்குவதற்கு அரசின் உதவி விவசாயிகளுக்குப் பெரிதும் தேவைப்பட்டது. அதனால் கூட்டுறவு வங்கிகளில் 31.3.2006 வரை நிலுவையாக இருந்த விவசாயிகளின் கடன் சுமையை நாங்கள் அரசுப் பொறுப்பேற்ற அன்றே தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளோம். இந்த நடவடிக்கை விவசாயிகளுக்கு கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து புதுக்கடன் பெறுவதற்கு உதவுவதோடல்லாமல் கூடுதல் நிதியுதவிகளைப் பெறவும் வழிவகை செய்துள்ளது. விவசாயிகளுக்கு உதவி வழங்குவதற்காக வகுக்கப்பட்ட இந்தச் செலவினை திட்டச் செலவினமாகக் கருதும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

3. மாநிலத்தின் திட்ட ஒதுக்கீடுகளின் நிலை ஆய்வு செய்யப்பட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.40,000 கோடியில், கடந்த நான்கு ஆண்டுகளின் திட்டச் செயலாக்கத்தில்


சுமார் 68 சதவிகிதம் மட்டுமே எய்தப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டான 2006 – 07 ஆம் ஆண்டில், மாநிலத்தின் வளர்ச்சிக்கான தேவைகளை மனதில் கொண்டு இந்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை இறுதி செய்ய நாங்கள் விரும்புகின்றோம்.

### நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மானிய உதவி

4. இந்திய நாட்டில், சுமார் 6.25 விழுக்காடு மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில் 3 விழுக்காடு நீர்வள ஆதாரங்கள் மட்டுமே உள்ளன. பாசனத்திற்குத் தேவையான நீர், பற்றாக்குறையாக உள்ளது. மேலும், நிலத்தடி நீர்மட்டம் மாநிலத்தின் பெரும்பாலான இடங்களில் மிகவும் குறைந்து காணப்படுகிறது. குளத்துநீர் பாசனத் திட்டங்களைச் சரிசெய்து அவற்றின் கொள்ளளவை உடனடியாகப் பழைய நிலைக்கு உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரூ.500 கோடிக்கு மேலான திட்ட மதிப்பீடு கொண்ட, பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மட்டுமே, மைய அரசிடமிருந்து விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசன பயன்பாட்டுத் திட்டத்தின் (AIBP) கீழ் மானிய உதவி பெறுகின்றன. மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் ஏற்கெனவே பெருமளவில் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு, விவசாயத்திற்கு உதவும் வகையில், வரைமுறைகளைத் தளர்வு செய்து சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த மைய அரசு மானிய உதவி அளிப்பது முக்கியமாகும். விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன்பாட்டு திட்டத்தைப்போலவே குளங்களை சீரமைப்பதற்கும் மத்திய அரசு, மானியத்துடன் கூடிய நிதியுதவி வழங்க உள்ளதாக நான் அறிகிறேன். உலக வங்கி உதவியுடன், தமிழக அரசு செயல்படுத்த விழையும் நீர்ப்பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர் வள மேலாண்மைத் திட்டத்துடன் மத்திய அரசு, குளங்களின் சீரமைப்பிற்கான மானிய உதவியை விரைவில் வழங்கினால் இத்திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு உதவும் எனக் கருதுகிறேன்.

### அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்

5. ஊரகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 'பாரத் நிர்மாண்' திட்டத்தை கொண்டு வந்துள்ளமைக்கு மைய அரசுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் சுமார் 28,990 குடியிருப்புகளில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 40 லிட்டருக்கும் குறைவான அளவு தண்ணீரே கிடைக்கிறது. மாநிலத்திலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க எங்களது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இந்த நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் தமிழகத்திற்கு தாராளமான நிதியுதவி வழங்க கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஊரக வீட்டுவசதி (இந்திரா ஆவாஸ் யோஜனா) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கான நிதி ஒதுக்கீடு சமீப காலங்களில் குறைந்துள்ளது. தமிழகத்தில், வீடற்ற பல்லாயிரக் கணக்கானோர் உள்ள நிலையில் இத்திட்டத்திற்காக தமிழ்நாட்டின் நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்குமாறு மைய அரசை கேட்டுக்கொள்கிறேன்.



### சத்துணவில் வாரம் 2 முட்டைகள்

6. திரு. கே. காமராஜ் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15ஆம் தேதியை "கல்வி வளர்ச்சி நாளாக" அனைத்துப் பள்ளிகளிலும் கொண்டாட நாங்கள் முடிவு செய்துள்ளதை அறிந்து நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். அந்த நாள் முதல், பள்ளிகளில் பயிலுகின்ற குழந்தைகளின் ஊட்டச்சத்து நலத்தினை உயர்த்தும் வகையில், வாரத்திற்கு இருமுறை சத்துணவுடன் முட்டை வழங்கவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. கல்வியை வளர்க்கவும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நலத்தினை உயர்த்தவும் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாநில அரசின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில், மத்திய அரசு மதிய உணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு அதிக நிதியுதவியினை அளித்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

7. மாநிலத்தின் ஆண்டுத் திட்டத்தினை செயல்படுத்த நிதி ஆதாரங்கள் ஆய்வு செய்யப் பட்டுள்ளன. இந்த நிதி ஆண்டின் திட்டச் செலவுகளுக்காக ரூ.12,000 கோடி அளவுக்கு நிதி ஆதாரங்கள் உள்ளன என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. ஆனாலும் மத்திய அரசு கூடுதல் நிதியுதவி அளிப்பதன் மூலம் திட்ட அளவை, உயர்த்த எண்ணியுள்ளோம். இந்த ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் தமிழ்நாட்டுக்காக மத்திய அரசு நிதியுதவியாக ஒதுக்கப்பட்ட தொகையில் சுமார் 45 விழுக்காடு மட்டுமே பெறப்பட்டுள்ளது. ஆகையால், இந்த ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டில் மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி பெறுவது மிகவும் அவசியமாகிறது. மத்திய திட்டக் குழுவின் துணைத்தலைவர் மாநிலத்திற்காக கூடுதல் நிதியுதவி வழங்கி உதவும்படி கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அளித்தால் மாநிலத்தின் திட்ட அளவு ரூ.12,000 கோடிக்கும் மேலாக அதிகரிக்கும்.

**பொருளாதார வளர்ச்சி – சமூகப் பாதுகாப்பு**

8. கடந்த இரண்டு நிதிக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழகத்திற்குக் கிடைக்கும் பங்கு பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், திட்டச் செலவுகளுக்கான மத்திய அரசின் நிதியுதவி பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே பெறப்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதும், ஏழை எளிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பதும் தலையாயக் கடமையாக ஏற்று திட்டங்களை செயல்படுத்துவோம். தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் நடத்தி செல்ல மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்பட வேண்டியதின் அவசியத்தை நான் மிகைப்படுத்தி சொல்ல வேண்டியதில்லை. மாநிலத்தின் வளர்ச்சிக்காக தமிழக அரசு செயல்படுத்தும் எல்லா நடவடிக்கைகளுக்கும் மத்தியத் திட்டக் குழு அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சிப் பணிகள் அடங்கிய விவரமான கோரிக்கை மனு ஒன்று, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் நேற்று கொடுக்கப்பட்டுள்ளது. அதன் நகல் ஒன்று தங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசின் முழு உதவியை பெறுவதற்கு நீங்கள் உதவுவீர்கள் என நிச்சயமாக நம்புகின்றேன்.

– புதுதில்லியில், 6.6.2006 அன்று நடைபெற்ற
மத்தியத் திட்டக்குழு கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை.

## வேலைவாய்ப்பகங்களில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்கள், பதிவினைப் புதுப்பித்துக் கொள்ள சிறப்புச் சலுகை

1.1.2005 முதல் 31.12.2005 வரையிலான காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் தங்களது பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் அவர்களுடைய பதிவினைப் புதுப்பித்துக் கொள்ள சிறப்புச் சலுகையாக மீண்டும் ஒரு வாய்ப்பளிக்க அரசு முடிவு செய்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஆணையிடுகிறது.

1. 1.1.2005 முதல் 31.12.2005 வரையிலான காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகங்களில் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளத் தவறியவர்கள் அவர்களுடைய பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.
2. இச்சலுகை பெற விரும்பும் நபர்கள் இந்த அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு உரிய ஆவணங்களுடன் மனு செய்ய வேண்டும்.
3. இச்சலுகை ஒருமுறை மட்டும் வழங்கப்படும்.
4. மூன்று மாதங்களுக்குப்பின் செய்யப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. 2005ஆம் ஆண்டிற்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்கள் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ❖

# வந்தார்! கண்டார்! வென்றார்!

**தமிழகத்திற்கு 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.12,500 கோடியாக உயர்வு**



2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை முடிவு செய்யும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மத்தியத் திட்டக் குழுவின் துணைத்தலைவர் திரு. மான்டெக் சிங் அலுவாலியா அவர்களையும், திட்டக் குழு உறுப்பினர்களையும் 6.6.2006 அன்று புதுதில்லியில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி மற்றும் தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், திட்டத் துறைச் செய்லாளர் உள்ளிட்ட தமிழக அரசின் அதிகாரிகளும் உடன் இருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது உரையில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 40,000 கோடியில், கடந்த நான்காண்டுகளின் திட்டச் செயலாக்கத்தில் சுமார் 68 சதவிகிதம் மட்டுமே எய்தப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீட்டிற்கு கூடுதலாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும், முக்கியக் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கான மத்திய அரசின் உதவியை அதிகரிக்குமாறும் கேட்டுக் கொண்டார். ஏழை எளியவர்களின் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்தவுள்ள புதிய திட்டங்கள் குறித்தும் மாநிலத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மாநில அரசு அளித்திட முன்வரும் முக்கியத்துவம் குறித்தும் மத்தியத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்கள் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார். திட்டக்குழு உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வலியுறுத்திய கோரிக்கையை ஏற்று 2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை ரூ.12,500 கோடியாக உயர்த்த மத்தியத் திட்டக்குழு தனது ஒப்புதலை அளித்தது.

2005–2006ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூபாய் 9,100 கோடி என்பது அதற்கு முந்தைய ஆண்டான 2004–2005ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடான

ரூபாய் 8,000 கோடியை விட 18.8 சதவிகித உயர்வு என்பதற்கு மாறாக; தற்போது 2005–2006ஆம் ஆண்டிற்கான ரூ.9,100 கோடி அளவிலான திட்ட ஒதுக்கீட்டோடு ஒப்பிடும் போது தற்போதைய ஒதுக்கீடு 37.4 சதவிகித அளவிற்கு குறிப்பிடத்தக்க உயர்வைக் காட்டுகின்றது.

மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவரும், தமிழக முதலமைச்சரும் திட்டக்குழு விவாதக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களைச் சந்தித்த போது, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

"திட்டக் குழுவின் துணைத் தலைவரோடும், உறுப்பினர்களோடும் பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றது. உற்சாகமாகவும் நடைபெற்றது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே நடைபெறுகின்ற பணிகளைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினோம். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு அதிகமாக இருக்கிறது. கடந்த ஆண்டு ரூபாய் 9,100 கோடி திட்ட ஒதுக்கீடு இருந்ததற்கு மாறாக, இந்த ஆண்டு மத்திய அரசின் உதவித் தொகையையும் சேர்த்து திட்ட ஒதுக்கீடு ரூபாய் 12,500 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது".


திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு.அலுவாலியா அவர்கள் செய்தியாளர்களிடம் கூறும்போது, விவாதம் விரிவாகவும் சுமூகமாகவும் நடைபெற்றதாகவும், தமிழக அரசு செயல்படுத்த முனைந்துள்ள புதிய திட்டங்களுக்கு தான் பாராட்டியதாகவும் கூறியதோடு, 2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூபாய் 12,500 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். ★



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை மாநகர குடிநீர் வழங்கும் பணிகள் குறித்து 5–6–2006 அன்று, சென்னையில் அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினார்கள். நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய நிருவாக இயக்குநர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



# மத்திய அரசின் உயர் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டை தாமதமின்றி முழுமையாகச் செயல்படுத்த அவசர சட்டம்



## மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம்

மத்திய அரசின் உயர்கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டை தாமதமின்றி முழுமையாகச் செயல்படுத்த அவசர கூட்டம் ஒன்றை முன் வைக்கலாம் என்று கருத்துத் தெரிவித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு :–

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி.), இந்திய நிருவாகவியல் கழகம் (ஐ.ஐ.எம்.) மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (ஏ.ஐ.எம்.எஸ்.) போன்ற கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்பது தமிழக மக்களின், குறிப்பாக இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்துள்ளது.

மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள, மத்திய அரசால் நிதியுதவி வழங்கப்படுகின்ற கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு அமலாக்கப்படும் என்ற மத்திய அரசின் அறிவிப்பினால் தமிழக மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இத்தகைய இடஒதுக்கீடு நடவடிக்கையோடு ஒடுக்கப்பட்ட பிரிவினரின் எதிர்காலம் இணைந்து உள்ளதால், இந்த அறிவிப்பை எந்தவித தாமதமும் இன்றி முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இந்த இடஒதுக்கீட்டை செயல்படுத்த அவசர சட்டம் ஒன்றை முன் வைக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

என்னுடைய வேண்டுகோள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டால் நாடு முழுவதுமுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மத்திய அரசுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ❖

# சென்னையில் அமையவுள்ள தகவல் தொழில்நுட்ப உயர்தனிக் கல்வி மையத்திற்கு 25 ஏக்கர் நிலம்

– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

தமிழகம் மின்னணு மற்றும் தொலைத் தொடர்புச் சாதனங்களின் தயாரிப்பில் ஒரு முன்னணி மாநிலமாக உருவாகி வருகிறது. இத்துறை, நிலையாக அமைய, வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் உயர் தகுதியும் பயிற்சியும் உள்ள மனித சக்தியின் தேவை மிக மிக அவசியம். இத்தேவையை நிறைவு செய்ய மத்திய அரசின், மனித வள மேம்பாட்டுத் துறை தகவல் தொழில் நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்திக்கான தேசிய அளவிலான உயர் தனிக் கல்வி மையத்தை சென்னையில் அமைத்திட முடிவு செய்துள்ளது.

உருவாக்கப்படவுள்ள இந்தக் கல்வி மையம் வடிவமைப்பு மற்றும் தயாரித்தலில் திறம்பட்ட பாட முறைகளைக் கொண்டிருக்கும். இயந்திரவியல், மின்னியல், மின்னணுவியல் மற்றும் மென்பொருள் பொறியியல் ஆகிய அனைத்தும் பாட முறையில் அடங்கியிருக்கும். இது தயாரிப்புத் துறையில், போட்டி வல்லமையைத் தொகுப்பதிலும், அதிகரிப்பதிலும் ஏதுவாக இருக்கும்.

இந்தக் கல்வி மையத்திற்குத் தேவையான 25 ஏக்கர் நிலம் தமிழக அரசால் கண்டறியப் பட்டுள்ளது. அது மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். தகவல் தொழில்நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்திக்கான உயர் தனிக் கல்வி மையத்தினை அமைப்பதில், தமிழக அரசு தேவையான ஒத்துழைப்பினை நல்குவதோடு மத்திய அரசுடன் இணைந்து செயல்படும். சென்னையில் அமையவுள்ள இந்த உயர் தனிக் கல்வி மையம் இந்தியாவில் அமையவிருக்கும் இரண்டு மையங்களுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும். 2003ஆம் ஆண்டு முதல் மத்திய அரசிடம் நிலம் ஒப்படைக்கப்படாமலும், முடிவெடுக்கப்படாமலும் இருந்த தால், கட்டடப் பணிகள் முடிந்து கல்வி மையம் தொடங்கப்படுவது தாமதப்பட்டு வந்ததைக் கருத்தில் கொண்டு, இந்தப் புதிய அரசு அமைந்ததும் முக்கியமான இந்த நேர்வில் இப்போது முடிவெடுத்து அறிவித்துள்ளது.

* * *

# டீசலுக்கு உயர்த்தப்பட்ட விற்பனை வரி குறைப்பு

**மாண்புமிகு
முதலமைச்சர் கலைஞர்
அவர்கள் அறிவிப்பு**

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலையேற்றம் அல்லது விலை மாற்றம் இவற்றின் காரணமாக இந்தியாவிலும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலை உயர்வு ஏற்படுவது; எந்தக் கட்சி ஆட்சியிலும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஆளுங்கட்சியாக இருப்பவை அதற்கான காரணங்களைக் கூறுவதும்; எதிர்க்கட்சியாக இருப்பவை எதிர்த்துப் போராடுவதும் ஜனநாயக அரசியலில் வாடிக்கையாகி விட்ட வருந்தத்தக்க நிலையென்பதில் இரு வேறு கருத்துக்கு இடமே இல்லை. ஆனால், இந்த முறை மத்திய அரசு ஒரு சில மாதங்களாகவே பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்தவேண்டிய கட்டாய நிலைக்கு உட்பட்டும், பலமுறை அதனை ஒத்தி வைத்து, தோழமைக் கட்சிகள் எல்லாம் ஒத்துக் கொள்ளாத நிலையில், ஏன்; மத்திய அரசை ஆளும் பிரதானக் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களே அதனை வரவேற்காத நிலையில், வேறு வழியின்றி இந்த விலை உயர்வு செய்யப்பட்டுள்ளது.

பெட்ரோலியப் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பதற்கு வழிவகை காண்பதும் – அந்தப் பொருள்களுக்கு மாற்றாக எரிசக்தியை எப்படி உற்பத்தி செய்வது என்பதற்கான ஆய்வுகளை விரைவுபடுத்தி, அவற்றைப் பயன்படுத்த முனைவதும்தான் – இந்தப் பிரச்சினையை தொலைநோக்குடன் அணுகிப் பரிகாரம் காணுகிற திட்டமிட்டச் செயலாக இருக்க முடியும்.



தற்காலிக அவசர அவசியமான பரிகாரமாக வேண்டுமானால்; மத்திய அரசும், மாநில அரசுகளும் அந்தப் பொருள்களின் மீது விதிக்கின்ற பலவிதமான வரிகளின் சுமையைக் குறைக்கலாம் என்ற ஒரு கருத்து முன் வைக்கப்படுகிறது.

மத்திய அரசு அது பற்றி சிந்தித்து; சாதாரண சாமான்ய மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயராமல் தடுத்திட முன்வர வேண்டும்; சில மாநில அரசுகள், அந்தப் பொருள்களின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியைக் குறைப்பது பற்றி பரிசீலித்து முடிவு அறிவித்துள்ளன.

நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் இவற்றின் விலை உயராத நிலை நமக்கு ஆறுதல் அளிக்க வல்லது என்றாலும்; சாதாரண மக்கள் பாதிப்புக்குள்ளாகக் கூடிய டீசல் விலையேற்றத்தையாவது குறைப்பதற்கு; அதற்கு மாநில அரசு விதிக்கும் விற்பனை வரியை ஓரளவாவது குறைத்திட வேண்டியுள்ளது. எனவே, இப்போது டீசலுக்கு ஏற்றப்பட்டுள்ள லிட்டருக்கு இரண்டு ரூபாய் இருபத்து மூன்று பைசா என்ற அதிக விலையில் அடங்கியுள்ள விற்பனை வரியைத் தள்ளுபடி செய்வதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதனால் டீசலுக்கு ஏற்றப்பட்ட இரண்டு ரூபாய் இருபத்து மூன்று பைசா அதிக விலை என்பது ஒரு ரூபாய் எழுபத்தெட்டு பைசா என அமையும். இதற்கே ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு இழப்பு ரூபாய் 180 கோடி ஆகும். இந்த இழப்பினை ஈடுகட்ட பஸ் கட்டணத்தை சிறிதாவது உயர்த்த வேண்டும் என்ற யோசனை சொல்லப்பட்ட போதிலும், பயணிகள் நலன் கருதி இந்த அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. கட்டண உயர்வு யோசனையை ஏற்காத காரணத்தினால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மேலும் ரூபாய் 100 கோடி இழப்பையும் தாங்கிட வேண்டியுள்ளது. எனவே ஆண்டு ஒன்றுக்கு மொத்த இழப்பு ரூபாய் 280 கோடி ஆகிறது. பொதுமக்களின் துயரில் பங்கேற்றுக் கொள்ள வேண்டுமென்ற இந்த அரசின் நல்ல எண்ணத்தைப் புரிந்து கொண்டு, அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டு மக்கள் இந்தச் சலுகையினை பெரிதும் வரவேற்று ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.




அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் தீவிர மாணவர் சேர்க்கை வாரத்தையொட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள செய்தி

# தமிழகத்தில் கல்லாதார் எவருமில்லை என்ற நிலையை உருவாக்குவோம்

அளவற்ற ஆற்றலுடன் பூமியில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் நமது நாட்டின் கருவூலம் ஆகும். இவர்கள் அனைவருக்கும் தரமான கல்வி வழங்கி வளமான வாழ்வுக்கு அடித்தளமிடும் உயரிய குறிக்கோளுடன் அனைவருக்கும் கல்வி இயக்கம் செயல்பட்டு வருகிறது.

இவர்களுள் ஒரு விழுக்காடு குழந்தைகள் ஆதரவற்று, தெருவோரக் குழந்தைகளாய், குழந்தைத் தொழிலாளர்களாய் பள்ளிகளுக்குச் செல்லாமல் கல்வி வாய்ப்பு இழந்து நிற்கின்றனர்.

இவர்களையும் கல்வி நீரோட்டத்தில் இணைத்திட ஜூன் 3 முதல் 9 வரை தீவிர மாணவர் சேர்க்கை வாரம் செயல்படுத்த பள்ளிக் கல்வித்துறை ஏற்பாடு செய்துள்ளது மகிழ்வூட்டும் செய்தியாகும்.

இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடை, இரண்டு முட்டையுடன் கூடிய சத்துணவு, மேம்படுத்தப்பட்ட பள்ளிக் கட்டமைப்பு வசதிகள், இடைநின்ற குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, உதவிப் பொருட்களுடன் உறைவிட முகாம் என எண்ணற்ற வாய்ப்புகளும், வசதிகளும் பள்ளிக் குழந்தைகளுக்கு உள்ளன.

இவற்றைப் பயன்படுத்தி தமிழகத்தில் கல்லாதார் எவருமில்லை என்ற நிலையை உருவாக்கிடவும் சமூக மறுமலர்ச்சித் தெளிவும், சமூக நீதியும் கலை இலக்கியச் செறிவும் நிறைந்த பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழும் தமிழகத்தை விரைவில் நூறு விழுக்காடு சேர்க்கை அடைந்த மாநிலமாக மாற்றிடவும் உறுதி கொள்வோமாக!

* * *



# அரசு பொதுத் தேர்வுகளில் சாதனைகள் படைத்த 10, 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்குப் பரிசு

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கினார்

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து அரசுத் தேர்வுத் துறை நடத்தும் 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனை படைக்கும் மாணவ, மாணவியரின் உயர் கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்கும் திட்டம் 1996–ஆம் ஆண்டில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டதாகும்.

அத்திட்டத்தின்படி, 2006 மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் சாதனை படைத்த, 14 மாணவ, மாணவியர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை 13.6.2006 அன்று காலை தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அம்மாணவர்களின் உயர்கல்விச் செலவினங்களை தமிழக அரசு ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களை அவர்களிடம் வழங்கி வாழ்த்தினார்.

அவ்வமயம், பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஈரோடு கலைமகள் கல்வி நிலைய பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ஏ. ரம்யா, நாமக்கல், வரகூராம்பட்டி வி.வி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி ஆர். தாரணி ஆகிய இருவரும் 491 (500க்கு) மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் முதலிடம் பெற்றமைக்காக அவர்களுக்குத் தலா ரூ.7,500 வீதமும், கோபிச்செட்டிப்பாளையம் அந்தியூர் ஆதர்ஷ் வித்யாலயா உயர்நிலைப்பள்ளி மாணவி ட்டி. மஞ்சு ரோஜா, திருச்சி ஈ.ஆர். மேல்நிலைப்பள்ளி மாணவர் சீ. பிரசாந்த், சென்னை மயிலாப்பூர் சாந்தோம் மேல்நிலைப்பள்ளி மாணவர் எல்.கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவரும் 489 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றமைக்காக அவர்களுக்குத் தலா ரூ.6,000 வீதமும், நாகர் கோவில் புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப் பள்ளி மாணவியர் ஆர். அன்னிவின் பியூலா, ஆர். மீனாகுமாரி, கோபிச்செட்டிப்பாளையம் ஐடியல் மேல்நிலைப்பள்ளி மாணவர் கே.என். நிர்மல் குமார், நாமக்கல் வரகூராம்பட்டி வி.வி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜி. பவித்ரா, தஞ்சாவூர் புனித இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி ஏ.எஸ்.நிறைமதி ஆகியோர் 488 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றமைக்காக அவர்களுக்குத் தலா ரூ.5,000 வீதமும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிசுத் தொகைகள் வழங்கிப் பாராட்டினார்.

அதே போல், 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் சென்னை நங்கநல்லூர் பிரின்ஸ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவர் திரு. வி. பரத்ராம், 1,180 மதிப்பெண்கள் (1200க்கு) ஈட்டி, மாநில அளவில் முதல் இடம் பெற்றமைக்காக ரூ.15,000, சென்னை கோபாலபுரம் டி.ஏ.வி. மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் எஸ். சாந்த பிரகாஷ், டி.சி. விவேக் சந்தீப் ஆகிய இருவரும் 1,179 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றமைக்காக தலா ரூ.12,000, கிருஷ்ணகிரி ஊத்தங்கரை எஸ்.வி. மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜி. பானுப்பிரியா 1,177 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றமைக்காக ரூ.10,000 என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிசுத் தொகைகள் வழங்கிப் பாராட்டுத் தெரிவித்தார்.

சாதனை படைத்த மாணவ மாணவியரும், அவர்களது பெற்றோரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களது இந்தத் திட்டம் மகத்தானது என்றும், இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 200 மாணவ, மாணவியர் அரசின் செலவிலேயே படித்து முன்னேறும் அரிய வாய்ப்புகள் கிடைக்கின்றன என்றும், தங்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கியமைக்காக மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகவும் நன்றியுணர்வோடு கூறி, மனம் நெகிழ்ந்து பாராட்டினர். ❐




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம்

# தமிழ்நாட்டில் 7,250 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் மோட்டோரோலா நிறுவன தொழிற்சாலை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மற்றும் மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் ஆகியோர் முன்னிலையில் தமிழக அரசிற்கும் மோட்டோரோலா (USA) நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 7.6.2006 அன்று மாலை சென்னை தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது.

மோட்டோரோலா நிறுவனம் சென்னைக்கு அருகிலுள்ள திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள சிப்காட் (SIPCOT) தொழில் பூங்காவில் தொலைத் தொடர்புச் சாதனங்கள், பொருட்கள், செல்போன்கள் மற்றும் துணை பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ.135 கோடி முதலீட்டுடன் நிறுவ உத்தேசித்துள்ளது. இத்தொழிற்சாலையின் மூலம் சுமார் 7,250 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அதோடு இத்தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு புதிய துணை நிறுவனங்கள் தொடங்க வாய்ப்புள்ளதால் இத்திட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார முன்னேற்றம் பல மடங்கு அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற மோட்டோரோலா நிறுவனம் தமிழகத்தில் முதலீடு செய்ய முடிவு செய்துள்ளதைத் தொடந்து, மேலும் பல பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவும் என எதிர்பார்க்கப்படுகிறது.



உலகெங்கும் பல இடங்களில் தொழிற்சாலைகளை அமைத்துள்ள மோட்டோரோலா நிறுவனம், உலகிலுள்ள 100 மிகப் பெரிய நிறுவனங்கள் பட்டியலில் ஒன்றாகும். 2005 ஆம் ஆண்டில் அந்த நிறுவனத்தின் உற்பத்தி மதிப்பு ரூ.1,65,000 கோடி ஆகும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் உற்பத்தியில் இது முன்னணி நிறுவனமாகவும் விளங்குகிறது. தற்போது, 73 நாடுகளில் 320 தொழிற் சாலைகளின் மூலம் மோட்டோரோலா நிறுவனம் சுமார் 68,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளித்துள்ளது.

தமிழக அரசின் சார்பில் தொழில்துறைச் செயலர் திரு.சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., மோட்டோரோலா நிறுவனத்தின் சார்பில் அதன் இந்திய அமைப்பு தலைவர் திரு. பிரோஸ் வாண்ட்ரேவாலா மற்றும் இந்நிறுவன அமெரிக்கக் கிளை செயல் துணைத் தலைவர் திரு. ஸ்டுவார்ட் ரீடு ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ★

# குழந்தைத் தொழிலாளர் என்னும் குறையில்லா மாநிலம் தமிழகம் எனப் பறைசாற்றிடுவோம்!




இன்றைய குழந்தைகள் நாளைய உலகை வழிநடத்தும் நாயகர்கள்! எதிர்காலத்தின் ஏற்றமிகு தூண்கள்! நம்பிக்கை ஒளிக்கீற்றுகள்! குழந்தைகளின் திறன்களைக் கண்டறிந்து, பேணி வளர்த்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டிய பொறுப்பும் கடமையும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

குழந்தைப் பருவத்தின் இன்பகரமான வாழ்வும், இனிய கல்வியும் கிடைக்கப் பெறாமல் குழந்தைத் தொழிலாளர்களாய்ப் பலர் வாடிவதங்குவதை ஆங்காங்கே காண முடிகிறது. இந்நிலை முற்றிலும் மாற்றப்பட்டாக வேண்டும் என்பதைத் தமிழக அரசு தனது முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகக் கருதுகிறது.

ஆண்டுதோறும் ஜூன் திங்கள் 12ஆம் நாள், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு நாளாக உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாளில், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் குறிப்பாக அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழிற்சங்கங்கள், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட ஓங்கிக் குரல் கொடுத்திட வேண்டும்.

இனி ஒரு விதி செய்வோம். குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுப்போம் என ஒவ்வொரு வீட்டிலும் தெருவிலும் ஊரிலும் நாட்டிலும் முழங்கிட வேண்டும்.

14 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் ஒருவர்கூட கடைகளிலோ, உணவு நிறுவனங்களிலோ, தொழிற்சாலைகளிலோ, வேறு பணிகளிலோ ஈடுபடுவது தடுக்கப்பட்டு, இலவசக் கல்வி, இலவசச் சீருடை, முட்டையுடன் கூடிய மதிய சத்துணவு, இலவசப் பாடநூல்கள், இலவசப் பேருந்து பயணச் சலுகை முதலிய பல்வேறு வசதிகள் சலுகைகளுடன், குடியிருப்புகளுக்கு அருகில் பள்ளிகள் உள்ள நிலையில் குழந்தைகள் அனைவரும் தரமான கல்வியைத் தவறாமல் பெற்று, தரணியில் சுகமாக வாழ வழிவகுத்துத் தருவோம் எனக் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு நாளில் அனைவரும் உறுதி ஏற்போம்! குழந்தைத் தொழிலாளர் என்னும் குறையில்லா மாநிலம் தமிழகம் எனப் பறைசாற்றிடுவோம்.

**மு. கருணாநிதி**
தமிழக முதலமைச்சர்

# குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் 12.6.2006

உலகம் முழுவதும் ஜுன் 12 ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்படுகிறது. நமது தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

ஜுன் 12 ஆம் தேதி காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெளிச் சுவற்றில் "குழந்தை உரிமைகள்" குறித்த கருத்து சித்திரங்களை சென்னை, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளி மாணவர்கள் 25 பேர் வரைந்தனர்.

காலை 11.00 மணியளவில் கலைவாணர் அரங்கத்தில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின கூட்டம் நடைபெற்றது. சென்னை, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளி மாணவர்கள் 700 பேரும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைத் துறை அலுவலர்களும் பங்கேற்றனர்.

சென்னை, தொழிலாளர் ஆணையர் டாக்டர் வி.வரபிரசாதராவ்., இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசியபோது "உழைப்பிலிருந்து குழந்தைகளை விடுவிப்பதும், அவர்களது மறுவாழ்வை உறுதி செய்வதும் இந்தியா சந்தித்து வரும் மிகப் பெரிய சவால் ஆகும். இது இந்தியாவிற்கு மட்டுமே உரித்தான பிரத்தியேகமான பிரச்சினை இல்லை. இது உலகம் தழுவிய ஒரு பிரச்சினை ஆகும். இந்திய அரசால், அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ், குழந்தைத் தொழிலாளர்கள் முறையை கட்டுப்படுத்த 1986இல் குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் கொண்டு வரப்பட்டது. மேலும், 1987இல் தேசிய அளவில் குழந்தைத் தொழிலாளர் திட்டம் சிறப்புக் கொள்கையாகவும் கொண்டு வரப்பட்டது. சட்டங்கள் மூலமும், குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்பு மற்றும் கண்டறியப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை பணியில் இருந்து விடுவித்து அவர்களுக்கு நல்வாழ்வு அளித்திடவும் இத்துறை பெருமுயற்சி எடுத்து வருகிறது. ஆண்டுதோறும் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் பள்ளி சேரா குழந்தைகள் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இக்கணக்கெடுப்பின்படி 2003ஆம் வருடத்தில் 70,344 பேரும், 2004இல் 46,153 பேரும், 2005ஆம் வருடத்தில் 25,679 பேரும் கண்டறியப்பட்டது. இது படிப்படியாக குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை தமிழ்நாட்டில் குறைந்து வருகிறது என்பது உறுதியாகிறது" என தெரிவித்தார்.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலர் திரு. ரமேஷ் குமார் கண்ணா, இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில் "குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக மத்திய அரசு உதவியுடன் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், தருமபுரி,

கிருஷ்ணகிரி, ஈரோடு, சென்னை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகள் பணிகளிலிருந்து மீட்கப்பட்டு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப் படுகின்றனர். 17,472 குழந்தைகள் 454 சிறப்புப் பள்ளிகளில் படித்து வருகின்றனர். அவர்களுக்கு கல்வியுடன் தொழிற்கல்வியும் வழங்கப்பட்டு வருகிறது. மாதந்தோறும், ரூ.100 ஊக்கத் தொகையாக வழங்கப் படுகிறது. இலவச மருத்துவப் பரிசோதனை மேற் கொள்ளப்படுகிறது. மதிய சத்துணவு, இலவச சீருடை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப் படுகிறது. சில மாவட்டங்களில் உள்ள சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் முறைச்சார்ந்த பள்ளிகளில் பயின்று வருகின்றனர். இத்திட்டம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை 41,811 குழந்தைகள் முறைச் சார்ந்த பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்'' என தெரிவித்தார்.




மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமை உரை ஆற்றுகையில், "குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையின் தன்மையை நன்கு உணர்ந்துள்ள டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசு, குழந்தைத் தொழிலாளர்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது, அனைத்து குழந்தைகளும் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டுமென்ற நிலையில் உறுதியாக உள்ளது. குடும்ப வறுமையின் காரணமாக பள்ளிக்குச் செல்லும் குழந்தையை இடையிலே படிப்பை நிறுத்தி விட்டு வேலைக்கு அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் பெரும்பாலான குடும்பங்களுக்கு உள்ளது. இந்நிலை தொடரக்கூடாதென்பதை மனதில் கொண்டு பள்ளி மாணவர்களுக்கு பள்ளியில் சிறந்த சத்துணவு வழங்கவும், வாரந்தோறும் இரண்டு முட்டைகள் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அத்துடன் மட்டும் நில்லாது வறுமையின் காரணமாக குழந்தை படிப்பைத் தொடர முடியாமல் போவதைத் தடுக்க மலிவு விலையில் அதாவது ரூ.2க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்ததுடன் அதனை தமிழகமெங்கும் உடன் செயல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள். இதன் காரணமாக வறுமை என்பதை காரணங்காட்டி குழந்தையை பள்ளியிலிருந்து இடைநிறுத்துதல் என்ற நிலை இனி வெகுவாகக் குறையும் என்பதில் ஐயமில்லை. குழந்தைத் தொழிலாளர் முறை எனும் கொடிய முறையை அகற்ற தமிழக அரசு தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்களே இல்லை எனும் நிலையினை டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை'' என்று கூறினார்.

பின்னர், மாண்புமிகு தொழிலாளர்த்துறை அமைச்சர் அவர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டம் ஆகியவற்றின் கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் 16 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளையும், அமைப்பு சாரா வாரியத்தின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளையும் வழங்கி, குருத்து என்ற இரு மாத இதழின் நான்காவது பதிப்பினை வெளியிட்டார்.

இக்கூட்டத்தின் முடிவில், காஞ்சிபுரம், இண்டஸ் சிறப்புப் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சியும், தருமபுரி தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தில் பணிபுரியும் விடியல் கலை குழுவினரின் நாடகமும், கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. நிறைவாக, தொழிற் சாலைகளின் தலைமை ஆய்வர் திரு.கா.அ.முகமது அசிஸ் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

* * *

நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை தி.மு.க. ஆட்சியில் 18–9–1989 அன்று 150 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தியதுடன், நலிந்த கலைஞர்களின் எண்ணிக்கையும் 200 லிருந்து 300 ஆக உயர்த்தப்பட்டது. மீண்டும் தி.மு.கழக ஆட்சி 1996ஆம் ஆண்டு அமைந்தபோது, நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவி 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டதுடன், ஆண்டுதோறும் 300 பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த உதவித் தொகை 500 பேருக்கென உயர்த்தி வழங்கப்பட்டது.

1996–2001 தி.மு.கழக ஆட்சியில் 4,267 நலிந்த கலைஞர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றனர்.


# நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நிதி உதவி

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு அவசர அவசரமாக கலைமாமணி விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது.

25–2–2006 அன்று நடைபெற்ற அந்த விழாவில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நலிந்த கலைஞர் களுக்கு திங்கள்தோறும் வழங்கப்பட்டு வரும் நிதி உதவியை ரூ.500லிருந்து ரூ.750ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார். அதற்கான ஆணை வெளியிடுவதற்கான கோப்பு, அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டது.

நிதித்துறை இதற்கு இசைவளித்து, அதன் காரணமாக அரசுக்கு கூடுதலாக 1.55 கோடி ரூபாய் செலவாகும் என்றும் குறிப்பிட்டு, அந்தக் கோப்பு முதல் அமைச்சரிடம் ஆணை பெற வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். ஆணை வேண்டி, நிதித் துறை செயலாளர், தலைமைச் செயலாளர் பார்வைக்குப் பின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் உரிய நேரத்தில் கோப்பு அனுப்பப்பட்ட போதிலும், அவர் கடைசி நேரம் வரை அந்தக் கோப்பில் கையெழுத்திடவே இல்லை.




அந்த நலிந்த கலைஞர்களுக்கு மாதாந்திர நிதி உதவித் தொகையாக தலா ரூபாய் ஆயிரம் வழங்கப்படும் என்பதையும், அதற்கான ஆணை, 10.6.2006 அன்று பிறப்பிக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்வதாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15 முதல் சத்துணவுடன் வாரம் இரு முட்டைகள்



**1989** ஆம் ஆண்டு மே திங்களில் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்க்கு புரதச்சத்துடன் கூடிய உணவு வழங்க இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டத்தை முதன்முதலாகக் கலைஞர் தலைமையிலான அரசுதான் தொடங்கிவைத்தது. பின்னர், 1998ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்க்கு வாரம் ஒரு முறை முட்டை வழங்கும் திட்டமாக இந்த அரசு தான் மாற்றியமைத்தது. 2001ஆம் ஆண்டில் பதவியேற்ற கடந்த கால அரசு, சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்க்கு முட்டை வழங்கும் திட்டத்தை திடீரென நிறுத்திவிட்டது. பின்னர், 2004ஆம் ஆண்டு ஜூன் திங்களில் வாரத்திற்கொருமுறை முட்டை வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்தது.

தேர்தல் அறிக்கையில் சத்துணவுடன் வாரம் இருமுறை முட்டைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை நிறைவேற்றும் பொருட்டு பதவியேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், வாரம் இருமுறை முட்டை வழங்கப்படும் என்று அறிவித்து அதற்கான ஆணையை வெளியிட்டார். பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலைத் திங்கள் 15ஆம் நாளை 'கல்வி வளர்ச்சி நாள்' என்று கொண்டாடப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளதையொட்டி, அந்நாள் முதல், வாரம் இருமுறை முட்டை வழங்கப்படும் என்று 16–5–2006 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

சுயஉதவிக் குழுக்களின் வாழ்க்கை ஆதாரத்தை பெருக்கிப் பொருளாதார நிலையை உயர்த்திடும் வகையில், சுயஉதவிக் குழுக்களுக்கு கோழி வளர்க்கும் தொழிலை செய்வதற்காக தக்க நிதிஉதவி அளித்து சுயஉதவிக் குழுக்கள் கோழிகளை வளர்த்து உற்பத்தி செய்யும் முட்டைகளை சத்துணவுத் திட்டத்திற்காகக் கொள்முதல் செய்யும் செயல் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று, அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டம், ஏற்கெனவே உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுடன் புதிதாக தொடங்கப்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் இளைஞர் சுயஉதவிக் குழுக்களும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், (பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் சத்துணவு உட்கொள்ளும் 2 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் மாணவ மாணவிகளுக்கும் வாரம் இருமுறை முட்டை வழங்குதல் – புரதச் சத்து மிகுந்த உணவு வகைகள் வழங்கும் கிழமைகள் – திருத்தம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சஉதி – 3) துறை

அரசு ஆணை (நிலை) எண்.51 | நாள் : 24.5.2006

படிக்கப்பட்டது :

1. அரசு ஆணை (நிலை) எண்.499 பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறை, நாள் 26.5.89
2. அரசு ஆணை (நிலை) எண்.73 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 27.4.98
3. அரசு ஆணை (நிலை) எண்.95 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 16.6.2004
4. அரசு கடித (நிலை) எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 6.4.2005
5. அரசு ஆணை (நிலை) எண்.47, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 13.5.2006
6. அரசு ஆணை (நிலை) எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 19.5.2006

❖ ❖ ❖

ஆணை:

படிக்கப்பட்டவை, ஆறில் காணும் அரசாணையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) மற்றும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் சத்துணவு உட்கொள்ளும் 2 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் வாரம் இருமுறை முட்டை வழங்கிட ஆணையிடப்பட்டது. இதனுடன் புரதச்சத்து மிகுந்த உணவு வகைகள் வழங்கப்படுவதால் அமைச்சரவை எடுத்துள்ள முடிவின்படி முட்டைகள் மற்றும் புரதச்சத்து மிகுந்த உணவு வகைகள் வழங்கும் கிழமைகள் குறித்து பின்வருமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

2. படிக்கப்பட்ட ஆறில் காணும் அரசாணையில் பத்தி மூன்று நீக்கப்பட்டு அதற்கு பதிலாக கீழ்க்கண்ட பத்தி மூன்று சேர்க்கப்பட்டு ஆணையிடப்படுகிறது.

3. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினமான ஜூலை திங்கள் 15ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என்று கொண்டாடப்படும் என அரசு அறிவித்துள்ளதையொட்டி அந்நாள் முதல், வாரம் இருமுறை முட்டை வழங்கப்படும் என்றும், இதனால் தற்போது வழங்கப்படும் புரதச்சத்து மிகுந்த உணவு வழங்கும் நடைமுறையை பின்வருமாறு மாற்றி அமைக்கவும் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது :–

| | | |
|---|---|---|
| திங்கட்கிழமை | : | வேகவைத்த ஒரு முட்டை |
| புதன்கிழமை | : | வேகவைத்த ஒரு முட்டை |
| வியாழக்கிழமை | : | 20 கிராம் வேகவைத்த கருப்புக் கொண்டைக் கடலை (அல்லது)<br>20 கிராம் வேகவைத்த பச்சைப் பயறு |
| வெள்ளிக்கிழமை | : | 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கு |

4. இவ்வரசாணை நிதித்துறை இசைவுடன் அ.சா.கு.எண்.31937/சந/06, நாள் : 24.5.2006ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

என்.எஸ்.பழனியப்பன்

அரசு செயலாளர்

கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள்
ஜூன்24





# தமிழ்

முப்பாலுக் காப்பாலோர் பொருளு மில்லை!
மூவாத சிலம்பின்றோர் கூத்து மில்லை!
தப்பாத புறமல்லால் வீர மில்லை!
தளிர்போலும் அகமல்லால் காதல் இல்லை!
செப்பாகிச் சிலையான பொருளைப் போல(த்)
திறங்கொண்டு வேர்கண்ட தமிழில் லாமல்
எப்போதும் புகழ்பாடும் மொழியே இல்லை!
இருக்கின்ற தென்பான்தாய் பெண்ணே இல்லை!

# இலக்கியம்

பொதுவாழ்வில் பணியாற்றி இலக்கி யத்துப்
பொன்வீட்டில் இளைப்பாற்றப் புகுந்த காலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன் காணும்
மாறாக கனவுலகம் காட்சி யாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத் தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

புத்தகங்கள் அறிவுக்கே உணவை யூட்டிப்
புதிதான காட்சிகளை மனத்தி லேற்றி
வித்தகனாய்ச் செய்யுமென இலக்கி யத்து
வேலிக்குள் அடியெடுத்து வைத்தி டாது
நத்துமனப் பசிதீரப் படித்துப் பார்த்து
நாலைந்து பேர்களுக்கு விளக்கிக் கூறின்
அத்தனையும் அறிவாகி மனத்தி லேறும்;
அறிவாளி எனும்பெயரை உலகம் நல்கும்!

வள்ளுவரின் குறள்மீது விழியை நாட்டி
வடித்தஇரண் டடிஎடுத்து மனத்துள் போட்டு
தெள்ளிதின்நற் பொருள்கண்டே உளம்பூ ரித்துச்
சித்தரித்துப் பார்க்குங்கால் வளரும் எண்ணம்!
அள்ளுசுவை ஐம்பெரிய காப்பி யங்கள்
அடுக்கிவரும் உவமைநயச் சுவையால் என்றும்
கள்ளமனங் கூடநய நிலையைக் காணும்
கவிதையிலே திருவிடத்துச் சோலை பாடும்!

- கவியரசு கண்ணதாசன்



# விடியலைக் காணும் நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயிகள்

ஈரோடு மாவட்டம் நொய்யல் ஆற்றின் குறுக்கே ஒரத்துப்பாளையம் அணை 1992–இல் கட்டி முடிக்கப்பட்டு கரூர் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டது. அதன்படி அந்த அணை பாசனத்திற்கு 4 ஆண்டுகள் விவசாயத்திற்காகப் பயன்பட்டது. 1996–ஆம் ஆண்டிற்குப் பின்னர் உலக வர்த்தகத்தில் ஆயத்த ஆடை தயாரிப்பில் திருப்பூர் ஒரு முக்கியமான பங்கு வகிக்க தொடங்கியது. அங்குள்ள தொழிற்சாலையில் இருந்து வரும் சாயக்கழிவுகள் நொய்யல் ஆற்றில் கலந்து அணையில் தேக்கி வைக்கப்பட்ட நீரை மாசுபடுத்தியது. மேலும், அந்நகரம் வளர்ச்சி அடைந்து செல்லச் செல்ல நீரே சாய ஆறாக மாறியது. சாயக்கழிவு நீரைத் தேக்கி வைக்கும் ஒரு அணையாக ஒரத்துப்பாளையம் அணை மாறியது. இச்சூழ்நிலையில் ஈரோடு மாவட்ட நிருவாகம் விவசாயிகளுக்கு ஆறுதல் கூற முடியாமலும் கோவை மாவட்டம், திருப்பூரில் உள்ள தொழில் வளர்ச்சியை குறைக்க முடியாமலும் இந்தப் பிரச்சினை இரு மாவட்ட நிருவாகத்திற்கும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது. நாளுக்கு நாள் நொய்யல் ஆற்றுப் பாசன சபை விவசாயிகள் சங்கம், ஒரத்துப்பாளையம் பாசன சபை போன்ற விவசாய சங்கங்கள் அணையை பாதுகாக்க தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தன. இதை கருத்தில் கொண்ட தமிழக அரசு சட்டமன்றக் குழுக்கள் மற்றும் பல்வேறு குழுக்களை ஏற்படுத்தி இப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சித்தது. உச்ச கட்டமாக அனைத்து தொழிற்சாலைகளும் கழிவுநீரை வெளியேற்றும் போது சவ்வூடு பரவும் முறையை (Reversosmosis) அமைக்க வேண்டும் என உத்தரவிட்டது. அந்த உத்தரவை செயல்படுத்தாத தொழிற்சாலைகள் சில மூடப்பட்டன. இதில் திருப்தி அடையாத விவசாயிகள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் ஓய்வுபெற்ற நீதிபதி பாஸ்கரன் தலைமையில் உயர்மட்டக் குழுவை நியமித்தது. இந்தக் குழு ஒரத்துப்பாளையம் ஈரோடு, திருப்பூர் பகுதிகளுக்கு பல முறை பயணம் மேற்கொண்டு

பிரச்சினைகளை ஆராய்ந்து விவசாயிகள் போராடுவதன் நியாயத்தை உணர்ந்தது. அதே நேரத்தில் இந்தியாவிற்கு 6,000 கோடி ரூபாய் ஈட்டித் தரும் தொழில் வளங்களுக்கு எவ்வித பங்கமும் விளைவிக்காமல் ஒரு தீர்ப்பைக் கூறியது. அந்தத் தீர்ப்பில் சவ்வூடு பரவுதல் திட்டம் அமைத்து அதில் சுத்திகரிக்கப்பட்ட நீரை ஆற்றில் கலக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க வேண்டும். நொய்யல் ஆற்றைத் தூர்வாரி சுத்தப்படுத்த வேண்டும் என கூறப்பட்டது.

மேலும், ஒரத்துப்பாளையம் அணை தூர்வாரப்பட வேண்டும். சாயக்கழிவுகள் கலப்பதிலிருந்து விடுபட்டு நிரந்தர தீர்வுக்கான தொழில்நுட்பங்களை ஆராய வேண்டும். மேலும், விவசாயிகளுக்கு, நட்டஈடு வழங்குவதற்காகவும் தூர்வாருவதற்காகவும் ரூ.12.50 கோடியை திருப்பூர், ஈரோடு, கோவையில் உள்ள சாயப்பட்டறை தொழிற்சாலைகள் பங்கீடாக கோவை மாவட்ட ஆட்சியரிடம் செலுத்த வேண்டும் எனக் கூறிப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் திருப்பூர் சாயப்பட்டறை உரிமையாளர்கள் கோவை மாவட்ட ஆட்சியரிடம் முதல் தவணையாக ரூ.1 கோடி செலுத்தினர். அந்தப் பணத்தில் முதற்கட்டமாக 45 கி.மீ. நொய்யல் ஆற்றில் கால்வாய் தூர்வாரி சீரமைப்பதற்காக ரூ.8.2 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஈரோடு மாவட்ட நிருவாகத்தின் மூலம் நொய்யல் பாசன விவசாய சங்கத்தினரிடம் ஒப்படைத்து பணி தொடங்க உத்தரவிடப்பட்டது.

இதன் அடிப்படையில் 10 ஆண்டுகளாக தூர்வாராமல் முட்புதர்கள் மண்டிய நொய்யல் ஆற்று கால்வாயின் நிலையை மாற்ற தமிழக அரசு பதவியேற்றவுடன் பணியை தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டுக் கொண்டது, அதற்கேற்ப மாவட்ட ஆட்சித் தலைவரிடம் உடனடியாக பாசன விவசாயிகளுக்கு தூர்வாருவதற்காக பணம் ஒப்படைக்கப்பட்டது. தூர்வாரும் பணியின்போது முழு ஒத்துழைப்பு கொடுத்து பணியை செம்மையாகச் செய்திட பொதுப்பணித் துறையினருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். 10.6.2006 அன்று காலை 10 மணியளவில் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என் கே கே பி. ராஜா அவர்கள் தூர்வாரும் பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி மற்றும் மாவட்ட அதிகாரிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், பாசன சபை நிருவாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமா என்ற விவசாயிகளின் கேள்விக் குறியை ஆச்சரியக் குறியாக மாற்றி உடனடியாகத் தூர்வாரும் பணியை தொடங்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பாசன விவசாய சங்கத்தினர் மிகுந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தனர். இந்தப் பிரச்சினைக்கு இப்பணி ஒரு தொடக்கமாக இருந்தாலும் அது விவசாயிகளுக்கு நிச்சயமாக ஒரு விடிவாகவே இருக்கும் எனவும் அவர்கள் கூறினர்.

*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்*
*ஈரோடு மாவட்டம்*

* * *


**சந்தாதாரர் ஆகுங்கள்**

# தமிழரசு

தமிழக அரசின் செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வெளியிடப்படும் **தமிழரசு இதழில்** அரசு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய உரைத் தொகுப்புகள், கதை, கவிதை, கட்டுரைகள் என ஏராளமான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

**தமிழரசு சந்தா விவரம்**

**தமிழரசு (தமிழ்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | – | ரூ.10/– |
| ஆண்டுச் சந்தா | – | ரூ.120/– |
| ஆயுள் சந்தா | – | ரூ.1,000/– (10 ஆண்டுகள்) |


**தமிழரசு (ஆங்கிலம்) காலாண்டு இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | – | ரூ.15/– |
| ஆண்டுச் சந்தா | – | ரூ.60/– |
| ஆயுள் சந்தா | – | ரூ.500/– (10 ஆண்டுகள்) |

தமிழரசு சந்தா தொகையினை
வங்கி வரைவோலையாகவோ,
பணவிடை மூலமாகவோ,
**துணை இயக்குநர் (வெளியீடுகள்)**
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.
என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பார்க்க, படிக்க, பயன்பெற**

**இன்றே தமிழரசு சந்தாதாரர் ஆகுங்கள்**





## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
## நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில்
## யார் யாருக்கு நிதியுதவி கிடைக்கும்?

பல்லாயிரக்கணக்கான ஏழைப் பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்றிய, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வருகிறது. இத்திட்டத்தில் பயன்பெற,

1. மணப்பெண் குடும்பத்தின் ஆண்டு மொத்த வருமானம் ரூ.12,000க்குள் இருக்க வேண்டும்.
2. மணப்பெண்ணின் வயது திருமண நாளன்று 18 ஆண்டுகள் முடிவுற்றிருக்க வேண்டும்.
3. மணப்பெண் 10ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்; பழங்குடி இனத்தவராய் இருந்தால் மணப்பெண் 5ஆம் வகுப்பு வரை படித்திருந்தாலே போதும்.
4. திருமண நாளுக்கு 45 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணின் திருமணத்திற்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறலாம்.
6. சாதி மத பேதமின்றி ஏழைப்பெண்கள் அனைவரும் இத்திட்டத்தில் நிதி உதவி பெறலாம்.

உதவித் தொகை 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஏப்ரல் 2002 முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன், புதுப்பொலிவு பெற்று மீண்டும் 2006 – ஜூன் 3 – முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது என தமிழக அரசின் சமூக நலத்துறை அறிவித்துள்ளது.

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்



பெண்களுக்குக் கல்வி அறிவினை ஊக்கு விக்கும் பொருட்டும், ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த 10ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கும் பொருட்டும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் 3.6.1989 முதல் செயல்படுத்தப்பட்டு வந்தது. தொடக்கத்தில் நிதியுதவியாக 5,000 ரூபாய் வழங்கப்பட்டது. 88,293 ஏழைப் பெண்களுக்கு 44 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தை 1996–1997 முதல் நீட்டித்தும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவியை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தியும் இந்த அரசு அப்போது ஆணையிட்டது. 2,52,728 ஏழைப் பெண்களுக்கு 252 கோடியே 73 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது.

1.4.2002 முதல் இந்த திருமண நிதியுதவித் திட்டம் நிறுத்தப்பட்டது.

திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் புத்துயிர் அளித்து செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தின் கீழ் வழங்கி வந்த திருமண நிதியுதவித் தொகை 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஏழைப் பெண்களின் திருமணச் செலவிற்காக இத்திட்டம் ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வந்த விதிமுறைகளுடன் மீண்டும் 3.6.2006 முதல் செயல்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். மேலும், திருமண நிதியுதவித் தொகையும் 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகத் தற்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2006–2007ஆம் ஆண்டில் 33,333 ஏழைப் பெண்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப் படுகிறது. அதற்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

# அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பயிற்சி

## உயர்நிலைக்குழு அமைப்பு

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை

தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிக்கிணங்க, இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் தமிழ்நாட்டிலுள்ள இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்று அரசு முடிவு செய்து 23.5.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

அந்த அரசாணையின் தொடர் நடவடிக்கையாக அர்ச்சகராக பயிற்சி பெறுவதற்குத் தேவையான குறைந்தபட்சக் கல்வித் தகுதி மற்றும் வயது, பயிற்சிக்கான பாடத் திட்டம் மற்றும் கால அளவு, பயிற்சி சான்றிதழ் வகைகள்; பயிற்சி நிலையங்களின் நிருவாக அமைப்பு; பயிற்சியாளர்களுக்கு இடஒதுக்கீட்டு முறை போன்றவற்றை இரண்டு மாதங்களுக்குள் முடிவு செய்து அரசுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கிட உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.6.2006 அன்று ஆணையிட்டு உள்ளார்.

இந்த உயர் நிலைக் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ.கே. இராஜன் அவர்களும், உறுப்பினர் செயலாளராக இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப. அவர்களும், உறுப்பினர்களாக தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் சாந்தலிங்க அடிகளார், திருவரங்கம் நாராயண ஜீயர் சுவாமிகள், பிள்ளையார்பட்டி முனைவர் பிச்சை சிவாச்சாரியார் மற்றும் திருப்பரங்குன்றம் கே. சந்திரசேகர் பட்டர் ஆகியோரும் இடம் பெறுவார்கள்.

* * *

**சி**க்–குன்–குனியா வைரஸால் ஏற்படக்கூடிய நோயாகும். இந்நோய் ஏடிஸ் என்னும் ஒருவகை கொசுக்கள் கடிப்பதன் மூலம், ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனுக்கு பரவுகிறது.

இவ்வகைக் கொசுக்கள் பகல் நேரங்களில் மனிதர்களை கடிக்கும் தன்மை உடையவை. இவை வீட்டிலுள்ள நீர் தேக்கி வைக்கும் பொருட்களான சிமெண்ட் தொட்டி, பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் வீட்டைச் சுற்றியுள்ள டயர், உரல், பாட்டில் சிரட்டை போன்ற தூக்கி எறியப்பட்ட, தேவையற்ற பொருட்களில் தேங்கியிருக்கும் மழை நீரில் உற்பத்தியாகிறது.

இந்நோய் ஏற்படும்போது காய்ச்சலுடன் தலைவலி, உடல்வலி, மூட்டுவலி போன்ற அறிகுறிகள் ஏற்படும். 2 முதல் 5 நாட்களில் சிகிச்சைக்கு பின் காய்ச்சல் சரியாகிவிடும். சிலருக்கு காய்ச்சல் சரியானபின் கை, கால் மூட்டுவலி போன்ற அறிகுறிகள் ஒரு மாதம் முதல் சில மாதங்கள் வரை இருக்கக்கூடும். இந்நோயினால் இறப்பு ஏற்படுவது அரிது.

**இந்நோய்க்கு தடுப்பூசி கிடையாது**

★ ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 5 இலட்சத்திற்கு மேற்பட்டோர் டிசம்பர் 2005 முதல் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு பணிகளுக்காக தமிழ்நாட்டிலிருந்து இந்த மாநிலங்களுக்கு சென்று வருவதால் இந்நோய் தமிழகத்தில் பரவி வருகிறது.

★ இதுவரை தமிழகத்தில் 17 மாவட்டங்களில் 10,908 நபர்கள் இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.


**இக்காய்ச்சலினால் இறப்பு எதுவும் இல்லை**

# சிக் – குன் – குனியா காய்ச்சலை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள்

★ இதுவரை காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 229 நபர்களிடமிருந்து இரத்த மாதிரிகள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பரிசோதனைக்காக பூனாவில் உள்ள தேசிய வைரஸ் ஆய்வகத்திற்கு அனுப்பப் பட்டதில், 27 நபர்களுக்கு சிக்–குன்–குனியா வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இக்காய்ச்சல் சிக்–குன்–குனியா காய்ச்சல் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் கண்டறியப்பட்ட சந்தேகத்திற்குரிய சிக்–குன்–குனியா காய்ச்சல் நிலவரம்**

★ மார்ச் 2006இல் இருந்து சிக்–குன்–குனியா அறிகுறிகளைக் கொண்ட காய்ச்சல், எல்லை மாவட்டங்களான வேலூர், திருவள்ளூரிலும் காணப்பட்டு வருகிறது. தற்சமயம் திருப்பத்தூர், வேலூர், திருவள்ளூர், சைதாப்பேட்டை, திருச்சி, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, விருதுநகர், சிவகாசி, திண்டுக்கல்,



இராமநாதபுரம், சங்கரன்கோவில், திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, ஈரோடு, தாராபுரம், அறந்தாங்கி, நாமக்கல், கோவில்பட்டி போன்ற சுகாதார மாவட்டங்களைச் (17 மாவட்டங்கள்) சேர்ந்த 229 கிராமங்களிலும், தூத்துக்குடி, நாமக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய 4 நகராட்சி களிலும், சேலம் மாநகராட்சியிலும் பரவியுள்ளது.

★ ஆண், பெண் இருபாலரும் இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளைக் காட்டிலும் பெரியவர்களுக்கு அதிகமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சிக்–குன்–குனியா நோய் மேலும் பரவுவதை தடுப்பதற்காக சுகாதார துறையினரால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் :

**நோய் சிகிச்சை**

★ இது வைரஸ் நோய் என்பதால் குறிப்பிட்ட எந்த மருந்தும் பயன்தராதென்பதால் காய்ச்சல் மற்றும் மூட்டுவலிகளுக்கான மருந்துகள் மட்டும் தரப்படுகிறது.

★ நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவக் குழுக்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப் பட்டு காய்ச்சல், உடல் வலி மற்றும் மூட்டுவலிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து மருத்துவ முகாம்கள் இந்தப் பகுதிகளில் செயல்பட்டு வருகிறது.

★ உள்நோயாளி சிகிச்சைக்காக மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு இதுவரை சுமார் 312 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துள்ளார்கள். தேவையான மருந்துகள் அனைத்தும் இருப்பில் உள்ளன.

## கொசு ஒழிப்பு நடவடிக்கைகள்

**கொசுப் புழு உற்பத்தியை தடுத்தல்**

★ இந்நோயைப் பரப்பும் ஈடீஸ் எனப்படும் கொசுக்கள், நீர் தேங்கியுள்ள சிமெண்ட் தொட்டி, பிளாஸ்டிக் பொருட்கள், உடைந்த பாட்டில்கள், டயர்கள் மற்றும் உரல் போன்ற தேவையற்ற பொருட்களில் உற்பத்தியாகிறது.

★ சமுதாய ஒத்துழைப்புடன் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகாமல் அவற்றை அகற்றுவதும் மருந்து தெளிக்கும் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ தேவையான கொசுப் புழு ஒழிப்பு மருந்துகள் மாவட்டங்களில் போதுமான அளவு இருப்பில் உள்ளது.

★ கொசுக்களை அழிக்க மேலத்மையான், பைறைத்திரம் போன்ற மருந்துகள் புகை தெளிப்பான் கள் மூலம் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் தெளிக்கப்படுகிறது.


★ வீடுகளில் நீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரத்திற்கு ஒரு முறை காலியாக வைத்துக் கொள்ளவும் மற்றும் வீட்டை சுற்றியுள்ள தேவையற்ற நீர் தேங்கும் பொருட்களை அகற்றவும் சுகாதார கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கொசு உற்பத்தியாவது தடுக்கப்படுகிறது.

★ மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங் களுக்கும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

★ பணியில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தமிழ்நாட்டை 8 மண்டலங் களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு இணை இயக்குநர் பொறுப்பாக நியமிக்கப் பட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் காய்ச்சல் நிகழ்வுகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை திட்டமிடுதல், மருத்துவக் குழுக்கள் அமைத்தல் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியருடன் கலந்து நோய் பரவாமல் இருக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

★ மண்டல பூச்சியியல் வல்லுநர் குழு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொசுக்களை அழிக்க தடுப்பு நடவடிக்கைகளை முழு வீச்சில் செயல்படுத்தி வருகிறது.

★ பாதிக்கப்பட்ட 17 மாவட்டங்களிலும் 208 மருத்துவ குழுக்கள் மற்றும் 10,000க்கு மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்களும் சிகிச்சை, தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தீவிர கண்காணிப்பு பணியில் 24 மணி நேரமும் ஈடுபட்டு வருகின்றனர்.



★ நோய் பரவாத 12 மாவட்டங்களிலும் தடுப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## கண்காணிப்பு மேற்பார்வை

**வட்டார அளவில்**

★ வட்டார அளவில் வட்டார கண்காணிப்பு அலுவலர் (மருத்துவ அலுவலர்) அப்பகுதியில் ஏற்படும் காய்ச்சல் பற்றிய விவரங்களை வட்டார சுகாதார ஆய்வாளர் / சுகாதார ஆய்வாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், தன்னார்வ தொண்டர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் நகர் பகுதிகளில் உள்ள தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் இருந்து சேகரித்து ஆய்வறிக்கையை துணை இயக்குநருக்கு அளிப்பார். மேலும் தக்க சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கை களை ஏற்பாடு செய்து மருத்துவக் குழுவை பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாக அனுப்பி வைப்பார்.

★ கிராம அளவில் சுகாதாரப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று காய்ச்சல் கண்காணிப்பு பணி செய்து அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதோடு கொசுப் புழு உற்பத்தியாகும் நீர்தேக்கத்தை அழித்தும், தவிர்த்தும் பணி செய்து வருகின்றனர்.

**மாவட்ட அளவில்**

★ மாவட்ட அளவில் ஒரு துரித செயல்பாட்டுக் குழு (Rapid Response Team) துணை இயக்குநர், நலப்பணிகள், தலைமையாகக் கொண்டு இயங்கி வருகிறது. ஒரு மருத்துவ அலுவலர், மாவட்ட பூச்சியியல் அலுவலர், மண்டல பூச்சியியல் அலுவலர், பூச்சியியல் உதவியாளர், சுகாதார ஆய்வாளர், வட்டார நலக் கல்வியாளர் ஆகியோர் இக்குழுவில் அடங்குவர்.

★ இக்குழு நோய் பற்றிய தகவல் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரிடமிருந்து தெரிந்தவுடன் உடனடியாக காய்ச்சல் ஏற்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று தக்க நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு தக்க அறிவுரை வழங்கப்படுகிறது.

★ நோய் பற்றிய தகவலை துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் முதல் தகவல் அறிக்கையின் மூலமாக மாவட்ட ஆட்சியர், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத்துறை, இயக்குநர், ஊரக மற்றும் மருத்துவப் பணிகள் அவர்களுக்கு தெரிவிப்பார்.

**மாநில அளவில்**

★ இயக்குநரகத்தில் 24 மணி நேர நோய் கட்டுப்பாட்டு அறை (Control Room) அமைக்கப்பட்டு காய்ச்சல் பற்றிய அறிக்கைகளை தினமும் சுகாதார மாவட்டங்களிலிருந்து பெற்று, ஆய்வு செய்து தக்க அறிவுரை அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் அதன் அறிக்கையை அரசுக்கு மற்றும் இயக்குநர் பூச்சிகளால் பரவக்கூடிய நோய் கட்டுப்பாட்டு திட்டம், புதுடெல்லி ஆகியவர்களுக்கு தினமும் அனுப்பப்படுகிறது.

★ இயக்குநரகத்திலிருந்து மண்டல அலுவலர்கள் (Zonal Officers) காய்ச்சல் ஏற்பட்டுள்ள மாவட்டங்கள் மற்றும் அனைத்து மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சுகாதார மாவட்டங்களில் ஏற்படும் காய்ச்சல் நிகழ்வுகள் தொடர்பாக கட்டுப்பாடுப் பணி திட்டமிடுதல், மருத்துவக் குழு அமைத்தல், நோய் தடுப்புப் பணி ஆகியவற்றை மாவட்ட ஆட்சியரோடு கலந்து ஆலோசித்து இந்நோய் மேலும் பரவாமல் இருக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

★ நோய் பற்றிய குறிப்புகள், தடுப்பு முறை, காய்ச்சலை திறம்பட கட்டுப்படுத்தவும், நிலைமையை எதிர்கொள்ளவும் தக்க ஆலோசனை துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களுக்கு, மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களுக்கு அவ்வப்போது அனுப்பப்பட்டு வருகிறது.

★ மாவட்ட ஆட்சியர் தலைமையில் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் மூலமாக மருத்துவத் துறை, கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மகளிர் சுயஉதவி குழு திட்ட அலுவலர், ஊட்டச்சத்து திட்ட அலுவலர், செய்தித் துறை, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கு சிக்–குன்–குனியா நோய் பற்றிய விளக்கமும், அதனைக் கட்டுப்படுத்தும் முறையையும் விளக்க படத்துடன் கூடிய விரிவான நலக்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்துறையைச் சார்ந்தவர்களை இந்நோயைக் கட்டுப்படுத்தும் முறைகளை தாங்களே கையாளவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

★ கொசு உற்பத்தியாகும் நீர் தேக்கி வைக்கும் பொருட்களான சிமெண்ட் தொட்டி, பிளாஸ்டிக் பொருட்களில் கொசு உற்பத்தியாகாமலும் மழை நீர் தேங்கக் கூடிய வீட்டைச் சுற்றியுள்ள டயர், உரல், பாட்டில் சிரட்டை போன்ற தூக்கி எறியப்பட்ட தேவையற்ற பொருட்களை அழிப்பதன் மூலமாகவும் இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்தி தீவிர பிரச்சாரம் – செய்தித்தாள், கையேடு, ஒலிபெருக்கி, தண்டோரா மூலமாக கிராம அளவில் நலக் கல்வி அளிக்கப்படுகிறது.

*– பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை*

# உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி

நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி, இவ்வாண்டு (2006) ஜெர்மனியில் நடைபெற்று வருகிறது. உலகம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான மக்கள் இந்தப் போட்டிகளை தொலைக்காட்சிகளில் கண்டு மகிழ்கின்றனர். பல்வேறு நாடுகளிலிருந்து கால்பந்து ரசிகர்கள் ஜெர்மன் நாட்டில் குவிந்துள்ளனர். அவர்கள் தங்களுக்குப் பிடித்தமான கால்பந்துப் போட்டிகளை நேரடியாகக் கண்டு களிக்கின்றனர்.

விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் நிறைந்த கால்பந்து விளையாட்டு 2 அல்லது 3 ஆம் நூற்றாண்டில் சீனாவில் உருவாகி யிருக்கலாம் என்று கருதப்படுகிறது. பின்னர் படிப்படியாக உலகநாடுகள் பலவற்றிலும் பரவி இங்கிலாந்து நாட்டில் வளர்ந்துள்ளது. முதலாவது கால்பந்துச் சங்கம் 1863ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாக வரலாற்றுத் தகவல் கூறுகின்றன. உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியை நடத்தலாம் என்ற எண்ணம் 1904 ஆம் ஆண்டு, பிரான்சு நாட்டின் வீல்ஸ் ரிம்மட் மற்றும் ஹன்ரி டெலானி ஆகியோருக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக அதே ஆண்டில் பன்னாட்டு கால்பந்துக் கூட்டமைப்பு (FIFA - Federation of International Foot Ball Association) உருவானது. இந்த அமைப்பின் சார்பில் முதலாவது உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி 1930இல் உருகுவே நாட்டில் நடத்தப்பட்டது. அதாவது அமைப்பு உருவாக்கப்பட்டு 26 ஆண்டுகளுக்குப் பிறகு உலக அளவிலான கால்பந்துப் போட்டி நடத்தப்பட்டுள்ளது.



1930இல் தொடங்கி நான்காண்டுகளுக்கு ஒரு முறை உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நடந்து வந்துள்ளது. இடையில் 1938–க்குப் பிறகு 1950 வரை போட்டி நடைபெறவில்லை. 1950க்குப் பிறகு தற்போது வரை நான்காண்டுகளுக்கு ஒரு முறை உலகக்கோப்பை கால்பந்துப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. 1930 முதல் 2002 வரை 17 முறை நடைபெற்றுள்ள இப்போட்டிகளில் இதுவரை 11 நாடுகள் உலகக் கோப்பையை வென்றுள்ளன. இதில் அதிகபட்சமாக தற்போதைய சாம்பியன் பிரேசில், ஐந்து முறை கோப்பையை வென்றுள்ளது. அதற்கடுத்தபடியாக இத்தாலி, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் தலா 3 முறையும், உருகுவே, அர்ஜெண்டினா ஆகிய நாடுகள் தலா 2 முறையும், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தலா ஒரு முறையும் உலகக் கோப்பையை வென்றுள்ளன.

தற்போது நடந்து கொண்டிருப்பது 18 ஆவது உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியாகும். இப் போட்டியில் உலக அளவில் 32 முன்னணி அணிகள் களத்தில் விளையாடி வருகின்றன. ஒரு பிரிவுக்கு நான்கு அணிகள் வீதம் 8 பிரிவுகளாக இவைகள் பிரிக்கப்பட்டு போட்டிகளில்




பங்கெடுத்துள்ளன. லீக் சுற்றின் முடிவில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அடுத்த சுற்றுக்குச் செல்லும். கால்இறுதி, அரைஇறுதி, இறுதி என மொத்தம் 63 போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தப் போட்டிகள் 12 இடங்களில் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் (ஜூன்) 9ஆம் நாள் ஜெர்மனி நாட்டின் மியூனிச் நகரில் தொடக்கவிழா கோலாகலமாக நடந்தது. தொடர்ந்து தினந்தோறும் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஜூலை 9 ஆம் நாள் ஜெர்மனியின் பெர்லின் நகரில் இறுதிப்போட்டி நடைபெற உள்ளது.





கால்பந்துப் போட்டியில் விளையாடும் ஒவ்வொரு அணியிலும் 11 பேர்கள் இருப்பர். 45 நிமிடம் ஆட்டம். பின் 10 நிமிடம் இடைவேளை. தொடர்ந்து 45 நிமிடம் ஆட்டம் என விளையாடப்படும். போட்டி நடக்கும் 1½ மணி நேரமும் பார்வையாளர்களின் கவனம் வேறு எந்தப் பக்கமும் செல்லாமல் விளையாடப் படுவதுதான் கால்பந்தாட்டத்தின் சிறப்பம்சமாகும்.



பிரேசில் நாட்டு வீரர்கள் பீலே, ரொனால்டோ, ரொனால்டினோ அர்ஜெண்டினாவின் மாரடோனா, ஹாலந்தின் ஏரிஹான், மேற்கு ஜெர்மனியின் பெக்கன்பர், இங்கிலாந்தின் பாபி கார்ல்டன் ஆகிய கால்பந்து விளையாட்டு வீரர்கள், உலக கால்பந்து ரசிகர்கள் மனதை வெகுவாகக் கவர்ந்தவர்கள்.

உலகில் தோன்றிய பழம் பெரும் விளையாட்டு கால்பந்து ஆகும். இன்றளவும் உலக மக்களால் வெகுவாக ரசிக்கப்பட்டும், வரவேற்கப்பட்டும் வரும் இந்த விளையாட்டின் உலகப் போட்டி ஒரு உற்சாகத் திருவிழாவாகவே ஜெர்மனியில் நடைபெற்று வருகிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் 18 ஆவது உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் வெல்லப் போவது யார்? இன்னும் சில நாட்களில் தெரிந்துவிடும்

### உலகப் கோப்பையை இதுவரை வென்றுள்ள நாடுகள்

| ஆண்டு | அணி |
|---|---|
| 1930 | – உருகுவே |
| 1934 | – இத்தாலி |
| 1938 | – இத்தாலி |
| 1950 | – உருகுவே |
| 1954 | – மே. ஜெர்மனி |
| 1958 | – பிரேசில் |
| 1962 | – பிரேசில் |
| 1966 | – இங்கிலாந்து |
| 1970 | – பிரேசில் |
| 1974 | – மே. ஜெர்மனி |
| 1978 | – அர்ஜெண்டினா |
| 1982 | – இத்தாலி |
| 1986 | – அர்ஜெண்டினா |
| 1990 | – மே. ஜெர்மனி |
| 1994 | – பிரேசில் |
| 1998 | – பிரான்ஸ் |
| 2002 | – பிரேசில் |

### உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் பங்குபெறும் 32 அணிகள்

1. ஜப்பான்
2. தென்கொரியா
3. ஈரான்
4. சவுதி அரேபியா
5. மெக்சிகோ
6. அமெரிக்கா
7. கோஸ்டாரிகா
8. டிரினிடாட்
9. அங்கோலா
10. சயானா
11. அய்வரி கோஸ்ட்
12. டோகா
13. துனிசியா
14. அர்ஜெண்டினா
15. பிரேசில்
16. பராகுவே
17. ஈக்வேடார்
18. ஜெர்மனி
19. இங்கிலாந்து
20. பிரான்ஸ்
21. இத்தாலி
22. குரோஷியா
23. செக் குடியரசு
24. நெதர்லாந்து
25. போர்ச்சுகல்
26. போலந்து
27. செர்பியா
28. ஸ்பெயின்
29. சுவீடன்
30. சுவிட்சர்லாந்து
31. உக்ரைன்
32. ஆஸ்திரேலியா ★

# மக்கள் நல அரசின் மின்னல்வேகப் பணிகள்

தஞ்சாவூர் மாவட்டம், குடந்தை வட்டம், கொரநாட்டுக் கருப்பூர், வாய்க்காலில், தமிழக அரசின் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் பணிகள்



பணி தொடங்கும் முன்...



பணி நடைபெற்றபொழுது...



பணி முடிவுற்றபின்...

தமிழரசு
R.N.I. No.21446/70 - Regn. No.TN/ARD/48/06-0
TN/PMG(CCR) WPP - 518/06-08

# மக்கள் நல அரசின் மின்னல்வேகப் பணிகள்




பணி தொடங்கும் முன்...



பணி நடைபெற்றபொழுது...



பணி முடிவுற்றபின்...